நிகரி
NIHARI
"மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ்வமே" - பாரதி

Issue No - 07, 10th March 2002


வாரவெளியீடு
இதழ் 07 – மார்ச் 10, 2002
விலை ரூபா 12/=

**ஒப்புவரோ அம்மா உதை?**

*போரிட்டு சமாதானம் காணப் புறப்பட்டுப்*
*பாரெட்டும் சென்று பறையறைந்தோர்-போர்விட்டு*
*பேசிச் சமாதானம் பெறுவமென்றால் ஒப்புவரோ*
*கூசாதோ அவர்வாய்தான் கொல்?*

**– ஈழமோகம்**

# சமாதானத்தை எதிர்த்து இனவாதிகள் போர்க்கொடி கிளர்ந்தெழும் மக்கள்!



புகைப்படம்: அஜித் செனவிரத்ன

சமாதானத்திற்கான பிரஜைகள் அமைப்பின் சார்பில் வியாழன் மாலை கோட்டை புகையிரத நிலைய முன்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 'சமாதான விளக்கேற்றுவோம்" நிகழ்வு, சகல மதத் தலைவர்களதும் முன்னிலையில் யுத்த நிறுத்தத்தை வாழ்த்துவதால் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பெருந்திரளான மக்கள் கையில் மெழுகுவர்த்தி ஏந்தி நின்று சமாதானத்துக்கான தமது ஆதரவையும் உறுதியையும் வெளிப்படுத்தினர்.

வடக்கு கிழக்கில் அண்மையில் நடந்து முடிந்த பொங்கு தமிழ் எழுச்சி விழாக்களில் வரலாறு காணாத அளவில் திரண்டு வந்து கலந்துகொண்ட மக்கள் சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னேறுவதை உறுதி செய்யும் கோரிக்கைகளை முன்வைத்தனர், அதேபோல,

சமாதானத்தின் எதிரிகளது மனங்களை இருளச் செய்யும் இந்த தீபமேற்றும் நிகழ்வும் நாட்டின் விடிவுக்கான ஆரம்ப ஒளிச் சமிக்ஞையாக அமைய வேண்டும் என்பதே பலரின் எதிர்பார்ப்புமாகும். யாழ்ப்பாணத்திலும் சமாதான விளக்கேற்றுவோம் நிகழ்வு இல்லங்கள் தோறும் விளக்கேற்றும் நிகழ்வாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பெருமளவில் மக்கள் இணைந்து நின்று செயற்பட்ட இந்த சமாதானத்திற்கு ஆதரவான நிகழ்வுகள், சமாதானத்திற்கான மக்களின் ஆர்வத்தையும் துடிப்பையும் தெரிவிப்பதாக அமைந்திருந்த சமாதான எதிரிகளை வெட்கித் தலைகுனிய வைத்து, வெற்றிக்கு வழிவகுக்குமா?

(வழி வகுக்க வேண்டும் என்பதே அனைத்து மக்களதும் அவா!)

இதேவேளை, உன்படிக்கையை எதிர்த்து சிங்கள இனவாத கட்சிகளும், அமைப்புகளும் தொடராக கண்டனங்களை பல்வேறு வகைகளில் நடாத்தி வருகின்றன. தமிழர்கள் தமது தாயகப்பரப்பின் பிரதான இடங்களில் முக்கியமான மூன்று கோரிக்கைகளை முன்வைத்து பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வினை உணர்வுபூர்வமகா அனுஷ்டித்து வருவது பற்றி பல்வேறு தரப்பினாலும் பல்வேறு விளக்கங்கள் கூறப்பபட்டு வருகின்றது. இவ்வேளை இனவாதத்தின் இன்னொரு வடிவம் 'சிங்கள மீள்எழுச்சி" எனும் பெயரில் வேர்விட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சிங்கள மீள்எழுச்சி அமைப்பினர் கொழும்பிலும் நுவரெலியாவிலும் பொங்குதமிழ் நிகழ்வு இடம்பெற உள்ளதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கின்றனர். அவ்வாறு பொங்குதமிழ் நிகழ்வு இடம்பெறும் தருணத்தில் தாமும் அப்பகுதியில் சிங்கள மக்களை கூட்டி சிங்கள மீள்எழுச்சி எனும் நிகழ்வினை கொண்டாட தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அரசுகளின் ஆட்சிபீடத்தில் தமிழ்மக்களைவிட சிங்கள மக்களளே அனைத்து வழிகளிலும் அடக்கப்பட்டுள்ளார்கள் என இவர்கள் இதற்கு காரணம் வேறு கூறுகிறார்கள். இறுதிவரை இவ்வமைப்பும், இதன் செயற்பாடுகளும் இரகசியமாகவே உள்ளது. சிஹல உருமயவின் ஆரம்பகாலமும் இப்படியான நிலையிலேயே இருந்தது நினைவு கூரத்தக்கது. சிங்கள மக்கள் மீதான அடக்குமுறைக்கு எதிரானவர்களாக காட்டும் இவர்கள், இவ்வளவு காலமும் ஏன் எதிர்ப்புத் தெரிவிக்க முன்வரவில்லை? தற்போதைய எதிர்ப்பும் ஏன் பொங்கு தமிழ் இடம்பெறும் நாளில் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டும்? தற்போது இடம்பெற்றுவரும் சமாதான தீபம் ஏற்றும் நிகழ்வுகள் இருளை நீக்கி ஒளிதரும் என மக்கள் எதிர்பார்க்கின்ற வேளை, அதை முறியடிக்க இனவாதிகள் வகுத்துள்ள புதிய வியூகம் இது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

**மார்ச் – 08**
**சர்வதேச பெண்கள் தினம்**






**விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழினியுடனான நேர்காணல்**

3

"எங்களுடைய மண்ணிலிருந்து இடம் பெயர்ந்து எத்தனையோ சகோதரிகள் உலகமெல்லாம் வாழ்ந்து வருகின்றனர். நாளாந்தம் அவர்கள் பல இன்னல்களைச் சந்திக்கின்றனர். ஆனால் இந்த இன்னல்களில் இருந்து அவர்கள் மீள வேண்டுமாயின் அவர்கள் தங்களைத் தாங்களே வளர்த்துக் கொள்ள வேண்டும். தங்களுடைய வாழ்க்கையை தாம் தீர்மானித்தவாறு வாழ்வதற்கான ஆளுமையைப் பெற வேண்டும்."

# தடை அகற்றல்: சமூக விரோதிகளுக்கு வாய்ப்பு!



விடுதலைப்புலிகள் அரசு நல்லிணக்கத் தோற்றப்பாட்டுக்குப் பிறகு தலைநகரில் மாத்திரம் தான் சோதனைச் சாவடிக்ள செயலிழந்துள்ளன போல் தெரிகிறது. வடக்கு கிழக்கு நகரங்களில் அனேகமான சோதனைச் சாவடிகள் அகற்றப்படாமல் இயங்கவது பொலவும் இயங்காதிருப்பது பொலவும் செயற்பட்டுப் பொது மக்களின் எரிச்சலைக் கொட்டிக் கொள்கின்றன.

திருகோணமலை நகரத்தின் சோதனைச்சாவடிகள் பல இன்னமும் அப்படியே தான் இருக்கின்றன. பொலிஸார் பொதுமக்களைச் சோதனை செய்கிறார்களா அல்லது இல்லையா என்று புரியாத நிலையில் அநேகமான மக்கள் சோதனைச் சாவடிகளில் வழமைபோல இறங்கி நடந்து மரியாதை செலுத்தி விட்டே செல்கிறார்கள். சைக்கிளோட்டிகளும் பாதசாரிகளும் நடந்து செல்வதற்கான அடைப்புக்களுக்கூடாகவே செல்ல வேண்டியிருக்கிறது. அவ்வாறு பொது மக்கள் நடந்து செல்லும் போது பொலிஸார் அவர்களைக் கண்டு கொள்வதில்லை.

ஒரு சில தைரியசாலிகள் இச்சாவடிகளில் 'சல்யூட்' பண்ணிச் செல்ல விரும்பாமல் சைக்கிளில் ஓடிச் செல்வதுமுண்டு. பொலிஸார் இறங்கச் சொன்னால் இறங்க மறுக்கும் தைரியமும், முறைத்துப் பார்த்தால் விட்டக் கொடுக்காது நிற்கும் போக்கும் உள்ளவர்களுக்கு இது சாத்தியப்படலாம். ஆனால் படைத்தரப்பாருடன் 'கதைபேச்சு' வைத்துக் கொள்ள விரும்பாத சாதாரண பிரஜைகளுக்கோஇது சாத்தியமாவதில்லை. பொலிஸாரின் முகஇறுக்கத்தைப் பார்த்தே இறங்கி நடந்து செல்கிறார்கள். இறங்கிப் போக முடியாதா என்று அடாத்தாகக் கேட்டு விடுவார்களோ என்ற பயம் அவர்களுக்கு.

சிவன்கோவிலடி, லிங்கநகர் சந்தி போன்ற இடங்களில் இந்த இறுக்கம் காணப்படுகின்றது.

பொலிஸ்நிலையம் தீர்க்கமான உத்தரவுகளைப் பிறப்பிக்காத வரையில் வம்புதும்புக்குப் போகாத பிரசைகள் பொலிஸாருக்கு மரியாதை செலுத்துவதும், மரியாதை செலுத்தும் பிரசைகளிடமிருந்து கிடைப்பதையாவது பெற்றுக் கொள்வதும் பழக்கதோஷத்தின் தொடராகவெ இருக்கப் போகிறது.

இதேபோன்று திருகோணமலை நகரத்தையும் தென்புற நகரங்களையும் இணைக்கும் கண்டி நெடுஞ்சாலையில் 84வது மைல் கல்லிலுள்ள கோதனைச்சாவடியில் பயணிகளில் பெயர், விலாசம், செல்லுமிடம் போன்ற தகவல்கள் தொடர்ந்தும் பதியப்பட்டே வருகின்றன. இது பயணிகளுக்கு மாத்திரமல்ல பொலிஸாருக்கும் சிரமமான பணி தான். ஆனாலும் பழக்கதோஷத்தால் தொடரப்படுகிறது.

கடந்தவாரம் பிரயாணி ஒருவர் மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்தார். மன்னம்பிட்டிச்சோதனைச்சாவடியில் பொலிஸார் வழமைபோல பைகளைத் திறந்து ஒவ்வொரு பொருட்களாக எடுத்து உதறிக் கொண்டிருந்தனர். அப்பிரயாணிக்கு அருகில் இருந்து சட்டத்தரணிக்கு மனந்தாளவில்லை. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் உடன்பாடிக்கை கைச்சாத்திட்டபிறகும் ஏன் இப்படிக் கடுமையாகச் சோதிக்கிறீர்கள் என்று கேட்டுவிட்டார். பொலிஸ் அதிகாரியோ சிரித்து விட்டு சற்றுத் தள்ளி தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு பேரைக் கைகாட்டி அழைத்தார். "நீங்களே கேளுங்கள். இவர்கள் என்ன கடத்தி வந்தார்கள் என்று" கூறிவிட்டுத் தன்பணியைத் தொடர்ந்தார். ஒருவர் கஞ்சாவும் மற்றவர் அபினும் கடத்தி வந்ததாகக் கூறினார்கள். பொலிஸ்காரர் சிரித்துக் கொண்டே கூறினார். 'சோதனைத் தளர்த்தல்களால் சமூகவிரோதிகள் பலன்பெறுகிறார்கள். அரசு-புலிகள் அமைதி பேணலால் மக்கள் பலன்பெறுகிறார்களே இல்லையோ இவர்கள் இலாபமடைந்து விடுவார்கள். என்றார்.

உண்மைதான் இப்போது நகரங்களில் புலிகளின் வருகையை மகிழ்ச்சியுடன் வரவேற்பதாகக்கூறி முன்னின்று பாவனை செய்பவர்களில் அனேகமானோர் சமூகவிரோத செயல்களாலும் ஊழல்களாலும், மோசடிகளாலும் மக்கள் மத்தியில் அம்பலமானவர்களாகவே இருக்கிறார்கள். போர்ச்சூழலை மாத்திரமல்ல அமைதிச் சூழலையும் தங்கள் 'வளர்ச்சிக்காகப்' பயன்படுத்துபவர்கள். மக்கள் தான் விழிப்பாக இருக்க வேண்டும். புலிகளும் தான்.

— விவேகி

# நாயை அவமதிக்கலாமா?

முன்னாள் அமைச்சர் கதிர்காமருக்கு மீண்டும் ஒரு புதிய பதவி கிடைத்துள்ளது.

ஜனாதிபதியின் உடன்படிக்கை தொடர்பான நிலைப்பாடுகளை ஊர் ஊராகச் சென்று விளக்குவது தான் அந்தப் புதிய பதவியின் பணி.

யார் யாருக்கு எதைக் கொடுத்தால் அவர்கள் அதைச் சரியாகச் செய்வார்கள் என்பதை ஒரு தலைவர் அறிந்து வைத்திருப்பது, தலைமைத்துவத்தின் வெற்றிக்கு மிக முக்கியமான ஒரு விடயம். சிறப்பான முகாமைத்துவத்தின் அத்திவாரமும் அதுதான்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இது ஒரு போதும் கைகூடவில்லை. எல்லாவற்றையுமே தன்னால் செய்துவிட முடியும் என்று நம்பி, எதையுமே செய்லாமல் காலத்தைக் கடத்துபவர் அவர்.

ஆனால் ஒரு விடயத்தில் மட்டும் அவர் சரியாக நடந்து கொள்வார். தன்னை நியாயப் படுத்த அவர் எப்போதும் கதிர்காமரையே நியமித்து வந்திருக்கிறார்.

கதிர்காமரது தொழிலும் அதுதான். நீதிமன்றச் சட்டத்தரணிகள் தமது கருத்தைத் தெரிவிப்பதைவிட தமது கட்சிக்காரரை நியாயப்படுத்துவதையே தொழிலாகக் கொண்டவர்கள். பெரும்பாலான நேரங்களில் அவர்கள் தமக்கென ஒரு கருத்தைக் கொண்டிருப்பது அவசியமில்லை என்றும் கருதுவார்கள். கதிர்காமர் ஒரு திறமையான சட்டத்தரணி என்று பேசப்படுபவர்.

அவர் தனது கட்சிக்காரருக்காக பேசப் புறப்பட்டிருக்கிறார் இப்போது.

பதவிக்காக எதையும் செய்யும் 'அப்புக்காத்துக் குணம்". அவருக்கு இரத்தத்தில் ஊறிப் போய் இருக்கிறது. இப்போது உடன்படிக்கையையும் சமாதான முயற்சியையும் குழப்புவதில் தனது திறமையை பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்.

அவரது பணி இந்தியாவில் தொடங்கியிருக்கிறது.

'நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு"? என்று ஒரு முறை பாரதி சொன்னான்.

கதிர்காமருக்கு இப்படிச் சொல்வது நாயை அவமதிப்பதாகும் என்று எமக்குப் படுகிறது.

உங்களுக்கு?

— கவி



## அந்தளவுக்கு பாராட்டலாம்

உடன்படிக்கையை எதிர்த்து விமர்சிப்பவர்கள் முட்டையில் மயிர் பிடுங்கும் வேலையையே செய்கிறார்கள்" என்று கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் சிவசிதம்பரம் பாராளுமன்றத்தில்.

எதிர்ப்பவர்கள் முட்டையில் மயிர் பிடுங்குகிறார்களோ இல்லையோ, தமது தலைகளிலிருக்கும் மயிர்களைப் பிடுங்கிக் கொண்டு எப்படி யெல்லாம் இதிலே குறைபிடிக்கலாம் என்று மாய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதி சந்திரிகா முதல் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ வரை, மக்கள் விடுதலை முன்னணி முதல் சிஹல உறுமய வரை அனைவரும் செய்து கொண்டிருப்பது இதைத்தான்.

உடன்படிக்கை தயாரிக்கப்பட்ட விதம் பற்றி ஜனாதிபதிக்கு அறிவிக்காமை, அதிலுள்ள விடயங்கள் நாட்டின் இறைமைக்குப் பங்கம் விளைவிக்கின்றன, நோர்வே மத்தியஸ்தம் வகிப்பது ஆபத்தானது, அவர்கள் எதேச்சதிகார நிலைக்கு போய் விடுவார்கள்... என்பன போன்ற காரணங்களை அடுக்கி வருகிறார்கள் இந்த எதிர்ப்பாளர்கள்.

ஜனாதிபதி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய காலத்தில் என்ன நடந்தது என்று சகலருக்கும் தெரியும். பிரபாகரனுடன் அவர் நடாத்திய கடிதப் போக்குவரத்துக்கள் யுத்தம் வெடித்து நீண்ட காலம் வரை வெளியிடப்படாமலே இருந்தன. அவர் என்ன பேசினார், என்ன அடிப்படையில் பேச்சுவார்த்தையை தொடங்கினார் என்பது அவரது சொந்த அமைச்சரவைக்கே அப்போது தெரிந்திருக்கவில்லை. குறைந்த பட்சம் தனது கட்சியைச் சேர்ந்த பிரதமருக்குக் கூட அவர் பலவிடயங்களைத் தெரிவித்திருக்கவில்லை.

பேச்சுவார்த்தைக்காக நோர்வே சார்பில் சொல்ஹெய்ம் வடக்குக்கு போய்வந்த விடயம் பற்றி அன்றைய பிரதமர் எதுவும் அறிந்திருக்கவில்லை என்பதை அவரே ஒப்புக் கொண்டிருந்தார்.

ஆனால், இன்றைய முயற்சிகளின் விபரங்கள் பத்திரிகைகளில் கூட வெளிவந்து கொண்டிருந்தன. ஆயினும் ஜனாதிபதிக்கு தெரியாமலே எல்லாம் நடந்ததாக இப்போ சொல்கிறார்கள். 'குரு செய்தால் குற்றமில்லை" என்பார்களே அதுபோல.

எப்படியாவது மக்கள் அதை எதிர்த்து, அதை வேண்டாம் என்று சொல்லும் நிலையை உருவாக்கி விடவேண்டும் என்பதில் அக்கறையாக இருக்கிறார்கள் அவர்கள்.

சமாதானத்திற்கு தாம் எதிரிகள் அல்ல என்று சொன்னபடியே இது நடந்து கொண்டிருக்கிறது.

ஒன்றை மட்டும் இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம், தாம் புலிகளுடனான சமாதானத்திற்கு எதிர் என்று சொல்லிக் கொண்டு எதையும் செய்ய முடியாது என்பதை அவர்களே விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தளவுக்கு அவர்கள் புத்தியைப் பாராட்டலாம்!

## மீண்டும் ஹெலியில் அனுருத்தர்!

மீண்டும் ஒருமுறை ஹெலியில் வந்திறங்கி நீதிமன்றம் போயிருக்கிறார் ரத்வத்தை கடந்த 4ம் திகதி அன்று!

இம்முறை தமக்கு நீதிமன்றத்தில் பிணையிலாவது வெளியே செல்ல வாய்ப்பிருக்கும் என்ற நம்பிக்கையுடன்.

ஆனால், பாவம் அவருக்கு அது வாய்க்கவில்லை. இன்னொரு 14 நாள் மீண்டும் தடுப்புக் காவலில் தள்ளப்பட்டுள்ளார்.

அவரை விடுதலை செய்யக் கோரி நீதிமன்றத்திற்கு முன் ஒரு ஆர்ப்பாட்டமும் நடாத்தப்பட்டிருக்கிறது. ஆனால் பரிதாபம். ஒரு இரு நூறு பேரைக் கூட அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வைக்க அவருக்கோ அவரது கட்சிக்கோ முடியவில்லை.

உள்ளுராட்சி தேர்தல் பிரச்சாரத்திற் கூட, இதை விட பெரியளவு கூட்டம் ஒவ்வொரு வேட்பாளருடனும் போய்வருகிறது.

முன்னாள் அமைச்சருக்கு, அதுவும் நாட்டைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கப் புறப்பட்ட அமைச்சருக்கு ஆக இவ்வளவு பேர்தான் வந்திருக்கிறார்கள்.

நீதிமன்றத் தீர்ப்பு முக்கியமில்லை. மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள இந்த ஒரு சம்பவமே நல்ல சான்று"

இம்முறை நீதிமன்றின் போது. இவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படுவதாக கேள்வி எழுப்பப் பட்டிருக்கிறது!

நல்ல சகுனம் இது

முன்னாள் அமைச்சரின் இந்த நிலைமை இன்றைய அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடமாக அமைந்தால் சரி

ஆனால் துரதிஷ்டம் என்ன வென்றால் எமது அரசியல்வாதிகள் ஒருபோதும் பாடம் கற்பதில்லையே. மற்றவர்களுக்கு 'பாடம் புகட்ட" திட்டம் தீட்டுவதில் நேரத்தைச் செலவு செய்துவிடுவதால் அவர்களுக்கு அதற்கு நேரம் இருப்பதில்லை.

ஆயினும் இன்னொரு ஆட்சி மாற்றத்தின் போது அவர்கள் பழையபடி, சுத்தமானவர்களாக மாறி விடுவார்கள். மக்களுக்கும் மறதி அதிகம், அல்லது எதையும் மன்னிக்கிற தாராள மனசு அவர்களுக்கு.

அனுருத்த என்ன எந்த அயோக்கியர்களும், அரசியல் என்று வந்துவிட்டால், ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை எப்படியோ புனிதமடைந்து விடுகிறார்கள்.

மக்கள் தமது மறதியை கொஞ்சம் மூட்டை கட்டிவைத்து விட்டு கையிலே சவுக்கை எடுக்க எப்போ துணியப் போகிறார்களோ?

அதுவரை அரசியல்வாதிகளுக்கு இம்மாதிரி நிலைமை எல்லாம், சும்மா தடக்கி விழுந்தது போலத்தான். மீண்டும் எழுந்து மண்ணத் தட்டிவிட்டு நடக்கத் தொடங்கி விடுவார்கள்.

**மார்ச் – 08**
**சர்வதேச பெண்கள் தினம்**

# எமது தேசிய விடுதலை சமூக விடுதலையையும் உள்ளடக்கியதே!

விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் தமிழினியிடம் விடுதலைப் போராட்டம், மகளிருடைய பங்களிப்பு, விடுதலைப் போராட்ட அனுபவங்கள் பற்றிக் கேட்டபோது அவரளித்த பதில்கள் இவை.

நேர்கண்டவர் :
- கனகரவி



***பெண் புலிகளின் தோற்றமும், அவர்களின் செயற்பாடுகளும் பற்றிக் கூறுவீர்களா?***

ஒரு தேசத்தினுடைய முழுமையான விடுதலையை நாங்கள் கருத்திலெடுக்கும் போது அந்தத் தேசத்தில் வாழும் பெண்கள் அனைவரும் அதில் பங்களிப்புச் செய்ய வேண்டிய தேவையிருக்கின்றது. ஏனென்றால் ஒரு சமூகத்தை பொறுத்தவரைக்கும் அந்தச் சமூகத்தில் பெண்ணும் முக்கிய பங்கு வகிக்கின்றாள். தேசம் என்று சொல்லும் போது அந்தத் தேசத்தில் பெண்களின் பங்கு முக்கியமானது. ஆகவே நாங்கள் தேசவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் போது அந்தத் தேசத்தில் வாழுகின்ற பெண்கள் தங்களுடைய தேச விடுதலைக்காக தாங்களும் இணைந்து போராட வேண்டிய தேவை நிச்சயமாக இருக்கின்றது. அந்த வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண் போராளிகள் இணைந்து போராடிக் கொண்டுள்ளனர். இன்று அனைத்துத் துறைகளிலும் பெண் போராளிகள் செயற்படுகின்றனர்.

***பெண் போராளிகளின் களமுனைச் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கிறது?***

எங்களுடைய சமூகத்தைப் பொறுத்தவரைக்கும் பெண்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாகவே கணிக்கப்பட்டு வந்துள்ளனர். விடுதலைப் போராட்டத்தில் முதல் முதலாக பெண்கள் உள்வாங்கப்படும் போது அதை சமூகம் ஒரு இயல்பான நடத்தையாக ஏற்றுக் கொள்வதில் பல சிக்கல்கள் இருந்தன.

ஆனால், தேசத்தின் விடுதலைக்காக பெண்கள் ஆரம்பத்தில் விடுதலைப் போராட்டத்தில் இணைவதை ஏற்றுக் கொள்ளாத பார்வை ஒன்று ஆதிக்கம் செலுத்தினாலும், காலப் போக்கில் இதை இயல்பான விடயமாய் பார்க்குமளவிற்கு பார்வை மாறி வந்தது. இப்படி பார்வை மாறி வருவதற்குக் காரணம், விடுதலைப் போராட்டத்தில் பெண் போராளிகள் இணைந்து கொண்டு மிகப் பெரிய சாதனைகளைச் செய்ததும் அதற்காக கடுமையான உழைப்பைச் செலுத்தியதும் தான். இவ்வாறு தங்களாலும் சாதிக்க முடியும் என்பதை செயலில் காட்டியதால் தான் சமூகத்தால் ஏற்றுக் கொள்ள முடியுமாக இருந்தது. ஆகவே பெண் போராளிகளின் களமுனைச் செயற்பாடுகள் முன்னேற்றகரமாக வெற்றியுடன் தொடர்ந்து வருவதாகவே கூறமுடியும்..

***இன்றும் பெண்கள் தொடர்பாக பழமைவாதச் சிந்தனை நிலவும் போக்கே இருக்கிறது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று நால்வகைக் குணங்கள் பற்றிய பேச்சு ஓய்வதாயில்லை. இதற்குள்ளிருந்து பெண்கள் எவ்வாறு எழுச்சி கொள்வது?***

பெண்கள் தொடர்பான விசயத்தில் சமூகம் பலபடிகளைத் தாண்டி முன்னுக்குப் போகவேண்டி உள்ளது என்பது உண்மை தான். ஆனால் விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் இணைந்து கொண்டதால் பெண்களால் எதுவும் முடியும் என்ற கருத்துருவாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பலவழிகளிலும் இந்தக் கருத்துருவாக்கம் சமூகத்தில் வாழுகின்ற பெண்கள் மத்தியில் ஒரு மாற்றத்தை நிச்சயமாக ஏற்படுத்தும் என்றே நம்புகிறோம். இன்று தமிழீழத்தில் பல பெண்கள் தங்களுடைய இயல்பான வாழ்க்கையில் பல சுமைகளைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள். இங்கு வாழும் ஒவ்வொரு பெண்ணுடைய பிரச்சினையும் மிகவும் சிக்கலான பிரச்சினையாக இருக்கின்றது. திடீரென்று குடும்பச்சுமை பெண்களின் தலையில் சுமத்தப்படுகின்றது. அந்தக் குடும்பச் சுமையை சுமந்து கொண்டு பெண் தனியே நடக்கின்றாள். குழந்தைகளை வளர்த்தெடுக்க வேண்டும், தன்னுடைய குடும்பத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று தானே குடும்பத்தை வழிநடத்திக் கொண்டு போகின்றாள். தன்னாலே முடியுமென்ற தன்னம்பிக்கை பெண்ணிற்கு ஏற்படுகின்றது. ஆகவே ஒரு சமூகம் பல பிற்போக்குத் தளைகளால் கட்டுப்பட்டிருந்த போதும், விடுதலைப் போராட்டம் என்ற புரட்சிகரமான மாற்றம் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெண்களிடையேயும் ஒரு புரட்சிகரமான சிந்தனைக்கு அடித்தளமிட்டுள்ளது. நீங்கள் குறிப்பிட்டது போன்ற அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பதெல்லாம் பெண்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக இந்தச் சமூகத்தில் வாழுவதற்காக வகுக்கப்பட்ட பிற்கோக்குத்தனமான சில வழிமுறைகள் தான். ஆனால் இதையெல்லாம் கடந்து நாம் வந்துள்ளோம்.

ஒரு பெண் தன்னுடைய வாழ்க்கையைப் பற்றி முடிவெடுப்பதற்கும் தன்னம்பிக்கையுடன் செயற்படுவதற்கும் தன்னுடைய மனித ஆளுமையை வளர்த்துக் கொண்டு, தன்னுடைய மனித ஆளுமைக்கூடாக சமூகத்தில் நன்மதிப்பை பெறுவதற்கும் அந்தச் சமூகத்திற்காக உழைக்கின்ற மனப்பக்குவத்தைப் பெற்று சமூகத்தில் இடம்பிடிக்கத் தயாரான பிறகு நாங்கள் திரும்பவும் பழைய வரையறையினைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. விடுதலைப் போராட்டம் பெண்களை எழுச்சி கொள்ள வைத்து வருகிறது என்பது தான் உண்மை.

***பெண்ணிலைவாதம் பேசும் சில அமைப்புக்களின் தலைமையில் உள்ள பெண்கள், தமிழ்ப் பெண்கள் சமூகக் கட்டுப்பாடுடன் வாழ்ந்தவர்கள். தொடர்ந்தும் அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுவது பற்றி?***

நாங்கள் தேசவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். தேசவிடுதலையென்று நாம் கருதுவது சமூக விடுதலையையும் இணைத்துத் தான். எங்களுடைய தமிழீழத்தைப் பொறுத்தவரைக்கும் எமது சமூகம் விடுதலையடைய வேண்டுமென்றால் நிச்சயமாக பெண்கள் விடுதலையடைய வேண்டும். இதில் நாமனைவரும் மிகத் தெளிவாகவுள்ளோம். எங்களுடைய பிரதேசத்தில் வாழும் பெண்களின் பிரச்சினைகளில் இருந்து தான் அவர்களுக்குரிய தீர்வுகளையும், வழிமுறைகளையும் கண்டறிய விரும்புகின்றோம்.

பெண்ணிலைவாதம் உலகமெலாம் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தேசத்திலும் வாழுகின்ற பெண்கள் அவர்களுடைய வாழ்க்கைச் சூழல் பொருளாதார நிலை என்பவற்றிற்கேற்ப முன்வைக்கும் கருத்துக்கள் வெவ்வேறுபட்டனவாக இருக்கின்றன. ஆகவே உலகில் ஒரு மூலையில் வாழும் பெண்ணின் பிரச்சினையையும், இன்னொரு மூலையில் வாழும் பெண்ணின் பிரச்சினையையும் ஒப்பிட்டு முடிச்சுப்போட்டு சிக்கல்படத் தேவையில்லை. தமிழீழ தேசத்தைப் பொறுத்தவரைக்கும் பெண் தன்னுடைய ஆளுமையை வெளிக் கொணர்ந்து அதற்கூடாக தன்னுடைய மதிப்பை, ஆற்றலை வெளிப்படுத்தி தன்னுடைய மனச்சிறையிலிருந்து வெளிவந்து, அதன் மூலமாக சமூகத்தின் மனச்சிறையை உடைக்க வேண்டும். அதற்கான முழு முயற்சியும் இங்கு நடந்து கொண்டுள்ளது. அதற்கு விடுதலைப் போராட்டம் மிகப் பெரும் உந்து சக்தியாக உள்ளது. ஆகவே நாங்கள் மற்றவர்களுடைய, வெளியிலிருந்து பெண்ணிலைவாதம் பேசுகின்ற பெண்களைப் பற்றின விமர்சனங்களையும் விடுத்து, எங்களுடைய தேசத்தில் எங்களுடைய வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ற வகையில், எங்களுடைய பெண்கள் தங்கள் இரண்டாம் நிலை வாழ்விலிருந்தும், தங்கள் மனச்சிறையிலிருந்தும் வெளிவந்து இந்தச் சமூகத்திற்காக உழைக்க வேண்டும். தங்களுடைய ஆளுமையை விருத்தி செய்ய வேண்டும். முழு மனிதர்களாக பெண்கள் வாழ வேண்டும்.

***சர்வதேச மகளிர் தினம் மார்ச் 8 அன்று கொண்டாடப்படுகின்றது. புறம்பாக தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் ஏன் கொண்டாடப்படுகின்றது?***

மார்ச் 8 தமிழீழ பெண்களாலும் கொண்டாடப்படுகின்றது. அதனைவிட 10.10.87 இலிலிருந்து தமிழீழ பெண்கள் எழுச்சி நாளைக் கொண்டாடுகின்றோம். அன்று எமது முதலாவது பெண் மாவீரர் இரண்டாம் லெப்ரினன்ட் மாலதி தன்னை அர்ப்பணித்த நாளாகும். அந்த அர்ப்பணிப்பு இந்தத் தேசத்தில் வாழ்கின்ற அனைத்துப் பெண்களின் எழுச்சிக் குறியீடாக தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் உருவானது. இந்தத் தேசத்தின் விடுதலைக்காக, சமூகத்தின் விடுதலைக்காக தன்னுயிரை அர்ப்பணித்த புனிதமான நாள் ஒட்டு மொத்தமான பெண்களின் எழுச்சிக் குறியீடாக தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நினைவு கொள்ளப்படுகின்றது.

***களத்தில் உங்களுடைய அனுபவம் பற்றிக் கூறிவீர்களா?***

களத்தில் நின்று போராடும் பொழுது எங்களுடைய போராளிகள் சந்திக்கின்ற அனுபவங்கள் மிகவும் வித்தியாசமானவை. உண்மையில் அந்த அனுபவங்களை எங்களுடைய போராளிகள் பகிர்ந்து கொள்ள முன்வருவார்களாயின் நிச்சயமாக இந்த உலகமே தனது விழிகளை விரித்து இமைகளை உயர்த்துமளவிற்கு மயிர் கூச்செறிகின்ற பல அனுபவங்களைக் காணலாம். அதில் நான் நின்ற களமுனைச் சம்பவம் என்று நீங்கள் கேட்கும் போது என்னுடைய நெருங்கிய தோழியாகவிருந்த சாம்பவி என்ற போராளி 1993 பூநகரிச் சமரின் போது என்னுடைய நிலைக்கு மிக அருகில் வீரச்சாவடைந்தது தான் ஞாபகம் வருகிறது. ஏனென்றால் அந்தச் சண்டையில் பங்கு கொள்ள முன், முதல் நாள் இரவு மட்டும் பல விடயங்களை நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். காரணம் நாங்கள் அரசியல் வேலை செய்து கொண்டிருக்கும் போராளிகள். எங்களுடைய மக்களின் பிரச்சினைகள் அவர்களுடைய உணர்வுகள் இந்த மக்களிற்காக நாம் செய்ய வேண்டிய எல்லையில்லாது விரிந்து கிடக்கும் சேவைகள், கடமைகள் என்பவற்றை பற்றி விரிவாகப் பேசிக் கொண்டிருந்தோம். தவளைப் பாய்ச்சல் சமர் முடிய நாம் மீண்டும் மக்களுக்குப் பல பணிகளைச் செய்ய வேண்டும் என்ற கற்பனைகள் எமக்குள் இருந்தது.

அதைப் பற்றியெல்லாம் எமக்குள் உரையாடிவிட்டு மறுநாள் நாங்கள் களமுனையில் இறங்கினோம். அந்தக் கற்பனையுடன், அந்தக் கனவுகளுடன் நின்ற சாம்பவி எனக்கு மிக அருகில் மார்பில் துப்பாக்கிச் சன்னத்தை ஏந்தி வீரச்சாவடைந்தார். அந்தச் சம்பவத்தை என்னால் மறக்க முடியாதுள்ளது. ஏனென்றால் அதில் நான் ஒரு சாம்பவியை மட்டும் பார்க்கவில்லை. இப்படித் தான் எமது பதினேழாயிரம் மாவீரர்களும் எமது மக்களுக்காய் இந்தத் தேசத்தின் நிம்மதியான சுபீட்சமான வாழ்வு அமைய வேண்டும் என்ற எண்ணத்துடன் தங்களுடைய இன்னுயிரை மாய்த்துள்ளனர். அவர்களுடைய எதிர்பார்ப்பு எங்களுடைய நெஞ்சங்களில் நிறைந்துள்ளது. அவர்களின் வழியைப் பின்பற்றி நாம் தொடர்வோம். களமுனைகளில் எமது நெஞ்சத்தில் மறக்க முடியாமல் இவையே வரும்.

***வெளிநாடுகளில் உள்ள எமது பெண்களுக்கு எதனைக் கூற விரும்புகின்றீர்கள்? அவர்களிடமிருந்து எதனை எதிர்பார்க்கின்றீர்கள்?***

எங்களுடைய மண்ணிலிருந்து இடம் பெயர்ந்து எத்தனையோ சகோதரிகள் உலகமெல்லாம் வாழ்ந்து வருகின்றனர். நாளாந்தம் அவர்கள் பல இன்னல்களைச் சந்திக்கின்றனர். ஆனால் இந்த இன்னல்களில் இருந்து அவர்கள் மீள வேண்டுமாயின் அவர்கள் தங்களைத் தாங்களே வளர்த்துக் கொள்ள வேண்டும். தங்களுடைய வாழ்க்கையை தாம் தீர்மானித்தவாறு வாழ்வதற்கான ஆளுமையைப் பெற வேண்டும். ஆகவே அவர்கள் எங்கெங்கு வாழ்ந்த போதும் அந்த இடங்களில் தாங்கள் தங்களுடைய தனித்துவத்தோடு வாழ வேண்டும். அவர்கள் அங்கிருந்து கொண்டு இந்த மண்ணிற்கு நிறையச் செய்ய முடியும். இப்பொழுதும் செய்து கொண்டு தான் இருக்கின்றனர். ஆகவே இந்தத் தேசவிடுதலைப் போராட்டம் பரந்து விரிந்து வாழும் எமது மக்களால் முன்னெடுக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது என்று தான் சொல்லமுடியும். அந்த உதவிக் கரங்களில் நிச்சயமாக பெண்களின் கரங்களும் உள்ளது. அந்த உதவிக் கரங்கள் மேலும் தொடர வேண்டும்.

***விடுதலைப்புலிகள் அமைப்பிற்குள் ஆண் பெண் போராளிகளென்று பாகுபாடு உள்ளதா?***

எங்களுடைய மதிப்புக்குரிய தேசியத் தலைவர் மிகுந்த தூரநோக்குடன், தேச விடுதலைப் போராட்டத்தில் இந்தத் தேசத்தின் பெண்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன், பெண்களை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டார். இந்த விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் இணைந்து கொண்ட ஆரம்ப நாளிலிருந்து நாங்கள் போராளிகள் என்ற ரீதியில் தான் பார்க்கப்படுகின்றோம். அது பயிற்சியாக இருந்தாலும் சரி, எமக்குத் தரப்படுகின்ற வேலைகளாக இருந்தாலும் சரி, போராளிகள் என்ற நிலையிலேயே நாங்கள் இங்கு கணிக்கப்பட்டு உரிமைகள், வளர்ச்சிகள், சாதனைகள் எல்லாமே அமைந்திருக்கின்றன. ○

- சிசைரோ

பயங்கரவாதத் தடைச் சட்டம் -3

# வர்த்தக அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலியே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தயாரித்தது

இனவொடுக்கல் முறைமைக்கும் இனவொதுக்கல் முறைமைக்கும் பெயர்போனது அன்றைய தென்னாபிரிக்கா. இனவொடுக்கல் என்பது கறுப்பின மக்களுக்கு எவ்வித சமவுரிமையும் வழங்காது அவர்களது அன்றாட வாழ்வில் கூட அவர்களை மிகவும் பாரபட்சமான முறையில் நடாத்துதல் என்பது. எவ்விதத்திலும் தாம் வெள்ளையின மக்களுக்குச் சமமானவர்களாக மாட்டார்கள் என்று ஒவ்வொரு கனமும் அவர்களுக்கு ஞாபகப்படுத்தப்பட்டுக் கொண்டேயிருக்கும். அந்தளவுக்குப் பாரபட்சத்தின் கொடுமை கொடிகட்டிப் பறந்தது. ஐ.நா. சபைகூட அதனது உத்தியோகபூர்வத் தீர்மானங்களின் மூலம் இந்த இனப்பாரபட்சத்தை வன்மையாகக் கண்டித்திருந்ததுடன் உலகின் வேறெந்தப் பாகங்களிலும் இத்தகைய பாரபட்சம் கடைப்பிடிக்கப்படக் கூடாது என்று அரசுகளிடம் உத்தரவாதம் கேட்டிருந்தது.

இனவொதுக்கல் என்பது இன்னும் மோசமானது. அதாவது வெள்ளையர்களும், கறுப்பர்களும் ஒன்றாகச் சேர்ந்து வாழவே முடியாது. இனரீதியான தீண்டாமை என்பதோடு புவியியல் ரீதியிலும் அருகருகாக வசிக்க முடியாது. தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே கறுப்பர்கள் வசிக்க வேண்டும். அதைவிடுத்து எங்காவது நடமாடினால் நாய்கள் மூலம் அவர்கள் மோப்பம் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு விடுவார்கள். தென்னாபிரிக்காவில் உள்ள மிக வளம் குறைந்த பிரதேசங்களில் மட்டுமே கறுப்பர்கள் வசிக்குமாறு இதன் மூலம் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனை அரசு ஒரு கொள்கைத் திட்டமாகவே மேற்கொண்டு வருடாவருடம் அதற்கென பட்ஜெட்டில் பணமொதுக்கிச் செயற்படும். இலங்கையில் அண்மைக் காலங்களில்

அறிமுகமாயிருக்கும் "பாஸ்" முறைக்கும் தென்னாபிரிக்க முறைக்கும் இடையில் நிறையவே ஒற்றுமையுண்டு. ஐ.நா. சபையின் கணிப்பில் இந்த இனவொதுக்கல் என்பது சர்வதேசக் குற்றமாகக் கருதப்படுகின்றது. இதனைச் சர்வதேசக் குற்றமாக்கிய பெருமை அன்றைய தென்னாபிரிக்க, றொடீசிய ஆட்சியாளர்களையே சாரும்.

மேற்படி இனவெறிக் கொள்கைக்கு எதிராக நெல்சன் மண்டேலா தலைமையிலான ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸின் இருமுனைப் போராட்டத்துக்கு முகங்கொடுப்பதற்காக தென்னாபிரிக்க அரசாங்கம் பல்வேறு அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டு வந்தது. இச்சட்டங்கள் பற்றி ஆட்சியாளர் எப்படி அறிந்திருந்தனர். குடியேற்றவாதிகளாக ஐரோப்பாவிலிருந்து போயிறங்கிய வெள்ளையர்கள் அந்தந்த நாடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த சுதேசிகளைச் சரணடைய வைக்கவும், அடக்கியாளவும் பல்வேறு கொடுமையான வழிமுறைகளைக் கையாண்டார்கள். சித்திரவதைகளைக் கூடச் செய்தனர். காட்டுமிராண்டிகள் என்ற வகையில் சுதேசிகளுக்கு எதிராகப் பாவித்த அடக்குமுறைகள் பின்னரும் தேவைப்படலாம். காலப்போக்கில் எதிர்ப்புக்கள் குறைந்தாலும் பழைய அச்சம் மக்கள் மனதில் அப்படியே இருக்க வேண்டும் என்பதற்காக இந்த வழிமுறைகளை நிரந்தரமாக வைத்திருப்பதற்கு மார்க்கம் தேடினர்.



எனவே இந்தக் கொடூர வழிமுறைகளுக்குச் சட்ட முலாம் பூசப்பட்டது. பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின், போர்த்துக்கல், நெதர்லாந்து, இத்தாலி போன்ற குடியேற்றவாத அரசுகள் தமக்கிடையேயான ஆதிக்கப் போட்டி காரணமாக இந்தக் கொடூர வழிகளைக் கையாளுவதிலும் போட்டியிட்டன. எனவே இவற்றின் கையாளுகைக்கு வசதிசெய்து கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது இவை பாவிக்கப்படப் போவது ஐரோப்பியர்கள் அல்லாதோருக்கே என்பதால் "பெரியவர்கள்" இதுபற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

இப்படியாக, முன்பு புழக்கத்திலிருந்த காட்டுமிராண்டிச் சட்டங்களையே தென்னாபிரிக்கா தோண்டி எடுத்து கறுப்பின மக்களின் போராட்டத்தை அடக்கப் பாவித்தது. அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற "விடுதலை விரும்பிகளை" விட ஏனைய அரசுகள் யாவும் தென்னாபிரிக்காவையும் றொடீசியாவையும் தீண்டத் தகாத நாடுகள் என ஒதுக்கி வைத்துவிட்டன.

இங்ஙனம் பாவிக்கப்பட்ட சட்டங்களில் பிற்காலத்தில் பெயர்பெற்ற ஒன்றே 1960களில் அங்கு பாவிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டமாகும். இதில் வேடிக்கை என்னவென்றால் பயங்கரவாதம் என்று எது கருதப்பட்டது?. குடியேற்றவாதத்துக்கு எதிராகப் போராடுதல் சட்ட உரிமை என்று ஒரு புறத்தில் கூறிக்கொண்டு மறுபுறத்தில் அங்ஙனம் போராடுவேரின் நிறத்தை வைத்து அதில் பயங்கரவாதம் இருப்பதாகவும் சித்திரிக்கப்பட்டது. 1967 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைமுறையிலிருந்த சட்டம் வெள்ளையரின் இனவெறி ஆட்சியொழியும்வரை தனது பிடியைத் தளர்த்தவில்லை. இன்னொரு விதத்தில் பார்ப்பின் இத்தகைய சட்டங்கள் செயற்படத் தொடங்கிய பின்னரே போராட்டம் இன்னும் தீவிரமாயிற்று என்றும் கூறலாம்.

அடுத்து வடஅயர்லாந்தில் ஐரிஸ் போராளிகளை அடக்குவதற்குப் பிரிட்டன் கையாளும் விசேட குற்றவியற் சட்டங்களும் லலித்தின் கண்ணில் பட்டது. ஐ.ஆர்.ஏ எனப்படும் ஐரிஸ் குடியரசு இராணுவத்தின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கென இச்சட்டங்கள் பிரிட்டனால் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்பட்டன. தென்னாபிரிக்காவில் இனவெறி தலைவிரித்தாடியது என்றால் வட அயர்லாந்தில் பேரரசுவாதத்தின் அடிப்படையான ஆதிக்கவெறி அரசோச்சியது எனலாம். எழுச்சிகளை ஆயுதம் கொண்டு அடக்கலாம் என்ற நம்பிக்கை ஒருவித ஆதிக்கவெறியின் வெளிப்பாடேயாகும். எத்தனை தடவைகள் பொய்ப்பிக்கப்பட்டாலும் இந்த நம்பிக்கை ஆதிக்க சக்திகளைவிட்டு அகல்வதேயில்லை.

1922 இல் அயர்லாந்து இரண்டாகியதிலிருந்தே அங்கு வட அயர்லாந்து குடியியல் அதிகாரிகள் (விசேட தத்துவங்கள்) சட்டம் அறிமுகமானது. இது 1933 வரைக்கும் அடிக்கடி புதுப்பிக்கப்பட்டு வந்து அதன் பின்னர் இறுதியில் 1973 இல் வட அயர்லாந்து (அவசரகாலத் தத்துவங்கள்) சட்டம் கொண்டுவரப்படும் வரைக்கும் நடைமுறையில் இருந்தது. இதன் பின்னர் 1974 இல் பயங்கரவாதத் தடை (தற்காலிக ஏற்பாடுகள் சட்டம்) கொண்டு வரப்பட்டது. இந்த இரு விசேட சட்டங்களும் பலதடவைகளில் திருத்தப்பட்டு இன்றும் நடைமுறையில் இருக்கின்றன. ஆனால் 1973, 1974 சட்டவடிவங்கள் லலித்தைப் பெரிதும் கவர்ந்துவிட்டன.

இவற்றின் ஏற்பாடுகளை அவர் மனப்பாடஞ் செய்துகொண்டிருக்க வேண்டும்.

அடுத்து அவரது கவனம் இத்தாலியில் 60 களின் பிற்பகுதியிலும் 70 களிலும் நிலவிய வன்முறையை அடக்குவதற்கு அந்த அரசால் பாவிக்கப்பட்ட சட்டங்களின் மீது சென்றது. கம்யூனிஸ்டுகளின் அச்சுறுத்தல்களைத் தடுக்கவெனக் கடுமையான சட்டங்கள் இக்காலப் பகுதியில் அங்கு அறிமுகமாகின. இத்தகைய சட்டச் செயற்பாடுகள் காரணமாக இத்தாலி இன்றும் மேற்கு ஐரோப்பாவில் தர்மசங்கடம் மிக்க அரசியற் சகபாடியாகவே காலங்கடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இத்தாலியில் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட வன்முறைகளும் சில குண்டுவெடிப்புக்களும் அரசின் அச்சத்தை நியாயப்படுத்துவதாகக் கொள்ளப்பட்டது.

இவற்றைவிட நெதர்லாந்து, ஜேர்மனி போன்றவற்றில் கம்யூனிஸ்ட் தடுப்புக்காகப் பாவிக்கப்படும் சட்டங்களையும் இஸ்ரேலில் பாலஸ்தீனியருக்கு எதிராகப் பாவிக்கப்படுஞ் சட்டங்களையும் படித்துப் பார்த்துவிட்டு வர்த்தக அமைச்சர் என்ற பதவியை வகித்த போதிலும் சட்டவரைவில் அவசர அவசரமாக ஈடுபட்டார் லலித். சட்டமூலம் எப்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும், அதனை எதிர்த்து உயர்நீதிமன்றஞ் செல்லக் கூடியவர்கள் யார்? என்பது பற்றியும் அவரும் ஜனாதிபதியும் கலந்தாலோசித்தனர். முடிவாக ஜனாதிபதி தனது வழக்கமான நரித் தந்திரத்தை வெளிக்காட்டினார். அது என்ன முடிவு? ○

---

- பாலரட்ணம்

பயங்கரவாதம் எது? பயங்கரவாதிகள் யார்? -5

# சவால் விடுத்து பதவியை ராஜினாமாச் செய்த செல்வா?

1972 ஆம் ஆண்டில் இலங்கையை ஒரு சோஷலிசக் குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தும் புதிய அரசியலமைப்பு, தமிழ் மக்கள் சார்பில் சமஷ்டி ஆட்சி அமைப்பதற்காக தமிழரசுக் கட்சியினர் சமர்ப்பித்த அடிப்படைப் பிரேரணைகள் பலவும் நிராகரிக்கப்பட்ட பின், நிறைவேற்றப்பட்டது.

இந்த பௌத்த சோஷலிச அரசியலமைப்புக்கு ஆதரவாகத் தமிழ் மக்கள் சார்பில் கையொப்பமிட்ட வட்டுக்கோட்டை ஆ.தியாகராஜா மீதும் நல்லூர் சி.அருளம்பலம் மீதும் இளைஞர்கள் ஆத்திரம் கொண்டனர்.

புதிய அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நிரூபிப்பதற்காக எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தமது காங்கேசன் துறைப்பிரதிநிதித்துவத்தை ராஜினாமாச் செய்து உபதேர்தலில் மீண்டும் போட்டியிட்டு அதிகப்படியான வாக்குகள் பெற்று வெற்றியீட்டுவதாகவும் இச்சவாலை அரசாங்கம் ஏற்றுத்தன்னை எதிர்த்து உபதேர்தலில் தமக்கு எதிராக ஒரு வேட்பாளரை நிறுத்துமாறும் நாடாளுமன்றத்தில் ஒரு அறிக்கை விடுத்தார்.

தந்தை செல்வா தமது நாடாளுமன்றப் பதவியை ராஜினாமாச் செய்தார். ஆனால் சிறிமா அரசாங்கம் இந்தச் சவாலை உடனடியாக ஏற்றுக் கொள்ளவில்லை. உபதேர்தல் நடத்துவதற்கு நாட்டின் நிலைமை இடம் கொடுக்கவில்லை என்று கூறி ஆட்சி பீடத்திலிருந்தவர்கள் காலத்தைக் கடத்தி வந்தனர்.

சிறிமா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு, ஆட்சிக்கு வந்ததும் வல்வெட்டித்துறை நகரச் சபைத் தலைவராக இருந்த ஞானமூர்த்தி தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் முயற்சியிலீடுபட்டார். தமிழ்க் கட்சிகள் வல்வெட்டித்துறையில் கூடி ஒரு கூட்டமைப்பாக ஆறு அம்சத்திட்டமொன்றை உருவாக்கின. தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை உள்ளடக்கிய ஆறு அம்சத்திட்டத்தை கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாண நகர மேயராக இருந்த சி.நாகராஜா பிரதமர் சிறிமாவுக்கு அனுப்பி வைத்திருந்தார். இந்தக் கோரிக்கைகள் சம்பந்தமாக நேரில் மேலும் விளக்கம் தருவதற்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் சார்பில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தயாராக இருப்பதாகவும் மேயர் நாகராஜா தெரிவித்திருந்தார்.

இந்தக் கடிதமும் ஆறு அம்சக்கோரிக்கை கடிதமும் தமக்குக் கிடைத்ததாகக் கூட பிரதமர் சிறிமா நீண்ட நாட்களாக பதில் அனுப்பவேயில்லை. தமிழரசுக் கட்சியினருடன் பேச்சு நடத்துவதை விட செல்லையா குமார சூரியர் மூலம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்று பிரதமர் சிறிமா நம்பினார். தமிழரசுக் கட்சியுடன் தொடர்பு வைத்தாலோ பேச்சு நடத்தினாலோ எதிர்கட்சியினர் தங்களுக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் பெரும்பிரசாரத்தை மேற்கொள்வர் என்று சிறிமாவின் வலது கரமாக விளங்கிய பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவும் கருதினார்.

இதே சமயம் 1972ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட புதிய குடியரசு அரசியலமைப்பின் பிரதிகளுக்கு தமிழரசுக் கட்சித் தலைவர்களும், இளைஞர்களும் தீவைத்து எதிர்ப்பைத் தெரிவித்து வந்தனர்.

காங்கேசன்துறைத் தொகுதி இடைத் தேர்தலில் ஆளும் கட்சியின் சார்பில் செல்வநாயகத்தின் சவாலுக்குப் பதில் சொல்லக் கூடிய ஒருவரை வேட்பாளராகத் தெரிவு செய்வதில் செல்லையா குமாரசூரியரும் இடதுசாரிகளும் ஈடுபட்டனர். உபதேர்தல் நடத்துவதற்குக் கால நிலை சரியில்லையென்று காலத்தைக் கடத்திய அதே சமயம் வேட்பாளரைத் தேடுவதிலும் ஆளும் கட்சி ஈடுபட்டது.



இனியும் காலம் கடத்த முடியாதென்ற நிலையில் 1974ஆம் ஆண்டில் காங்கேசன்துறை இடைத் தேர்தலுக்குத் திகதி குறிக்கப்பட்டது. ஆளும் கட்சியின் சார்பில் செல்வநாயகத்தின் சவாலுக்கு ஈடுகொடுக்கக் கூடியவர் என்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடறிந்த பிரமுகரும் யாழ்ப்பாணத்தில் முற்போக்கு இளைஞர்களின் அபிமானத்துக்குரியவருமான வி.பொன்னம்பலம் வேட்பாளராக நியமிக்கப்பட்டார்.

இந்த உபதேர்தலில் வி.பொன்னம்பலம் ஆளும் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டாலும் அவரது வெற்றிக்காக அல்லும் பகலும் அமைச்சர் குமாரசூரியரே அரும்பாடு பட்டார்.

இதே சமயம் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை, இலங்கையில் நான்காவது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டை நடத்துவது பற்றிய ச்ர்ச்சையிலிறங்கியது. யாழப்பாணத்தில் நான்காவது மாநாட்டை நடத்த வேண்டுமென்று ஒரு சாரும் கொழும்பில் அல்லது வேறு எங்காவ்து நடத்த வேண்டுமென்று மற்றொரு சாராரும் வாதிட்டனர். உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையில் பிளவேற்பட்டது. ஆனாலும் யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்துவதென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆந் திகதி முதல் 10ந் திகதிவரை நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டு இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாடு நடத்துவதை சிறிமா அரசாங்கம் விரும்பவில்லை. வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்கள் இம்மாநாட்டுக்கு வருவதற்கு சிறிமா அரசாங்கம் அனுமதியளிக்க மறுத்தது. "எங்கள் தமிழ் மொழிக்கு விழா எடுக்க எங்களுக்கு உரிமை இல்லையா?" என்று தமிழ் அரசியல்வாதிகளுடன் தமிழ் இளைஞர்களும் உரத்த குரலில் கேட்கத் தொடங்கினார்கள்.

தொடரும்... ○

சுயநிர்ணய உரிமை III

# தன் தலைவிதியைத் தானே தீர்மானிக்கும் உரிமை!

-வி.ரி.தமிழ்மாறன்-

இதன்படி பார்ப்பின் போராடும் ஒரு தேசத்தின் பாட்டாளி வர்க்கத்தின் பங்குபற்றலானது அப்போராட்டத்தைச் சர்வதேச மட்டத்திலான போராட்டமாக மாற்றும் என்பது லெனினது பார்வையாகும். சிறிய நாடுகளின் சுதந்திரத்தை ஆதரிக்கும் கடப்பாட்டிலிருந்த அவர் அதேவேளை ஆக்கிரமிப்பானது எந்தப் பெயரில் வந்தாலும் அதை எதிர்க்க வேண்டும் என்ற கோட்பாட்டிலிருந்து பின்வாங்கவில்லை என்பதையும் கவனிக்கலாம். இதுபற்றிய போதிய விளக்கமின்றிய திரிபுவாதிகள் பின்னாட்களில் தேசிய எழுச்சிப் போராட்டங்களை ஒன்றில் அவை வெறும் இன, மத, மொழி ரீதியிலான வெறிபிடித்த போராட்டங்கள் என்றோ அல்லது முதலாளித்துவத்துக்குச் சாமரம் வீசுவதற்கான மறுவடிவம் என்றோ சாதிக்கத் தலைப்பட்டார்கள். வேறுசிலர் பொருளாதார சுதந்திரமின்றி சுயநிர்ணய உரிமை கிடையாது என்றும் சுயமான பொருளாதார அத்திவாரமில்லாத குழுவொன்றின் போராட்டம் வெற்றியளிப்பது சாத்தியமில்லை என்றும் அது மேலும் அடிமைத் தனத்துக்கே இட்டுச் செல்லும் என்றும் வாதிட்டு வந்துள்ளனர். இதனை ஈழத்தில் ஏற்பட்ட போராட்ட அனுபவங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது வாசகர்களது கடமையாகும்.

சோவியத் அக்காலப்பகுதியில் வெளியிட்ட பல்வேறு பிரகடனங்களை ஆராயும் ஒருவர் லெனினும் ஏனைய சோவியத் தலைவர்களும் சுயநிர்ணய உரிமை என்பது மூன்று பிரதான அங்கங்களைக் கொண்டிருந்தது எனக் கருதினர் என்ற முடிவுக்கே வரமுடியும். முதலாவது கருத்தில் தமது தலைவிதியை சுதந்திரமாகத் தீர்மானிக்க விரும்பும் ஓர் இனத்துவ அல்லது தேசியக் குழுவினால் இது உதவிக்கழைக்கப்பட முடியும். இரண்டாவதாக, இறைமையுள்ள இரு நாடுகள் தமக்குள் இராணுவ ரீதியில் பொருதிக் கொள்ளும் போது அல்லது அதன் பின்னர் அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு ஆட்புலங்களை உரியதாக்குவதில் பாவிக்கப்படலாம். மூன்றாவது பொருளில், முற்றிலுமே குடியேற்ற வாதத்துக்கு எதிரான போராட்டம் என்று எடுத்துக்கொண்டால் எல்லாக் குடியேற்றநாடுகளதும் விடுதலைக்கான போராட்டமாகவும் கொள்ளப்படலாம். இதில் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட அம்சமான ஆட்புலங்களை இணைத்தல் என்பதில் பிரெஞ்சுப் புரட்சியின் அம்சங்களே கூடுதலாக விரவி நிற்பதைக் காணலாம். அதாவது ஆட்புலம் ஒன்று அதன் மக்களது விருப்புக்கு எதிராக இன்னொன்றுடன் இணைக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்பது பிரெஞ்சுப் புரட்சியாளர்களது சுயநிர்ணய உரிமைக்குரலாக இருந்தது. அங்ஙனம் பார்க்கையில் முதலாவதும் மூன்றாவதும் பெருமளவுக்குப் புதிய வரவுகள் என்றே கூறவேண்டும்.

சுயநிர்ணய உரிமை பற்றிய முதலாவது அம்சத்தின் கீழ், அதாவது இனத்துவ அல்லது தேசியக் குழுக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் உரிமை சம்பந்தமானது என்றளவில் -- எல்லா இனத்துவக் குழுக்களுமே இந்த உரிமையைக் கொண்டிருப்பதாகக் கருதப்பட்டது. குடியேற்ற ஆட்சிக்கு உட்பட்ட மக்களுக்கு மட்டுந்தான் இந்த உரிமை உரியது என்ற பொருளில் இதனை சோவியத் யூனியன் வலியுறுத்தி வந்ததாகக் கூறமுடியாது. இங்கே இக்குழுக்கள் தாமே வேறாகப்பிரிந்து போகத் தீர்மானிக்கலாம். அல்லது மாற்றாக, பாரிய அமைப்பொன்றுக்குள்ளாக மீந்திருந்து கொண்டு சுயாட்சி உரிமையைக் கோரி நிற்கலாம். முதலாம் உலகப் போரின் போதும் அதற்கும் பிந்திய காலப்பகுதியிலும் வெளியிடப்பட்ட சோவியத் பிரசுரங்கள் பலவும் இந்த இரண்டில் இரண்டாவது வகைக்கே தமது விருப்பினைக் காட்டி நின்றன. உதாரணமாக, சோவியத் யூனியனின் 1918 ஆம் ஆண்டுக் குடியரசு அரசியலமைப்பில் சோவியத் குடியரசுகள் யாவற்றுக்குமே சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருந்ததோடு பிரிந்து போவதற்கான அவற்றின் உரிமையும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

குடியேற்றவாதத்துக்கு எதிரான கருத்துப்பாடு என்றளவில் சுயநிர்ணய உரிமையானது அந்நிய ஆட்சிக்கு உட்பட்டவர்கள் தமது சுதந்திரத்துக்காகப் போராடும் உரிமையை நியாயப்படுத்துவதாக இது புரிந்து கொள்ளப்பட்டது. இக்கோட்பாடு குடியேற்றவாதத்துக்கு எதிரான அதனது நிலைவிளக்கத்தின்படி தீர்க்கமுனையும் பிரச்சினைபற்றியும் அதன் எதிர்பார்ப்புக்கள் பற்றியும் அப்போதைய சோவியத் வெளிவிவகார அமைச்சர் செச்செரின் 1922 இல் லெனினுக்குப் பின்வருமாறு எழுதினார்:

'உலக யுத்தத்தினால் அடக்குமுறைக்கும் குடியேற்றத்துக்கு உட்பட்டதுமான மக்களின் விடுதலை இயக்கங்கள் தீவிரம் பெற்று வருகின்றன. --- எமது சர்வதேச வேலைத்திட்டமானது அடக்கப்பட்ட எல்லாக் குடியேற்ற நாடுகளது மக்களையும் சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். எல்லா மக்களதும் பிரிவினை அல்லது சுயாட்சி உரிமையும் அங்கீகரிக்கப்பட வேண்டும் - - -.'

சுயநிர்ணய உரிமை பற்றிய இக்கருத்தேற்பின் பின்னால் நிற்பது சோசலிஸம் தான் என்பதைப் புரிந்து கொள்ளுதல் சிரமமன்று. தனது Theses என்ற தொகுப்பில் லெனின் வெற்றிகரமான சோசலிஸம் என்பது கட்டாயமாக முழு ஜனநாயகந்தான் என வலியுறுத்தியுள்ளார். சர்வதேச மட்டத்தில் சோசலிஸமும் ஜனநாயகமும் கையோடு கைகோர்த்துப் போக முடிந்தது. வெற்றிகரமான சோசலிஸம் என்பதால் மற்றைய நாடுகளுடன் சம அந்தஸ்துக் கிடைக்கின்றதென்ற விடயமும் அடக்கப்பட்ட குடியேற்ற நாட்டு மக்களின் போராட்டம் என்பதால் சுயநிர்ணயத்துக்கான வெற்றியும் கிடைக்கும் என்று லெனின் வாதிட்டார் (Selected Works:157). இன்னும் எளிதாகக் கூறுவதாயின், ஒரே அரசுக்குள் சோசலிஸமும் ஜனநாயகமும் இருப்பதாகக் கூறுவதாயின் நாட்டு மக்களுக்குச் சுதந்திரமும் சர்வதேச மட்டத்தில் எல்லா நாடுகளுக்கும் சமத்துவமும் கிடைக்கும் என்றும் கூறலாம். ஆனால் லெனினின் இந்தக் கோட்பாட்டு அடிப்படையிலமைந்த சுயநிர்ணய உரிமைக்கான பொருள் கோடலானது இக்கோட்பாட்டின் பிரயோக எல்லையினை எவ்விதம் மட்டுப்படுத்தியது என்பதைப் பின்னால் பாப்போம்.


ஆனாலும் சுயநிர்ணய உரிமையை எவ்விதம் அமுல்படுத்தலாம் என்பதற்கு லெனின் கூறிய வழிமுறையைக் கவனிக்காமல் விடமுடியாது. அவரைப் பொறுத்தளவில் இறைமையுடைய அரசுகளுக்குள் வாழுந் தேசங்களது சுயநிர்ணய உரிமையானது முதலில் பிரிவினையினூடாகவே பிரயோகிக்கப்படலாம். ஆனால் பிரிவினை என்றதும் கட்டாயமாக வன்முறைப் பிரயோகத்தின் மூலமான பிரிவினை தான் என்று முடிவுகட்ட வேண்டிய அவசியமில்லை. சுதந்திரமான கருத்துக்கணிப்பு மூலமாகவும் இதனைச் செயலுருப்படுத்தலாம். இரண்டாவது அம்சமான ஆட்புல மாற்றங்கள் தொடர்பில் சுயநிர்ணய உரிமையானது சர்வசன வாக்கெடுப்பு மூலம் செயலாக்கப்படலாம். அரசியற் சுதந்திரம், சர்வதேச அந்தஸ்து என்பவற்றைப் பெறுவதற்கான மூன்றாம் அம்சத்திலான பிரயோகத்தில் குடியேற்றநாட்டு மக்கள் ஆயுதப் போராட்டத்தை நடாத்த உரித்துடையவர்கள்.

ஆனாலும், தேசம் அல்லது மக்கள் குழு ஒன்றினால் அடையப்படும் சுதந்திரம் என்பதே அவர்களின் இறுதி இலட்சியம் என்று கொள்ளப்படத் தேவையில்லை. பிரிவினை, சிதறுண்டு போதல், சிறிய அரசுகளாக உருவாகுதல் என்பதிலுள்ள அபாயங்களைச் சுட்டிக்காட்டிடும் அதேவேளை பெரிய அரசுகளாக இருப்பதன் நிச்சயமான அனுகூலங்களையும் லெனின் எடுத்துக்காட்டி சுதந்திர அரசுகளுக்குப் பதிலாக கூட்டிணைவுகளின் அருமையினைப் பெரிதும் வலியுறுத்தினார். இந்தக் கூட்டிணைவுகூட இறுதி இலக்கு அல்லவென்றாலும் சோசலிஸ உலகைப் பொறுத்தளவில் அரசுகளின் கட்டமைவுகளை உருவாக்குவதில் மிகப் பொருத்தமானதும் மக்கள் குழுக்களதும் மத்திய ஆட்சியினதும் கௌரவத்தைப் பேணுவதுமான உரிய வழி இதைத் தவிர வேறேதுமில்லை என்றே அவர் வாதிட்டார் (Lenin: Socialism and War, p. 235).

Theses என்பதில் அவர் தொடர்ந்தும் கூறுவதாவது (Selected Works: 160):

'மேலும், வர்க்க வேறுபாடுகளை ஒழிக்க வேண்டுமாயின் ஒடுக்கப்பட்ட மக்களின் சர்வாதிகார ஆட்சியானது இடைமாறு காலப்பகுதிக்கு அவசியமாவது போலவே தவிர்க்க முடியாதபடிக்குத் தேசங்களின் ஒன்றிணைவு ஏற்பட வேண்டுமாயின் அடக்கப்பட்டுள்ள தேசங்களது மக்களது பிரிவினைக்கான உரிமை இடைமாறு காலப்பகுதிக்கு ஏற்றுக் கொள்ளப்படவே வேண்டும்.'

லெனினது அணுகுமுறை தொடர்பாக முன்வைக்கப்படும் சில கண்டனங்களை இப்போது கவனிப்போம். 18 ஆம் நூற்றாண்டுப் பிரெஞ்சுப் புரட்சியாளர்கள் போலவே லெனினும் சுயநிர்ணய உரிமை பற்றிய தனது கருத்தேற்பினை தனது தத்துவார்த்த மற்றும் அரசியல் இலக்குகளுக்குள் நின்றுகொண்டு முன்வைத்தாரே தவிர மக்கள் குழுக்களைப் பாதுகாப்பதற்காக அங்ஙனம் செயற்பட முன்வரவில்லை என்று சாடப்படுகின்றது. சுயநிர்ணயக் கோட்பாட்டினைவிட சோசலிஸ இலட்சியமும் புரட்சியின் நலன்களுமே எப்போதும் முன்னுரிமை பெற்றிருந்ததாகவும் கூறப்படுகின்றது. முதன்முதலாக தனது Theses தொகுப்பில் 1916 இல் எழுதியதன் மூலம் சுயநிர்ணய உரிமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஏற்றுக் கொள்கின்ற அதே வேளையில், இக்கோட்பாட்டையும் அரசியற் சுதந்திரத்துக்கான ஏனைய எல்லா வகைப் போராட்டங்களையும் பின்னிலைப்படுத்தி பூர்ஷ்வா வர்க்கத்தின் அரசாங்கங்களைத் தூக்கியெறிந்து சோசலிஸத்தை அடைவதற்கான புரட்சிகர சக்திகளின் போராட்டத்தையே முன்னிலைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கருதிக் கொண்டிருந்தார். 1918 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆந் தேதியப் 'பிரவாத' இதழில் ஜேர்மனியுடான சமாதானப் பொருத்தனை ஒன்று ஆக்கப்படுவதனை ஆதரித்து அவர் எழுதியிருந்தார். Brest - Litovsk Treaty என்று அழைக்கப்பட்ட இந்தப் பொருத்தனை ரஷ்யாவை ஒருபுறத்திலும் ஜேர்மனி, ஒஸ்ரியா-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி என்பவற்றை மறுபுறத்திலுமாகக் கொண்டு ஒப்பமிடப்பட்டதாகும். சோசலிஸம் வெற்றிகரமாக நிலைநாட்டப்பட வேண்டுமாயின் போலந்து, லித்துவெனியா, லத்வியாவின் ஒரு பகுதி, எஸ்ரோனியா, பைலோருஷ்யா என்பவற்றை ஜேர்மனிக்கு விட்டுக் கொடுத்தல் என்பது அவற்றின் மக்களுக்குச் செய்யப்படும் துரோகம் என்பதுடன் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினையும் கைவிடுவதாகவும் அமைந்துவிடும் என்று வாதிட்டார்.



சோவியத் யூனியனின் இடைவிடாத முயற்சி இல்லையென்றால் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு ஐக்கிய நாடுகள் சாசனத்தில் இடம்பிடித்திருக்க முடியாது. இச்சாசனத்தில் அது இடம்பெற்றதால் தான் பின்னதாகப் பல்வேறு சர்வதேச ஆவணங்களிலும் சட்ட அந்தஸ்துப் பெற்று வலுவான சட்டக் கோட்பாடாக வளர்ச்சியடையத் தொடங்கியது என்றால் அது மிகையல்ல.

மீண்டும் மீண்டும் அவர் எழுப்பிய கேள்வியானது எது முதலில் முன்வைக்கப்பட வேண்டும்? சுயநிர்ணயத்துக்கான தேசங்களின் உரிமையா அல்லது சோசலிஸமா? என்பதேயாகும். அவரது விடை மிகத் தெளிவாகவே இருந்தது. அது சோசலிஸம் என்பதே தான். சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை அவர் முன்னெடுத்தது அது வர்க்கப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் அந்தளவுக்கே என்றாகும். அதாவது ஒரு தத்துவார்த்தக் கோட்பாடானது லெனினினால் தருணத்துக்கேற்ப கையாளப்படும் ஓர் ஆயுதமாகப் பாவிக்கப்பட்டுள்ளது என்பதே இந்த விமர்சனமாகும்.

சோவியத் யூனியனதும் ஏனைய சோசலிஸ நாடுகளதும் அதிகாரம் வாய்ந்த ஆவணங்களின்படி சுயநிர்ணய உரிமை தொடர்பான மூன்று அம்சங்களில் மூன்றாவது அம்சத்தினை மட்டும் வலியுறுத்தும் அவற்றின் நிலைப்பாட்டில் ஒரு தொடர்ச்சித் தன்மையை அவதானிக்க முடிந்த போதிலும் மற்றைய இரண்டு அம்சங்களையும் வலியுறுத்துவதில் எவ்வித அக்கறையும் காட்டப்படாது விடப்பட்டமையை சோசலிஸவாதிகளால் இன்றும் நியாயப்படுத்த முடியாமலே போய்விட்டது.

ஒக்டோபர் புரட்சியைப் பற்றிய ஒரு முரண்பாட்டு நிலையும் விமர்சனத்துக்குள்ளாகின்றது. அதாவது, மக்கள் விருப்பு என்பதன் பெயரில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றமானது லெனினே அதுகாலவரை கூறிவந்த சுயநிர்ணய உரிமையை நிகழ்வுவழியில் (de facto) மீறுவதாக அமைந்து விட்டது என்பதே இக்கண்டனமாகும். ஏனெனில் மற்றைய ஆள்புலங்களை இணைத்தல் என்று வரும்போது 1940 இல் லத்வியா, எஸ்ரோனியா, லித்துவெனியா மக்களுக்கு என்ன நடந்தது என்பதும் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் வாய்ப்பு இந்த இனத்துவ, தேசியக் குழுக்களுக்கு வழங்கப்பட்டதா என்பதும் கேள்வியாக எழுப்பப்பட்டது. அதற்கான விடை என்னவாக இருந்திருக்கும் என்பதிலே போலியான விளக்கங்களே கொடுக்கப்பட்டன என்பதையே 1989 இன் நிகழ்வுகள் இக்குடியரசுகளில் நிரூபித்தன என்றும் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

லெனினினதும் சோவியத் தலைவர்களதும் நிலைப்பாடானது தொழிலாள வர்க்கத்தின் சுயநிர்ணய உரிமை பற்றிய அக்கறையை மையமாகக் கொண்டிருந்ததே தவிர எல்லா மக்களதும் சுயநிர்ணய உரிமையை முன்னிலைப்படுத்தியதாக இருந்திருக்கவில்லை என்பதை ஒப்புக் கொள்ளவே வேண்டும். ஆனால் எது எப்படியிருப்பினும் லெனினினது கருத்துநிலையானது குடியேற்றவாதத்துக்கு எதிரான அம்சத்தை முதன்மைப்படுத்திய சுயநிர்ணய உரிமையாக இருந்த போதிலும் பல்வேறு நாடுகளது வெளிவிவகாரக் கொள்கைகளின் மீதும் சர்வதேசச் சட்டத்தின் உள்ளார்ந்த இயல்பு மீதும் அது அளவிறந்த செல்வாக்கைச் செலுத்தி வந்துள்ளதையும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

சோவியத் யூனியனின் இடைவிடாத முயற்சி இல்லையென்றால் இக்கோட்பாடு ஐக்கிய நாடுகள் சாசனத்தில் இடம்பிடித்திருக்க முடியாது. இச்சானத்தில் இடம்பெற்றதால் தான் இக்கோட்பாடு பின்னதாகப் பல்வேறு சர்வதேச ஆவணங்களிலும் சட்ட அந்தஸ்துப் பெற்று வலுவான சட்டக் கோட்பாடாக வளர்ச்சியடையத் தொடங்கியது என்றால் அது மிகையல்ல. ○


# பாலியல் தொழில்: 1

## புராணங்களும் இதிகாசங்களும் என்ன சொல்கின்றன?

### ஒரு சமூகவியல் பார்வை

என்.எஸ்.குமரன்

மார்ச் – 08
சர்வதேச பெண்கள் தினம்



உலகிலேயே மிகவும் தொன்மைவாய்ந்த தொழிலாக பல நூல்களில் குறிப்பிடப்படுவது பாலியல் தொழிலாகும். தமிழ் மரபில் குறிப்பாக ஆதிக்க சித்தாந்தமயப்பட்ட நமது மொழியில் இதுவரைகாலம் பயன்படுத்தப்பட்டு வந்த 'விபச்சாரம்' என்கிற பதப்பிரயோகத்தை புழக்கத்தில் இருந்து அகற்றி 'பாலியல் தொழில்' என்கிற பதப்பிரயோகம் அதற்குப் பதிலாக பிரதீயீடு செய்யப்பட்டு வருகிறது.

இது வரைகாலம், பொது மகளிர், விலை மகளிர், வரைவின் மகளிர், விபச்சாரி, வேசி, தேவடியாள், பரத்தையர், போன்ற பதங்கள் நடைமுறை வழக்கில் இருந்து வந்தன. இப்பதப்பிரயோகங்களானவை அடிப்படையில் குறிப்பிட்ட தொழிலில் ஈடுபடும் பெண்ணை மோசமாக சித்திரிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொதுவாக ஆணாதிக்கமயப்பட்ட நமது மொழி வழக்கில் இப்பேர்பட்ட மொழிப்பயன்பாடுகள் சமீப காலம் வரை அதன் உள்ளடக்கம் குறித்து ஆராயப்படவில்லையென்றே கூறலாம்.

இனி நாங்கள் இதனை பாலியல் தொழில் என்றே பிரயோகிப்போம்.

பணம், பொருள் வாங்கிக் கொண்டு, பதிலாக தனது உடலை பாலியல் தேவைக்காக மற்றவர்க்கு விற்கும் செயற்பாடு என்றே பாலியல் தொழிலை வரைவிலக்கணப்படுத்தலாம். இச்செயற்பாடானது பெண்களுக்கு மட்டுமே பொருத்தப்பட்டு வந்தது. இன்று பாலியல் தொழில் என்பது, ஆண்களும் ஈடுபடும் தொழிலாகியிருக்கிறது. மேற்குலகில் மாத்திரமல்ல குறைந்தளவேயாயினும் இலங்கையிலும் கூட பாலியல் தொழிலில் ஆண்கள் (Male Hustlers) ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் ஓரினப்புணர்ச்சியைக் கொண்ட ஆண்Xஆண் (Gay sex workers) பெணXபெண் (Lesbian sex workers) என இத்தொழிலின் வடிவங்களில் நிறைந்த மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனாலும் எண்ணிக்கையளவில் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்களின் தொகை அதிகமே.

முன்னைய காலத்தில் வைதீகர்கள், புலவர்கள், நூலாசிரியர்கள், முதலியோர் பாலியல் தொழிலின் தீமை குறித்து பேசாமல் விடவில்லை. இதன் 'கெடுதி' குறித்து எழுதாத நீதி நூல்களோ இலக்கியங்களோ, கதைகளோ இல்லையெனலாம். 'கொலை, களவு, பொய், கள், காமம்' என கூறப்படுகின்ற பஞ்சமா பாதகங்களில் 'காமம்' என கூறப்படுவது பாலியல் தொழிலையே.

இன்று பாலியல் தொழிலானது சட்டபூர்வமற்ற மற்றும் சட்டபூர்வமாகவும் கூட நிறுவனமயப்பட்ட ஒரு தொழிலாக நிலவுகிறது.

பெண்ணிய நோக்கில் பாலியலை நோக்குவது எப்படி என்பது குறித்து வெவ்வேறான நிலைப்பாடுகளும், விவாதங்களும் தொடர்கின்றன. அவற்றில் பிரதானமான அடிப்படை வாதங்கள் இரண்டு.

1. பாலியல் தொழிலை பெண்ணின் சுயாதீனமான தெரிவு என்றும், தமது உரிமை என்றும் கூறுவது முதல் பார்வை. மேலும் அதிக காரணங்களையும் உள்ளடக்கி இதற்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை கோரிநிற்கிறது இந்த வகைப்பார்வை. இதன்படி பாலியல் தொழில் ஒன்றில் தான் பெண் தன் உழைப்புக்கூலியை நேரடியாக விலை பேசிப் பெறமுடிகிறது என்றும் கூறுவர். (மேற்கில் இந்த வாதம் பலமாகவே இருக்கிறது.)

2. இது அடிப்படையில் பாலியல் மற்றும் பொருள் போன்ற சுரண்டலைக் கொண்டிருக்கிறது. இடைத்தரகர்களால் ஊக்குவிக்கப்படுகின்ற தொழில். பெண்ணின் பாலியல் ஆற்றல் விற்கப்படுவதை எதிர்க்க வேண்டும் என்கிற சாராம்சத்தைக் கொண்டிருக்கின்ற பார்வை இது.

பாலியல் தொழில் குறையாமல் அது பல புதிய வடிவங்களைக் கொண்டு மேலும் தொழில் ரீதியில் (professional) வளர்ந்து வருவதற்குரிய காரணத்தைக் கண்டடைந்து களையாமல் இந்நிலைமையை மாற்றமுடியாது.

இந்த இருவித பார்வைகள் நிலவுகிற போதும் இலங்கையில் பாலியல் தொழிலின் பன்முக செயற்பாடு, அதன் தன்மை, அதன் உள்ளடக்கம், அதன் உளவியல், அதன் அரசியல், அதன் வடிவங்கள், சமகால போக்குகள், விவாதங்கள் என்பன குறித்து நாம் நிறையவே பேச வேண்டியிருக்கிறது. இக்கட்டுரைத் தொடர் இதுவரை தேடிப்பெற்றவற்றை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளும். வேறும் கருத்துக்களை வேண்டி நிற்கும்.

பாலியல் தொழில் தீயது என வாயளவில் பேசுவதற்கப்பால் அதன் ஒட்டுமொத்த உள்ளடக்கத்தை நாம் கருத்திற் கொண்டாக வேண்டியிருக்கிறது.

தமது பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே பெண்கள் படைக்கப்பட்டார்களென்ற கருத்து நமது புராண இதிகாசங்களில் நிறையவே காணக்கிடைக்கின்றன.

பரத்தையைப் புணர்தல் என நமது இலக்கியங்கள் கண்டிக்காமல் அனுமதிப்பதைக் காணலாம்.

தனிச்சொத்துடன் குடும்ப அமைப்பு ஏற்படும்வரை மனித இனம் பல குழுக்களாகவே வாழ்ந்து வந்தது. நாடோடியாக மந்தை மேய்த்து வாழ்ந்த மனிதக் கூட்டம் பயிர்த் தொழிலில் ஈடுபடும் காலத்திலேயே நிலையாக வாழத் தொடங்கியது. மனித இன வரலாற்றின் முதலாவது வேலைப்பிரிவினையும் அப்போதே ஏற்பட்டது. பெண்ணின் உற்பத்தி தனிக் குடும்ப உற்பத்தியாக ஒதுக்கப்பட்டதிலிருந்து பெண்ணினத்தின் வீழ்ச்சி ஆரம்பித்தது.

உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியுடன் உபரியாக உற்பத்தி செய்யவும் முடிந்தது. அதையொட்டி வர்க்கச் சமுதாயம் தோன்றியது. தனிச் சொத்துடன் ஒரு தாரமண முறைகொண்ட குடும்ப அமைப்பு தோன்றியது. ஆதி தாய்வழிச் சமூகத்தில் கட்டுப்பாடற்ற சுதந்திர பாலுறவு நிலவிய காலத்தில் குழந்தைகளுக்கு தாய் யார் என்று தெரிந்தது. தந்தை யார் என்று தெரிந்திருக்கவில்லை. தாயைச் சுற்றிய பந்தமும். தாய்க்கே அதிகாரமும் இருந்த காலமது. தனிச்சொத்துடமை தோன்றியபோது பெண்ணையும் தனக்குரிய சொத்தாக ஆக்கிக்கொண்டும், நிலப்பிரபுத்துவ அமைப்பில் குடும்ப அமைப்பை பலப்படுத்திக்கொண்டும் அதற்குரிய விதிகளை மதங்களுக்கூடாக நிறுவியமையும் மனித வரலாறு. கருவளத்தை கட்டுபடுத்தும் அதிகாரத்தையும், கற்பு, புனிதம் குறித்த கட்டுக்கதைகளையும், ஐதீகங்களையும் மதத்தின் துணைகொண்டே ஆசாரங்களாக காலப்போக்கில் ஆக்கிக்கொண்டது ஆணாதிக்க கட்டமைப்பு.

பெண்களுக்கு திருமண பந்தத்தின் மூலம் அமைக்கப்பெறும் கணவனுடன் மாத்திரமே பாலுறவு வரையறுக்கப்பட்டதானது, குறிப்பிட்ட ஆணின் தனது வழித்தோன்றல்களை உறுதி செய்வதற்கும், சொத்துக்களைப் பாதுகாக்கவுமே. பின்னர் நிறுவப்பட்ட கற்பைச் சுற்றிய பெருங்கதையாடல்களின் வாயிலாக பலமாக பெண்ணைச் சுற்றிய வரையறைகள் போடப்பட்டன. கற்பொழுக்கம் பற்றிய போதனைகள், ஆசாரங்கள், விதிகள் என்பனவற்றை கட்டமைத்து இதன் மீதான 'மீறலைப்' புரிகின்ற பெண்கள் மோசமாக சித்திரிக்கப்பட்டனர். கடும் தண்டனைக்குள்ளாக்கப்பட்டார்கள். சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டும், உளவியல் சிதைக்கபட்டவர்களாகவும் ஆக்கப்பட்டார்கள். இனியொரு வாழ்வில்லை என்கிற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இந்த பின்னணியிலேயே பாலியல் தொழிலாளர்களின் சமகால சமூக நிலை குறித்தும் பார்க்கப்பட வேண்டியிருக்கிறது.

இலங்கையில் பாலியல் தொழிலில் பாரிய மாற்றம் நிகழ்ந்த அம்சங்களாகக் கருதப்படுவது

1. 1977இல் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை.

2. உள்நாட்டுப் போரின் பக்க விளைவுகள்

இது குறித்து விரிவாக அடுத்து வரும் இதழ்களில் பார்க்கலாம்.

## கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும் !!!

மிகச் சமீப காலமாக இலங்கையில் புதிதாக கிளம்பியிருக்கின்ற பூதம் புளூ பிலிம்கள் எனப்படும் பாலியல் உணர்வுகளைத் தூண்டுகின்ற திரைப்படங்களாகும். தினசரி பத்திரிகையில் சினிமா விளம்பரங்களில் 70 வீதத்துக்கும் அதிகமான திரைப்படங்கள் "கண்டிப்பாக வயது வந்தவர்களுக்குமட்டும்." "18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும்" என்கின்ற அறிவித்தலுடன் இந்த விளம்பரங்கள் வெளிவருகின்றன. உண்மையிலேயே வயது வந்தோருக்கானது என்கிற அறிவித்தல் தான் அவர்களது அழைப்பு என்பது கவனத்திற்கொள்ளத்தக்கது. வீதிகளில் சுவரொட்டி விளம்பரங்களிலும், கட்அவுட்களிலும் படுக்கையும், அரைநிர்வாணமாக காட்சியளிக்கும் பெண்களையுமே கொண்டிருக்கிறது.

இந்தியாவில் இருந்து ஒரு புறம் புனிதங்களை நிலைநிறுத்துகின்ற சின்னத்திரை தொடர்களையும், சினிமா படங்களையும் தொலைக்காட்சி நிறுவனங்கள் இறக்குமதி செய்துகொண்டிருக்க மறுபுறம் தமிழுக்கு டப்பிங் செய்யப்பட்ட மலையாள பாலியல் படங்களும் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன. தமிழ் சினிமா திரையரங்குகள் மாத்திரமல்ல இது வரை சிங்கள, ஆங்கில திரைப்படங்களை காண்பித்துக்கொண்டிருந்த திரையரங்குகள் கூட சந்தையை விளங்கிக்கொண்டு மலையாளப்படங்களை வகைதொகையில்லாமல் எடுப்பிக்க தொடங்கியுள்ளன.

திரைப்படத்துறையில் முதலிடுபவர்கள் இந்த போக்கை கிரமமான முறையில் தொடர்ந்து வருகிறார்களென்றால் எந்தளவுக்கு லாபத்தைக் கொட்டிக்குவிக்கிற வியாபாரமாக "பாலியல் விவகாரங்களை விற்றல்" என்பது ஆகிவிட்டிருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது.

1977 ஜே.ஆர் ஆட்சியில் அமர்ந்ததோடு திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகமானது. அந்நிய பல்தேசியக் கம்பனிகள் இலங்கையில் கடைவிரிக்கத் தொடங்கின. அந்நியருக்கு நாட்டின் சொத்துக்களை தாரை வார்க்க தாக்குப்பிடிக்கக்கூடிய அரசாங்கம் தேவைப்பட்டது. தனக்குக் கிடைத்த 6இல் 5 பெரும்பான்மை பாராளுமன்றப் பலத்தைக் கொண்டு மாற்ற கடினமான அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. பல்தேசியக் கம்பனிகள் தமது சந்தையை நிறுவவும், நிலைநிறுத்தவும் தமது பொருட்கள் பற்றிய விளம்பரங்களை ஊதிப் பெருப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. புதிய நுகர்பொருட்களை அறிமுகப்படுத்தி புதிய நுகர்பொருள் கலாசாரத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தை அவை உணர்ந்தன. இதன் விளைவாக மலினக் கலாசாரத்தை பரப்புகின்ற தந்திரோபாயங்களைக் கையாண்டன. இவற்றின் விளைவாக இலங்கையில் பாலியல் திரைப்படங்கள் தொடக்கம், மேற்கத்தேய கலாசார மோகத்தை ஏற்படுத்துகின்ற, போதைக்குள்ளாக்குகின்ற சஞ்சிகைகள் எல்லாம் கணக்கு வழக்கில்லாமல் வந்து குவிந்து கொண்டிருந்தன. திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக ஏற்பட்டு வந்த உற்பத்தி, உழைப்பு, வளங்கள் மீதான சுரண்டலையும் நாட்டின் நெருக்கடிகளையும் கண்டு, இளம் சந்ததியினர் மத்தியில் எழுச்சிகர சிந்தனைகளோ கிளர்ச்சிகளோ உருவாகாமல் அவை திசைதிருப்பப்படவும் இந்த நுகர்பொருள் கலாசார மோகம் திணிக்கப்பட்டன. போதைப் பொருட்கள் வகைவகையாக வந்து குவிந்தன. ரேஸ் புக்கிகள் வீதியெங்கும் முளைத்தன. பாலியல் தொழிலுக்கு- குறிப்பாக சிறுவர் பாலியலுக்குப் -பேர் போன நாடாக உலக வரைபடத்தில் இலங்கைக்கு இடம் கிடைத்தது.

இலங்கையின் போரின் உண்மையான முகத்தை காட்ட விளைகிற திரைப்படங்கள் கூட தணிக்கைக்கும், தடைக்கும் உள்ளாக்கப்படுகின்ற நிலையில், இவ்வாறான திரைப்படங்கள் அனுமதிக்கப்படுவதன் அரசியல் விளங்கிக்கொள்ளப்படவேண்டியது.

பாலியல் குறித்த எதுவித அறிவூட்டலோ, கல்வியூட்டலோ இல்லாத நிலையில் இப்படிப்பட்ட திரைப்படங்கள் குற்றச்செயல்களை அதிகரிக்கச் செய்வதோடு பாதுகாப்பற்ற பாலுறவை நாடிச்செல்ல தூண்டப்படுகிறது. பாலியல் தொழிலை வளர்த்தெடுப்பதில் இவை போன்றவற்றின் பாத்திரம் முக்கியமானதாகும்.

## விடுபட்டுப் போய்விடக் கூடாத சில விடயங்கள் -6

# இலங்கையிற் சிறுபான்மையினரின் இருப்புப் பற்றிய சிங்களக் கருத்தொருமிப்பு!

### - ஒரு தமிழ் நிலை நோக்கு

*- சி.சகாதேவன்*

இலங்கையின் இனக் குழுமப் பிரச்சினை ஒளிவுமறைவற்ற அரசியல் பிரச்சினையான காலம் முதல் (1956) அரசாங்கங்கள் எடுத்து வந்த தீர்வு முயற்சிகள் பலிதமற்றுப் போனதற்கு முக்கியமான காரணம், சிங்களப் பெருங்கட்சிகளிடையே இது பற்றிக் கருத்தொருமிப்பு இல்லை என்பது தான். ஒரு கட்சி அரசாங்கத்திலிருக்கும் பொழுது மற்றைய கட்சி, அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை எதிர்த்து வருவதென்பது இலங்கைப் பெருங்கட்சி அரசியலின் மாறாத நடைமுறையாகும்.

இதனை விளக்குவதற்கான உதாரணங்கள் பற்றிப் பேசுவதிலும் பார்க்க இந்த நிலைப்பாட்டை "உடைப்பதற்கு"எடுக்கப்பட்ட சில முயற்சிகள் பற்றி நினைவு கூருவது நல்லது.

சிங்களப் பெருங்கட்சிகள் தாம் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் "எவ்வளவு" கொடுக்கலாம் என்பது பற்றி மங்கள முனசிங்க குழு நிலையிற் பேச முயன்றனர். (அப்பொழுதுதான் வடக்குக் கிழக்குக்கு தனித்தனி மாகாணசபை என்றும், பின்னர் இரண்டு மாகாண சபைகளினதும் உடன்பட்ட ஒருங்கிணைப்பு என்று பேசப்பட்டது). பின்னர் பிரித்தானிய இடையீடு ஒன்று வந்த பொழுது (கன்சர்வேட்டிவ் கட்சி அரசாங்கம் இருந்த பொழுது) அரசாங்க நிலையிலே பேசப்படுவது எதிர்க்கட்சி முதல்வருக்கும் தெரிந்திருத்தல் வேண்டும் என்ற ஒழுங்கு முறை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் (சுதந்திரக் கட்சியின் முதன்மையில் இணைந்த பொதுசன ஐக்கிய முன்னணி) சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் பொழுது எதிர்க்கட்சி முதல்வரை "மேவிச் செய்தல்" என்பது ஒரு மரபாக இருந்தது என்பது தெரிய வருகிறது.

நோர்வேயின் "உள்வருகை"க்கான தேவை ஏற்பட்ட போதும் இந்தக் கருத்தொருமிப்பு இருந்தது.

(ஆனால் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சராக வெளியிட்ட தீர்வு ஆலோசனையில் இலங்கை "பிரதேசங்களின் ஒன்றியமாக" இருக்குமென்ற வாசகத்தை ஐ.தே.க ஏற்றுக் கொள்ளவில்லை. ரணில் விக்கிரமசிங்க கூட தன் எதிர்ப்பை பதிவு செய்து வைத்தார்)

இருபெரும் சிங்களக் கட்சிகள் (கருத்தொருமிப்பு இல்லாவிட்டாலும்) ஒன்றுக்கொன்று முன் கூட்டியே தெரிவித்து தீர்வு ஆலோசனைகளை முன் வைக்க வேண்டுமென்ற நிலையில் தான் சிஹல உறுமய (இதன் தமிழ் தனியே சிங்கள உரிமை அல்ல 'ஸ்ரீலங்காவில் சிங்களவருக்குள்ள பெறுபேற்று உரித்து' என்பதாகும்) தோன்றிற்று.


அப்பொழுது ஜே.வி.பி. நோர்வேயின் வருகையை தலையீடாகக் கருதி எதிர்த்ததே தவிர, தீர்வொன்றை எதிர்க்கவில்லை.

இந்த மாதிரியான ஓட்டங்கள், பாய்ச்சல்களினூடே ஒரு அரசியல் யதார்த்தம் பதிவு செய்யப்பட்டது. - சிங்களப் பெருங்கட்சிகள் இரண்டும் இணையாமல் தீர்வு பற்றிப் பேச முடியாது.

தமிழ்ப் போராட்டத்தின் நிலைப்பாட்டை இது எவ்வளவு பாதிக்கும் என்பதை இந்த இரண்டு கட்சிகளும் உணர்வதிலும் பார்க்க "மூன்றாவது" சக்திகளே அதிகம் உணர்ந்தன.

தமிழ்ப் போராட்டம் உக்கிரமடைந்ததற்கும் தமிழரிடையே நிலவிய கருத்துத் தயக்கங்களுக்கும் ஊடே விடுதலைப் புலிகளிடத்தில் தான் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் கையளிக்கப்பட வேண்டும் என்பதற்கும் தமிழர் அந்தஸ்துப் பற்றிய சிங்களக் கருத்தொருமையின்மையே காரணமாக இருந்தது.

இப்பொழுது (2002) சற்றும் எதிர் பாராத அரசியற் சுழி ஓட்டங்களால் 1954க்குப் பிந்திய இலங்கை வரலாற்றில் நடக்க முடியாத ஒரு காரியம்




நடந்தேறியுள்ளது. (சர்க்கஸ் விளம்பர மொழியிலே சொன்னால் "அதிசயம் ஆனால் உண்மை" "நடக்க முடியாதது நடக்கிறது")

இப்பொழுது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐ.தே.கவும் ஆட்சியிலுள்ளன. ஜனாதிபதி சுதந்திரக் கட்சியினர், பிரதமர் ஐ.தே.கட்சியினர்.

இலங்கையின் சிறுபான்மையின இருப்புப் பற்றிய பிரச்சினையை சிங்கள நிலையிலிருந்து கூறினால் என்ன? இலங்கையின் தேசியப் பிரச்சினையை தேசிய இனக் குழுமங்களின் நிலையில் இருந்து கூறினால் என்ன? இந்தப் பிரச்சினையை இரு பெரும் சிங்களக் கட்சிகளும் ஒத்துப் பேசி கருத்தொருமிப்புடன் தீர்ப்பதற்கான வரலாறு தரும் அரிய சந்தர்ப்பம் இது.

ஆனால் இப்பொழுது நடப்பதென்ன? சிங்களப் பெருங்கட்சிகளிடையேயுள்ள "சனார்ப்பு" ப் போட்டியில் தமிழர் பிரச்சினை மீண்டும் இழுபறிப்படுவதற்கான சகல சகுனங்களும் காணப்படுகின்றன.

இந்த நிலையில் தமிழ் நிலை அங்கலாய்ப்புக்களை சிங்கள மக்கள் புரிந்து கொள்வதற்கான சாத்தியப்பாடே இல்லையா?

தமிழர்கள் தங்கள் உரிமைகள் பற்றிப் பேசுவதும் சிங்களக் கட்சிகளுக்கு விருப்பமில்லை. அதைத் தீர்க்கவும் அவை முன்வர விரும்பவில்லை.

ஆனால் வரும் தீர்வு "எக்கீய"வா (ஒற்றையாட்சி) அல்லது "எக்சத்" (ஒன்றுபட்ட)தா என்று ஆவேசம் கொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது?

"நீங்கள் ஒற்றையாட்சிக்குள்ளே தான் இருக்க வேண்டும். ஆனால் அது எப்படி என்பதில் எமக்கு கருத்தொற்றுமை கிடையாது" என்று சிங்கள மக்கள் - உண்மையில் ஒரு சிங்களக் கட்சியின் தலைமை - கூறுவது எந்தளவிற்குப் பொருந்தும்?

சிங்கள மக்கள் நிலை ஒருமைப்பாட்டினூடாக சகல இனங்களுக்கும் பொதுவான ஒரு தேசியத்தை வளர்த்தெடுத்து விடலாமென்று ஏறத்தாழ 1961 முதல் 42 வருடங்களாக தாங்கள் செய்த அரசியலின் அடிப்படையில் உள்ள "ஓட்டை உடைசலை" இலங்கையின் "பழைய" சோஷலிஸ்டுக்கள் உணர்ந்துள்ளது போல தெரிகின்றது.

ஜனாதிபதியைத் தள்ளிவிடவும் விரும்பாது, சமாதானத்தையும் தள்ளி விடக் கூடாது என்ற நிலைப்பாட்டிற்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். (விக்கிரமபாகு கருணாரத்னவும், வாசுதேவ நாணயக்காரவும் மனம் விட்டுச் சிரித்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பு. இதிலுள்ள சோகம் என்னவென்றால் இந்தப் பழைய இடது சாரிக் கட்சிகள் தங்களின் இந்த நிலைப்பாட்டை அறிக்கை வெளியீட்டுக்கு அப்பாலே கொண்டு செல்லும் பலமில்லாதவர்களாகவே இன்று உள்ளனர். அதுபோகட்டும்) யதார்த்தபூர்வமான உண்மை என்னவென்றால் ஜனாதிபதி தன்னை இலங்கையின் "நிறைவேற்று அதிகார" ஜனாதிபதி என்பதிலும் பார்க்க அடுத்த தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகளை எப்படியோ பெற்று ஆட்சிக்கு வரத் துடிக்கும் ஒரு குடும்பக் கட்சியின் தலைவியாகவே காட்சியளிப்பது தான். (பார்க்க அனுராவின் பேச்சு )

தமிழில் இந்த நாட்டை இலங்கை என்று உரிமை கொண்டாட முடியாத அளவுக்கு ஸ்ரீலங்காவாக மாத்திரமே வைத்திருக்க விரும்பும் எந்தத் தீர்வும் தமிழர்களின் சம்மதத்தைப் பெறாது. (ஸ்ரீலஸ்ரீ கதிர்காமரைத் தவிர)

---

# உங்கள் கைக்கடிகாரத்தைத் தாருங்கள் உங்களுக்கு நேரம் என்ன என்பதைக் கூறுகிறேன்

### தோழர் சோமவங்சவிடமிருந்து தோழர் பிரபாகரனுக்கு ஒரு கோரிக்கை

இவர்கள் இருவருமே ஒன்றில் 'தோழர்கள்' அல்லது பயங்கரவாதிகள். ஆனால் தனிப்பட்ட முறையில் அவர்கள் இருவரையும் தோழர்களாகவே கொள்ள விரும்புகிறேன். அதே நேரம் பிரபாகரனை தோழர் என்று அழைப்பதை அனுமதிக்காத யாராவது சிங்கள தேசபக்தர்கள் இருந்தால் தயவு செய்து சோமவங்சவின் கண்ணாடி வீட்டிலிருந்து வெளியில் வந்து அதனை கூறுமாறு சவால் விடுகிறேன்.




இந்தச் சவால் டில்வின் சில்வா மற்றும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தில் தோழர் சோமவங்ச அமரசிங்க நாட்டுக்குள் உள்ளிடவும் பின்னர் வெளியேறவும் அதன் பின் ரகசியமாக நாட்டில் இருந்து வெளியேறவும் இடமளித்த மற்றும் அவரின் பொதி வண்டியை தள்ளிக் கொண்டு சென்ற போட்டர் தோழர்வரை எந்த ஒருவருக்கும் செல்லுபடியாகும்.

தற்போதைய போர் நிறுத்தமானது புலிகளுக்குக் கப்பம் வழங்குவது என்பது புகழ்பெற்ற கோஷமாகும். இந்தக் கோஷமானது சிங்களவர்கள் பேசுவது போலவே புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு சிங்கள அரசாங்கம் குறித்து கோஷம் எழுப்ப முடியும் என நான் நம்புகிறேன். ஈழக்கோரிக்கையை நான் கைவிட்டால் அன்று என்னைச் சுட்டுக் கொல்லுங்கள் என பிரபாகரன் தனது தோழர்களிடம் முன்னர் ஒருமுறை கூறினார்: அது அப்படி இருக்க பிரபாகரன் தொடங்கி தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட தலைவர்கள் ஈழக்கோரிக்கையுடன் நாங்கள் தொங்கிக் கொண்டிருக்கும் தேவை எமக்கில்லை என பல தடவைகள் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றனர். இந்தப் போர் நிறுத்த முயற்சிகளுக்கிடையிலேயே இக்கருத்துகள் முன்வைக்கப்பட்டன. எனவே நாங்கள் பிரபாகரனுக்கு கப்பம் கொடுப்பதா, பிரபாகரன் நமக்குக் கப்பம் தருவதா என்பது குறித்து அறிவுபூர்வமாக சிந்திக்க வேண்டி இருக்கின்றது. எந்த ஒரு போர் நிறுத்தத்துடனும் இரு தரப்பிற்குமாக விட்டுக் கொடுப்புக் காலம் ஏற்படுத்தப்படுவது வழக்கம். இக்காலப் பகுதிக்குள் இருதரப்பினரும் தத்தமது பலத்தை அதிகரித்துக் கொள்வார்கள் என்பதிலும் சந்தேகம் இல்லை. நாம் எல்லோரும் இதனை விளங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் போர் நிறுத்தம் என்பது போரை முடிவிற்குக் கொண்டுவருவதற்காகவோ போரின் பின்னணியிலுள்ள பிரச்சினைக்கான இறுதித் தீர்வாகவோ அது இருக்க முடியாது. இது தீர்வுக்கான பல நிபந்தனைகளில் ஒன்று மட்டுமே. இவ்வாறான போர் நிறுத்தத்தின் பின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் புலிகள் அமைப்பு மென்மேலும் பலத்தை அதிகரிப்பது வருவது குறித்த கதைகள் எந்த அளவு மாயையானது என்பது குறித்து கடந்த தினங்களில் சுனந்த தேசப்பிரிய ஆதாரங்களோடு சுட்டிக் காட்டி இருந்தார். அந்த விளக்கங்களின்படி கடந்த போர் நிறுத்த காலப் பகுதிகளில் அது முடிந்ததன்பின் போரின் மூலம் கைப்பற்றல்கள் பல அரசாங்கத்தாலேயே இடம்பெற்றிருக்கின்றனவே ஒழிய புலிகளால் அல்ல. புலிகளோ அதைவிட காலம் சென்றே இவ்வகைக் கைப்பற்றலைச் செய்திருக்கிறார்கள்.

இருபது வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் குறித்த புரிதல் இருக்கவில்லை. தமிழ் மக்களின் தனித்துவமான இருப்பு குறித்து ஒன்றும் புரியாததாக இருந்தது. நமது பிரதான அரசியற் கட்சிகள் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் என்பதை தமது தேர்தல் விஞ்ஞாபனங்கள் மூலம் ஏற்றுக் கொண்டிருந்தாலும் நாட்டு மக்களுக்கு அது குறித்த போதிய விளக்கம் இருக்கவில்லை. தமிழ் மக்களை ஏதோ ஒரு வடிவத்தில் புலிகள் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள் என்பதை நமது அரசாங்கங்களோ சிங்கள மக்களோ ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றோ தமிழ் மக்களின் ஒரே ஏகப்பிரதிநிதிகளாக புலிகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதுடன் சாதாரண சிங்கள மக்கள் அதனை ரகசியமாக ஏற்றுக் கொள்கிறார்கள். புலிகள் அமைப்பின் சமூக அரசியல் வெற்றி அது. புலிகள் போரின் மூலம் இதனைப் பெற்றிருக்கலாம்.

சிஹல உறுமய இந்த நாட்டின் மிக மோசமான இனவாத அமைப்பாகும். அது ஒரு அரசியல் இயக்கமல்ல. மக்கள் விடுதலை முன்னணி என்பது ஒரு அரசியல் இயக்கம். அவர்களின் செயற்பாடாக இருந்திருக்க வேண்டியது பிரச்சினையை முகாமைத்துவப்படுத்தி தீர்வுப் பாதைக்கான வழிகாட்டலை புரிந்திருக்க வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதனை விற்றுப்பிழைக்கின்ற நிலைக்கு வந்திருக்கக்கூடாது. அப்படியிருக்க புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றி முன்கூட்டியே தமக்கு காட்டியிருக்க வேண்டும் என குழந்தையோடு சேர்த்து பேசினை வீசியெறியும் அளவுக்கு நாட்டின் முதன்மைப் பெண் பிரஜை ஆளானது துரதிருஸ்டவசமே.

அடக்கப்படும் வர்க்கத்தினரின் விடிவுக்காக தாம் இருப்பதாக கூறுகின்ற மக்கள் விடுதலை முன்னணி வடக்கில் அடக்கப்படும் மக்களுக்கு அஸ்பிரின் குளிசைகள், சைக்கிள் ரயர்கள், மெழுகுவர்த்திகள் அனுப்பப்படுவதைக் கூட புலிகளுக்கு கப்பம் அளிப்பதாக கூறுமளவுக்கு ஆகியிருப்பது மேலும் துரதிஸ்டவசமானது. அவர்களின் கருத்தின்படி புலிகள் ஆயுதங்களை கீழே வைக்கும் வரை (அதாவது விருப்பத்துடன் கையளிக்கும் வரை) மற்றும் ஈழக் கோரிக்கையை கைவிடும் வரை (அதாவது போராட்டத்தைக் கைவிடும் வரை) பேச்சுவார்த்தை கிடையாது. இனி இவை அனைத்தும் முடிந்ததன் பின் பேச்சுவார்த்தை எதற்கு தோழர்களே! தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி போராடுகிறார்கள். வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து மீண்டும் சேவைக்கு திரும்பும்வரை பேச்சுவார்த்தைக்கு சம்மதிக்க முடியாது என முதலாளிமார் கூறுவார்கள்.

ஜே.வி.பி. தோழர்களே பிரான்சிலிருக்கும் உலக புகழ்பெற்ற சமூக விஞ்ஞானியும் அரசியல் செயற்பாட்டளரும், சித்தாந்தவாதியுமான பியரே பூர்தியு (Pierre Bourdieu) கடந்த மாதம் மரணமானார். அவரின் புகழ் பெற்ற வசனமொன்று உள்ளது. உங்கள் கைக்கடிகாரத்தைத் தாருங்கள் உங்களுக்கு நேரம் என்ன என்பதைக் கூறுகிறேன். இவர் அப்படி கூறியது நவ உவகமயமாக்கல் செயற்பாடுகளுக்குள் முதலாளிமார் தமது உழைப்பாளர்கள் குறித்து விளக்கமளிக்கையிலேயே. போராளியின் போராயுதத்தை முதலாளிகளுக்கு வழங்கியதன்பின் தொழிலாளர்களுக்கு எஞ்சுவது காற்று மட்டுமே என்பதை உங்களுக்கு விளங்கிக்கொள்ளமுடியும் என நம்புகிறேன். புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என நீங்கள் கூறுகின்ற போது அவர்களிடம் நீங்கள் கேட்பது.

'உங்கள் கைக்கடிகாரத்தை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்குங்கள். இலங்கை அரசாங்கம் உங்களுக்கு நேரம் என்ன என்பதை சொல்லித்தரும்' என்பதே.

*-காமினி வியங்கொட*

# ஜே.வி.பியின் அரசியற் சூதாட்டம்!

- விக்டர் ஐவன்


மக்கள் விடுதலை முன்னணி தனது அரசியல் நடைமுறையோடு பயங்கரமான சூதாட்டமொன்றில் ஈடுபட்டு வருவது போல் தெரிகின்றது. இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினா் இனவாத ரூபத்தில் கிளா்ந்தெழுந்தது ஆயுதப் போராட்டமொன்றிற்கான ஒரு சந்தா்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே. அவா்களால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தில் வெற்றி கொள்ள முடியாமல் போனாலும், நாட்டை முழுமையாகவே ஸ்தம்பிதமடையச் செய்யுமளவுக்குப் பலம் கொண்ட கிளா்ச்சியொன்றை முன்னெடுத்துச் செல்ல முடிந்தது.

தற்போது அவா்கள் ரணில் விக்ரமசிங்கவின் சமாதான நடவடிக்கைகளை எதிா்த்து நிற்பதும், இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு எதிா்ப்பைத் தெரிவித்ததிற்கு சமமான ஒன்றே இருந்தாலும் இங்கு அவா்கள் ஆயுதங்களுடன் கூடிய எதிா்ப்பைத் தெரிவிக்க எண்ணாமல், அதற்குப் பதிலாக ஜனநாயக முறையினால் தமது சக்தியைப் பலப்படுத்திக் கொள்ள எண்ணுகிறாா்கள். இதனால் அவா்கள் எதிா்பாா்ப்பவை சரிந்து விழுவதற்காக உள்ள சந்தா்ப்பங்கள் அதிகமென்றே கூற வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியினரின் இந்த நாடகத்தில் பொருத்தமில்லாத இடங்கள் பலவும் உள்ளன. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் 13வது மறுசீரமைப்புப் பான்றே, மாகாண சபை முறையும் நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தும் முறை என்றே கூறினா். இருந்தாலும் அந்த முறையினால் நாடு இரண்டாகப் பிளவுபடவில்லை என்பதோடு மக்கள் விடுதலை முன்னணியினரும் அது சம்பந்தமாகத் தாம் மேற்கொண்ட கடுமையான விமா்சனங்களை மறந்து விட்டு பல வருடங்கள் கழித்து மாகாண சபை முறையின் ஆா்வமிக்க பங்குதாரா்களாக மாறினா். தற்போது மக்கள் விடுதலை முன்னணியினருக்கு 16 பாராளுமன்றப் பிரதிநிதிகள் இருந்த போதிலும் 13 வது சீா்திருத்தத்திற்கு எதிராகவோ, அல்லது மாகாண சபை முறைக்கு எதிராகவோ பிரேரணையொன்றை பாராளுமன்றத்தில் முன்வைக்கவில்லை.

ஒன்றில் அவா்களது கடந்தகால நிலை தவறாக இருத்தல் வேண்டும். இல்லையேல் தற்போதைய நிலைப்பாட்டில் தவறு இருக்க வேண்டும்.

13 வது மறுசீரமைப்பிற்கும், மாகாண சபை முறைக்கும் எதிரான அவா்களது கடந்தகால நிலை தவறாயின் அது சம்பந்தமாக ஒரு பயங்கரமான ஓவியத்தை வரைந்து அதற்கு ஆதரவு தெரிவித்தவா்களைக் கொலை செய்தல், அவா்களது சொத்துக்களை அழித்தல் சம்பந்தமாக பொதுமக்களிடம் மன்னிப்பைக் கேட்டிருக்க வேண்டும். இருந்தாலும் இன்று வரை அவா்கள் அவை சம்பந்தமாக கவலையைக்கூடத் தெரிவிக்கவில்லை. அதற்குப் பதிலாக மேற்கொண்டிருப்பது முழு மனதுடன் எதிா்த்த, நாடு இரண்டாகப் பிளவுபட சந்தா்ப்பத்தை ஏற்படுத்துமெனக்கூறிய மாகாண சபை முறையின் பங்குதாரா்களாக மாறியிருப்பதே.



மக்கள் விடுதலை முன்னணி இனப்பிரச்சினை சம்பந்தமாக பின்பற்றும் கொள்கை சரியானதல்ல என்பதை உறுதி செய்ய அந்த ஒரு காரணம் மட்டும் போதுமானதாகும்.

இருந்தாலும் தற்போது அவா்கள் தோ்ந்தெடுத்துக் கொண்டிருக்கும் துவேஷ வழிமுறையை, சமாதானமான வடிவமொன்றினால் முன்னெடுத்துச் செல்ல அக்கட்சியினா் விரும்புவாா்களெனில், தமது கட்சித் தொண்டா்களுக்கு உயிரைப் பணயம் வைக்கும் ஒரு நிலையைப் பெற்றுக் கொடுக்காமல் போனாலும், அரசியல் ரீதியாக பொது மக்கள் சிரிக்கும் நிலைக்குத் தள்ளப்படுவது தவிா்க்க முடியாதாகி விடும்.



ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சி தோல்வியில் முடியுமெனில், அதனால் உடனடி அரசியல் இலாபத்தைப் பெற்றுக் கொள்ளும் சந்தா்ப்பத்தில் மக்கள் விடுதலை முன்னணி இருந்தாலும் ரணிலின் முயற்சி தோல்வியுறுமேயாயின் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி மட்டுமல்ல, ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிராகச் செல்லும் மக்கள் விடுதலை முன்னணி மட்டுமல்ல, பொதுசன ஐக்கிய முன்னணியும் கூட அழிந்து போவது தடுக்க முடியாததொன்றாகி விடும்.

மக்கள் விடுதலை முன்னணி ஒரு மாா்க்ஸிஸக் கட்சியாக முன்னின்றாலும், மாா்க்ஸிஸத்தில் வரும் காலம், அவகாசம் என்ற கோட்பாடு பற்றிய தெளிவு அதற்கு இருப்பதாகத் தெரியவில்லை.

வரலாற்று ரீதியாக இனவாதத்தை ஆயுதமாகக் கொண்டு ஆட்சி செய்யும் ஒரு அரசாங்கத்தை வீழ்த்தி அதிகாரத்திற்கு வருவதற்கான அவகாசங்கள் கடந்த காலங்களில் இருந்தன. இருந்தாலும் தற்காலத்தில் அதற்கான சந்தா்ப்பங்கள் இல்லையென்றே கூற வேண்டும். தற்காலத்தில் இனவாதத்தை ஆயுதமாகக் கொண்டு, தீா்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் தடங்கலாக இருக்க முடியும். இருந்தாலும் அதனால் ஏற்படும் தடங்கல்கள் கடந்த காலங்களில் போன்று எதிா்கட்சிகளுக்கு வெற்றிக்கான சந்தா்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கப் போவதில்லை. பதிலாக சோ்ந்து அரசாங்கக் கட்சி மட்டுமன்றி எதிா்க்கட்சிகளும் ஒன்றாக அழிந்தே செல்லும்.

இந்த அா்த்தத்தில் பாா்க்கும்போது கம்பியில் பயணம் செய்ய வேண்டியிருப்பது ரணில் விக்ரமசிங்க மாத்திரமல்ல. பொதுசன ஐக்கிய முன்னணியின் சந்திரிகா குமாரதுங்காவும், மக்கள் விடுதலை முன்னணியின் விமல் வீரவன்சவும் மட்டுமன்றி முழுச் சமுதாயமும் தான்.

ஏற்பட வேண்டிய ஒரே நன்மையான விடயம் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சி வெற்றியளிப்பதே. அது அவ்வாறு நடந்தாலும் மக்கள் விடுதலை முன்னணியினா் தற்போது இருக்கும் நிலையினால் பாரிய பிரச்சினைகள் ஏற்படுவதும் தவிா்க்க முடியாததாகியுள்ளது. சமாதானமும் உடனடியாகக் கிடைத்து விடுமென எதிா்பாா்க்க முடியாது. அதற்காக வேண்டி வைக்கும் ஒவ்வொரு அடியும் நாட்டுக்கு நல்ல பெறுபேறுகளையே பெற்றுத் தரும். அவ்வாறு கிடைக்கும் அனைத்து நல்ல பெறுபேறுகளும் திருப்பி சமாதானத்திற்கான சமுதாய ஆா்வத்தை பலப்படுத்த காரணமாக அமைவதோடு, இனவாத சக்திகளின் பலம் குன்றவும் காரணமாக அமைந்துவிடும்.

மக்கள் விடுதலை முன்னணியினா் தற்போது வரைந்து கொண்டிருக்கும் பயங்கரமான சித்திரத்திற்கு மாறாக பொது மக்களுக்கு தீா்வின் மூலம் கிடைக்கும் பெறுபேறுகள் இனிமையானதாக இருப்பின் மக்களின் மக்கள் விடுதலை முன்னணி பற்றிய நோக்கும் கசப்பானதாக அமையும்.

ஜனாதிபதியோடு கூட்டுச் சோ்ந்திருக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கு இப்போ நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறையும் இனிமையானதாகவே மாறியுள்ளது. தற்போது நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியிடமிருந்து எந்த விதமான சைகைகளும் வருவதில்லை. அதற்கு எதிராக இப்போது அவா்கள் ஊா்வலங்கள் செல்வதுமில்லை. ஜனாதிபதி இனிமையாக மாறும் போது ஜனாதிபதி முறைமை கற்கண்டாக மாறியுள்ளது.

17வது சீா்திருத்தம் தம்மால் பெற்றுத் தரப்பட்ட வெற்றியென மக்கள் விடுதலை முன்னணியினா் ஆடம்பரமாகக் கூறிவந்தனா். இருந்தாலும் சென்ற பொதுத் தோ்தலின் போது 17வது சீா்திருத்தத்தின் மூலம் பெற்றுக் கொண்ட சட்ட திட்டங்களை ஜனாதிபதி பச்சை பச்சையாக மீறிக் கொண்டிருக்கும் போதும் மக்கள் விடுதலை முன்னணியினா் அவருக்கு எதிராக எதுவுமே பேசவில்லை. தற்போது அரசியலமைப்புச் சபைக்கு ஜனாதிபதி தனது பிரதிநிதியை நியமிக்காமல் தொடா்ந்து காலம் தாழ்த்தும் கொள்கையை கடைப்பிடித்து வரும் நிலையிலும் மக்கள் விடுதலை முன்னணி மௌனமாகவே உள்ளது.

மக்கள் விடுதலை கட்சி 1977ம் ஆண்டு பொதுத் தோ்தலின் பின்னா் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஒத்துழைப்போடு ஶ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு எதிராக "பயணத்தின் முடிவு" என்ற கோஷத்தின் கீழ் பொதுக் கூட்டங்களை நடாத்தியது. அன்று மக்கள் விடுதலை முன்னணிக்கு, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மேட்டுக்குலக் கட்சியாகவே காட்சியளித்தது. அக் கட்சியின் தொண்டா்களை 'வளவிற்கு' பணிவிடைகள் செய்யும் அரசியல் அடிமைகளென்று அவா்கள் கூறினாா்கள். ஜனாதிபதி ஜே.ஆா்.ஜயவா்தனாவிற்கு சிறிமா பண்டாரநாயக்க அம்மையாரின் பிரஜா உரிமையை இல்லாமல் செய்ய வேண்டி வந்தபோது அதற்காக நிபந்தனைகளற்ற ஒத்துழைப்பை வழங்கியது மக்கள் விடுதலை முன்னணியினரே. இருந்தாலும் இப்போது விமல் வீரவன்சவிற்கு ஶ்ரீலங்கா சுதந்திர கட்சி ஒரு இடதுசாரிக் கட்சியாகவே தெரிகின்றது. அதன் கட்சி அங்கத்தவா்கள் அவரது பாா்வையில் தேசப்பற்று மிக்க இடதுசாரிகளாவா். ஜனாதிபதி ரோஸா லக்ஸம்போ்க் ஆகத் தெரிகிறாா்!

மக்கள் விடுதலை முன்னணியின் இந்தப் புதிய நாடகம் ரோஹன விஜேவீரவிற்கும், விஜய குமாரதுங்கவிற்கும் எவ்வாறு தோன்றியிருக்கும் என்பதையறிய எந்தவிதமான வழிமுறைகளும் இன்று இல்லை. இது சம்பந்தமாக அவா்களது விளக்கத்தைப் பெறச் சந்தா்ப்பம் உண்டெனில் அது ஒரு சுவையான விளக்கமாக இருக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ○

# சிறுவர்கள் பெண்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம் தொண்டர் நிறுவன ஊழியர்கள் மீது குற்றச் சாட்டு!

-ரட்ணம்

வேலியே பயிரை மேய்ந்த கதை என்று சொல்லப்படுவதுண்டு. சில சமயங்களில் சில இடங்களில் வேலியே பயிரை அழித்த கதைகளும் வெளி வருவதுண்டு.

மேற்கு ஆபிரிக்காவில் அகதி முகாம்களில் "தொண்டு" புரியும் "உதவி வழங்கும்" பணியாளா்கள் அங்குள்ள அகதி முகாம்களில் சிறுவா்கள் பெரும்பாலானோரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியிருப்பது தெரியவந்திருக்கிறது. இதனைத் தொடா்ந்து அகதிகளுக்கான ஐ.நா. உயா் ஸ்தானிகராலயம் மேற்கு ஆபிரிக்காவிலுள்ள அகதி முகாம்களுக்கு விசாரணைக் குழுக்களை அனுப்பி வைத்திருக்கிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால், அகதிகளுக்கான ஐ.நா. உயா் ஸ்தானிகராலயம் உட்பட நாற்பது உதவி முகவா் நிறுவனங்களைச் சோ்ந்தவா்கள் மீது இக்குற்றச் சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலும் உள்ளூா்காராா்கள் உட்பட 67போ் மீது பாலியல் துஷ்பிரயோக புகாா்களை சிறுவா்கள் தெரிவித்திருக்கின்றனா்.

பிரிட்டனைத் தளமாகக் கொண்ட 'குழந்தைகளைக் காப்பாற்று" எனும் நிறுவனத்துடன் இணைந்து ஐ.நா. அகதிகள் உயா்ஸ்தானிகராலயம் வெளியிட்ட அறிக்கையில் இப்பிரச்சினையின் பாரியதன்மையைக் கண்டு நிவாரணப்பணி அதிகாரிகள் அதிா்ச்சியடைந்தனா். இந்த அறிக்கை இன்னமும் பிரசுரத்திற்கு வெளியிடப்படவில்லை. கடந்த ஒப்டோபா் மாதத்திலிருந்து நவம்பா் வரை ஆறுவார காலங்களில் லைபீரியா, சியாரலியோன், கினியா ஆகிய நாடுகளிலுள்ள அகதி முகாம்களைச் சோ்ந்த 1500 போ்களைப் பேட்டிக் கண்டு ஆராய்ந்ததிலிருந்து பெறப்பட்டவற்றை இது அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

தங்களுக்கு உணவு மற்றும் சலுகைகளைப் பெறுவதற்காக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவதாக குறிப்பிட்டுச் சொல்ல முடியாத அளவினா் தமது பேட்டியில் புகாா் கூறியுள்ளனா்.

இந்தப் பாலியல் குற்றச் சாட்டில் மேற்கு ஆபிரிக்கப் பிராந்தியத்தில் ஐ.நா. அமைதிப்படையினரும் சம்பந்தப்பட்டிருப்பதாக தெரிவித்திருக்கின்றனா்.

பாலியல் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டவா்கள் பெரும்பாலும் பதினெட்டு வயதுக்குட்பட்டவா்களேயென்று பலரும் சொன்னாலும் இவா்களையும் விட மிகவும் வயது குறைந்தவா்களே துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறாா்களென்று கூறப்பட்டதாக உயா்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

ஒழுங்கு நடவடிக்கைக் குறைபாடும் சா்வதேச உத்தியோகத்தா்கள் இல்லாததுமே இவ்வித பாலியல் துஷ்பிரயோகத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. ஆனால் இதற்கு வறுமை தான் முக்கிய காரணம். தாங்கள் உயிா்வாழ்வதற்காக தங்கள் பிள்ளைகளின் (நிவாரணப் பணியாளா்களுக்கு) உடலை விற்க வேண்டிய நிா்ப்பந்தம் பெற்றோா்களுக்கு உண்டாகிறது.

'அவா்கள் தங்களைக் காதலிக்கச் சொல்லுகிறாா்கள், அப்படிச் செய்தால் அவா்கள் பணம் தருக்கிறாா்கள்" என்று ஒரு அகதி, நிவாரணப் பணியாளா் பற்றிச் சொன்னாா்.

ஒரு நிவாரணப் பணியாளரின் விருப்பப்படி அவருடன் பாலுறவு வைத்துக் கொள்ள மறுத்த காரணத்தால் உணவு மற்றும் உதவிபெறுவதற்கான வரிசையில் தொடா்ந்து பின்னுக்கே தள்ளப்பட்டதாக மற்றொரு பெண் சொன்னாள்.

உணவுப் பொருள்களை மட்டுமல்ல கடன் வசதிகளையும் புலமைப் பரிசில்களையும் கூட பாலியல் பெற்றுக் கொடுக்கிறது.

பாலியலில் சம்பந்தப்படும் இந்த நிவாரணப் பணியாளா்கள் ஆணுறைகளைக் கூடப் பயன்படுத்துவதில்லை.

இந்தத் துஷ்பிரயோகங்களுக்கு முடிவு கட்டுவதற்கு இந்த ஆய்வின் மூலம் கிடைத்த தகவல்களைப் பயன்படுத்துவதற்கு உறுதி கொண்டிருப்பதாக 'குழந்தைகளைக் காப்பாற்றும்" நிறுவனம் தெரிவித்துள்ளது.

'சேவை செய்வதற்கு உதவுபவா்களே துஷ்பிரயோகம் செய்கிறாா்கள்" என்று குழந்தை களைக் காப்பாற்றும் அமைப்பின் லைபீரிய பணிப்பாளா் ஜேன்கிப்ரில் சொன்னாா்.

தாங்கள் பெறும் சேவைகளுக்காக தங்கள் உடலை விற்க வேண்டிய அவசியம் சிறுவா்களுக்கு இல்லையென்பதை உறுதிப்படுத்தும் சில வித்தியாசமான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்ள முயற்சி செய்யப் போகிறோம். என்று கிரில் மேலும் சொன்னாா்.

குழந்தைகளைக் காப்பாற்றும் உதவி நிறுவனம் ஏற்கெனவே மூன்று ஊழியா்களை வேலை நீக்கம் செய்திருக்கிறது.

மாற்று நடவடிக்கையாக ஐ.நா. அகதிகளுக்கான உயா் ஸ்தானிகராலயம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிப்பு, முகாம்களில் சா்வதேச ஊழியா் நியமனம் குறிப்பாக பெண் ஊழியா் நியமனம் ஆகியவை இதன் சில நடவடிக்கைகளாகும். ○

# மலையக தமிழ் பெண்கள்: பெண்ணியமும் தேசியமும்

-துஷ்யந்தி-

பெண்ணியம் என்பது கோட்பாட்டு செயற்பாட்டிற்கும் அறிவுத்துறை உரையாடலுக்குமானது எனும் கருத்து பெண்ணியத்தை வாழ்வு-முறையாக, போராட்ட அரசியலாகக் கொண்டிருக்கும் பெண்களினால் முறியடிக்-கப்பட்டு வருகிறது. சமூகத்தின் ஒவ்வொரு விளிம்புநிலைப் பெண்ணுமே தன்மீதான அடக்குமுறைக்கெதிராக போராடுவதன் மூலமாக பெண்ணியப் போராளியாக உருவாகிறார் என்பது மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது. மலையகப் பெண்களின் வாழ்வில் பெண்ணியம் போர்க்குணாம்சம் மிக்க ஒரு அரசியல் ஆயுதமாகப் பிரயோகிக்கப்படுவது பற்றிய உரையாடலாக இது அமையுமாயின் எனது இச்சிறு முயற்சி வெற்றி பெறுமென நம்புகிறேன்.

காலனிய காலத்தில் தமிழகத்தில் இருந்து இலங்கைத் தீவிற்கு புலம்பெயர நேர்ந்த தமிழ் மக்கள் இத்தீவில் தாம் படைத்த சாதனை-களாலும், எதிர்கொண்ட கடின வாழ்வு, கூட்டுத் துயரங்கள், தம்மீது திணிக்கப்பட்ட சிங்கள சோவினிச அடக்குமுறைகள், அதற்கெதிராக அவர்கள் மேற்கொண்டுவரும் போராட்டங்கள். என்பவற்றினூடாக தமக்கிடையே பொதுவான வரலாற்று உணர்வைக் கொண்டுள்ளனர். இந்த பொதுவான வரலாற்று உணர்வு இம்மக்கள் திரளினரை ஒரு தனித்துவமான தேசமாக திரட்சியுறச் செய்துள்ளது. இது மலையக தமிழ் தேசம் எனும் அடையாளப் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது.

ஒவ்வொரு தேசமும் தனக்கேயுரித்தான குறிப்பான அரசியல் பண்புகளையும் அடை-யாளங்களையும் குறியீடுகளையும் தமது தேச உருவாக்க இயக்கப் போக்கினூடே உருவாக்கிக் கொள்கின்றன.

மலையக தமிழ் தேசமும் தனக்கான குறிப்பான அரசியல் பண்புகளையும் அடை-யாளங்களையும் குறியீடுகளையும் கொண்டுள்ளது. மலையக தேச உருவாக்கத்தில் எண்ணிக்கை பெரும்பான்மையாக இருப்ப-வர்கள் பெருந்தோட்ட உற்பத்தித்துறையுடன் பிணைக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்கள் ஆவர். அவ்வகையில் மலையக தேசத்தின் தேசஅரசியல் மற்றும் சமூக வாழ்வை தீர்மானிக்கும் உள்ளாற்றல் பெருந்தோட்டத்-துறை தொழிலாள மக்களுக்கே உள்ளது. மலையக தேசம் சார்ந்து அரசியல் அதிர்வை ஏற்படுத்தும் பிரிவினராக, தொழிலாளர்களே உள்ளனர். இவ்வகையில் இத்தொழிலாள மக்கள் பிரிவினர் மலையக தேசத்தின் அரசியல், சமூக குறியீடாகத் திகழ்கின்றனர்.

இலங்கைத் தீவில் வேறெந்த தேசமும் உற்பத்தித்துறையுடன் பிணைக்கப்பட்ட தொழிலாள மக்களை அதிபெரும்பான்மையாக கொண்டதாகவோ, தொழிலாளர்களை பிரதான இயங்குசக்திகளாகக் கொண்டு தமது தேசிய வாழ்வை முன்னெடுப்பதோ இல்லை. மலையக தமிழரின் தேச உருவாக்கம் தொழிலாள மக்களை மையப்படுத்தி திரட்சி பெற்றிருப்பது மலையகத் தமிழ்த் தேசத்திற்கே உரித்தான சிறப்பம்சமாகும். தொழிற்சங்கங்களின் மூலம் விரிவான அமைப்பு வடிவம் கொண்டிருப்பது, தமது உரிமைகள் சார்ந்து ஒன்றிணையும் பண்பு, தொடர்ச்சியான போராட்ட அனுபவங்கள் என்பனவும் மலையக தமிழ் தேசத்தின் விசேடித்த பண்புகளாகும்.

மலையக தேசத்தில் எண்ணிக்கை பெரும்-பான்மையினராக இருக்கும் தொழிலாளர்களில் அரைவாசியினர் பெண்களாவர். அவ்வகையில் உற்பத்தித்துறை சார்ந்த பெண்களை அதிகளவில் கொண்ட தேசமாக மலையக தமிழ் தேசம் அடையாளம் பெற்றிருப்பது இத்தேச உருவாக்கத்தின் இன்னொரு சிறப்பம்சமாகும். மலையக தமிழ் பெண்களில் தொழிலாள பெண்களே எண்ணிக்கையில் பெரும்பான்மை-யாக இருப்பதால், ஒட்டுமொத்த மலையக




தமிழ்ப் பெண்களினதும் அரசியல் அடையாளம், போராட்டங்கள், விடுதலை என்பன தொழி-லாளப் பெண்களால் தீர்மானிக்கப்படுவதாக உள்ளது. அவ்வகையில் மலையக தமிழ்ப் பெண்களில் பிரதான சமூக, அரசியல், போராட்ட இயங்குசக்திகளாக இருப்பவர்கள் இவர்களே.

எனவே மலையக தமிழ் பெண்களது பெண்ணிய அரசியல் என்பது பிரதானமாக தொழிலாளப் பெண்களது அரசியலாகவே அணுகப்படுகிறது. அவ்வாறு அணுகுவதுதான் பொருத்தமானது.

தேசம் என்பது பொதுவான வரலாற்று உணர்வைக் கொண்டிருக்கும் மக்களின் திரட்சி எனக்கொண்டால், தேசத்தின் நீடித்த இருப்பு பெண்களில் தங்கியுள்ளது. தமது மறுஉற்பத்தி ஆற்றலின் மூலமாக பெண்கள் தேசத்தை உயிரியல் ரீதியாக மறுஉற்பத்தி செய்கின்றனர். இதனால்தான் பிற்போக்கு தேசிய சக்திகள் பெண்களின் உடல்மீது, கருவளத்தின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கின்றனர். பிற்போக்கு தேசிய சக்திகளால் கருக்கலைப்பு, கருத்தடை என்பன தண்டனைக்குரிய குற்றமாக்கப்படுகிறது. பெண் அடக்குமுறை தீவிரம் பெறுகிறது. இது தேசிய அரசியலின் பெண்களுக்கு பாதகமான, எதிர்மறையான பண்பாகும். பெண்கள் தேசத்தை உயிரியல் சார்ந்து மறுஉற்பத்தி செய்வதை பெண்ணிய சக்திகள் நேர்மறை அர்த்தத்தில் பெண்களுக்கு சாதகமான அரசியலாக வளர்த்தெடுத்திட வேண்டும்.

மலையக தேசத்தின் 150 ஆண்டுகால வரலாறு என்பது மலையக பெண்களின் உயிரியல் மறுஉற்பத்தியின் வரலாறாகவும் உள்ளது. அன்றைய மூத்த தாய்மாரின் பிரசவ வேதனையும், பாலாக மாறிய அவர்களின் இரத்தமும் தான் இன்றைய 150 ஆண்டுகால வரலாற்றையுடைய, பொருளாதார, சமூக, அரசியல் வாழ்வையுடைய, பல்வேறு போராட்டங்களை கண்ட தேசமாக மலையக தமிழ் தேசத்தை உருவாக்கியுள்ளது. அவ்வகையில் மலையக தமிழ் தேசத்தில் பெண்களின் பாத்திரம் முதன்மையானது.

சிங்கள சோவினிசம் மலையக தமிழர் மீது கட்டவிழ்த்துவரும் அடக்குமுறைகளை மலையக ஆண்களும் பெண்களும் ஒருங்கே எதிர்கொண்டு வருகின்றனர். மலையக தேசத்தை நிர்மாணிக்கும் சக்திகளாக பெண்கள் இருப்பதால் மலையக பெண்கள் மீது குறிப்பான வடிவிலான ஆணாதிக்கத்துடன் பிணைந்த அடக்குமுறைகளை சிங்கள சோவினிசம் கட்டவிழ்த்து வருகிறது.

இலங்கைத் தீவில் மிகவும் அடக்கப்பட்ட, சமூக மற்றும் அரசியல் அதிகாரங்கள் அற்ற மக்கள் பிரிவினராக மலையக தமிழ் தேசத்தினர் உள்ளனர். மலையக தமிழரின் சமூக வாழ்வில் இரண்டாந்தர பிரஜைகளாக பல்வேறு அடக்கு-முறைகளுடன் போராடிக் கொண்டிருப்பவர்கள் பெண்களே. குறிப்பாக தொழிலாள பிரிவு பெண்கள். அவ்வகையில் மிகவும் நசுக்கப்பட்ட நிலையில் இருக்கும் மலையக பெண்களுக்கு பொருளாதாரம், அரசியல், கல்வி, சுகாதார உரிமைகள், சமூக நலவாழ்வு, கலாச்சார சுதந்திரம், தேசிய சுதந்திரம், அடிப்படை மனிதவுரிமைகள் என்பவற்றை மறுதலித்து, இவர்களை மிகவும் மோசமான அடக்குமுறைப் பிடிக்குள் வைத்திருப்பது சிங்கள சோவினிச அரசிற்கு இலகுவாயுள்ளது.

சோவினிச அடக்குமுறைகள் நீடிக்கும்வரை மலையக பெண்கள் தமது சமூக அளவில் தாம் எதிர்கொள்ளும் ஆணாதிக்க அடக்கு-முறைகளை இனங்காணவும், விழிப்புணர்வடை-யவும், இணைந்து போராடவும், மலையக சமூக வாழ்வில் தமது ஆளுமையை நிறுவவும் முடியாது. அவ்வகையில் மலையக பெண்களின் விடுதலையில் மலையக தேச விடுதலையும் அடங்குகிறது. எனவே மலையக பெண்களின் பெண்விடுதலை வேலைத்திட்டத்தில் மலையக தேச விடுதலை அரசியலை உள்ளடக்குவது மலையக தேசப் பற்றுடையக பெண்ணியவாதி-களினதும் சமூக செயற்பாட்டாளர்களதும் கடமையாகும்.

ஆணாதிக்க சமூக அமைப்பில் தேசிய அரசியலை, தேச விடுதலைப் போராட்டங்களை தலைமை தாங்குவது ஆண்களே. இது சமூக அதிகாரமுடைய ஆண்களை தேசத்தின் பெயரால் பெண்கள் மீது பல்வேறு கட்டுப்பாடுகளையும் அடக்குமுறைகளையும் மேற்கொள்ளும் நிலைமையை உருவாக்குகிறது. எனவே தேசியம் என்பது பெண்களின் இறைமைக்குக் கேடானது எனும் கருத்து அநேகமான பெண்ணியவாதிகளிடம் நிலவுகிறது.

தேசவிடுதலைக்கான செயற்பாட்டில் பெண்கள் தமது ஆளுமையைப் பதிப்பதன் மூலமாகதான் தேச விடுதலையின் பின்னரான சமூக வாழ்வில் தமக்கு சாதகமான சூழலை உருவாக்கிக் கொள்ள முடியும். தேச அரசியலில் பெண்கள் ஒதுங்கியிருப்பது ஆண்களுக்கே வாய்ப்பானதாகிறது. இதனால் பெண்கள் தமது சமூக வாழ்வில் அதிகாரங்களை ஈட்டிக்-கொள்வதற்குப் பதில் மேலும் உரிமைகளை இழப்பதற்குத்தான் வழிவெட்டும். தேசவிடு-தலையில் பெண்களின் பங்கேற்பு என்பது துணைப்பாத்திரம் ஆற்றுவது என்பதிலிருந்து தலைமைத்துவம் வகிப்பது நோக்கி நகர வேண்டும். தேச அரசியலில் ஆணாதிக்க தலைமைத்துவத்தை பெண்ணிய தலைமைத்துவத்தால் பிரதியீடு செய்வதை பெண்கள் இலக்காகக் கொள்ள வேண்டும். ஆணாதிக்கத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையிலான கடினமான போராட்டத்தினூடு-தான் இந்த இலக்கு அடையப்பட வேண்டி-யிருக்கும். எனினும் தம்மீது திணிக்கப்பட்-டிருக்கும் சோவினிச அடக்குமுறைகளை தகர்க்க வேண்டியது அதிக அவசியமிக்கதாக மாறியிருக்கையில் பெண்கள் தேசிய களத்தில் குதிப்பதும் அவ்வாறே அதி அவசியமிக்கதாக உள்ளது.

மலையக பெண்கள் தமது தேசிய வாழ்வில், தேச அரசியலில் தமக்குள்ள உரிமைகளை வென்றுகொள்வதை தமது பெண்ணுரிமைப் போராட்டத்தின் ஒரு பகுதியாகக் கொள்ள வேண்டும். இந்த சர்வதேச பெண்கள் தினம் மலையக தமிழ் பெண்கள் தமது தேச அரசியலில் தமது தலைமைத்துவத்தை நிலைநாட்டுவதற்கான விழிப்புணர்வு தினமாக அமைய சகோதரித்துவ வாழ்த்துக்கள். ○

# தேசியம் தற்காலத்தில் நிலை கொள்ள முடியுமா?

- சுதர்சன்

சோவியத் மீதான உடைவின் பின்னர் உலகில் முதலாளித்துவ பொரு-ளாதார, அரசியல், சிந்தனையைத் தவிர வேறு சிந்தனை உலகில் இல்லை என முதலாளித்துவ தேசத்தினால் பிரச்சாரம் கொள்ளப்பட்டு இருக்கின்ற வேளையில், உழைக்கும் வர்க்கம் முதலாளித்துவ ஆதிக்கத்தினால் ஏற்படும் மாற்றத்தின் போது முதலாளித்துவ உற்பத்தி உறவில் இருந்து தம்மை விலத்திக் கொள்ளாமல் இருக்கும் படியான பாதுகாப்பு நிலை கொண்டு செயற்படும் சிந்தனையில் இறங்கியிருக்கின்ற வேளையில், தேசிய முதலாளித்துவமும் தனது சொந்த இனத்திற்கு முழுவிசுவாசமாக செயற்-பட்டுக் கொள்ளுமா என்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது. ஏனெனில் தேசிய அரசுகள் இன்றைய காலத்தில் சுயாதிபத்தியம் கொண்டு இயங்கிக் கொள்ள எந்த உலக நிறுவனங்களும் அங்கீகரித்துக் கொள்வ-தில்லை. உலக ஏகாதிபத்தியங்களின் நிறுவனங்-களான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றும், பிராந்திய (ஆசிய) அபிவிருத்தி வங்கிகள் என்பவும், உலக வர்த்தக ஒன்றியம் போன்றவற்றின் மூலமும் சட்டதிட்டங்களை உள்நாட்டில் அமுல்படுத்த அழுத்தம் கொடுக்கின்றன.

'உண்மையான பயங்கரவாதிகளை இனங்-கண்டு தண்டிக்கும் நோக்குடன் சர்வதேச உலகம் மேற்கொள்ளும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம்' (ப.3 மாவீரர் நாள் உரை) இவ்வாறு புலிகளின் தலைவர் பிரபாவின் உரையை நிகழ்த்தும் அளவிற்கு அழுத்தங்கள் இருப்பதை இடது-சாரிகள் கவனத்தில் கொள்கின்றனர். புலிகளின் தலைவர் இவ்வாறு உரைநிகழ்த்தும் கட்டாய நிலையை இடதுசாரிகளால் மாத்திரம் தான் புரிந்து கொள்ள முடியும். தற்காலத்தில் மேற்கு தேசத்தின் அழுத்தம் இருப்பதை மக்களுக்கு அறிவிக்க வேண்டும். இன்று சமாதான நீதிவானாகத் தோன்றும் தேசங்கள் யூகோசி-லாவியா மீது குண்டு மழை பொழிந்ததை மக்களுக்கு தெரிவித்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றனர். ஆனால் அறிவு ஜீவிகளோ ஊசலாடும் வர்க்கப் -பிரிவினரின் (TULF, EPRLF (Suresh), TELO, CTC) சந்தர்ப்பவாதக் கூட்டை தேசியத்தின் (தமிழ்-தேசியவாதம்- கூட்டமைப்பு பலம் பெறுவதை விரும்பாதோர் தேசியவாதத்தை கொச்சைப்-படுத்துகின்றனர் -வீரகேசரி 17.02.02) கூட்டு என அழைத்துக் கொள்கின்றனர். அதேவேளை முதலாளித்துவ சிந்தனையில் நிறுவன மயப்படுத்தப்பட்ட மக்களிடையே பாராளு-மன்றத்தின் மூலமாக பிரதிநிதித்துவம் செய்து கொண்டு பிரச்சாரத்தில் ஈடுபட முடியும் என்பதை ஏற்றுக் கொள்கின்ற வேளையில், இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வர்க்கமானது ஊசலாடும் பிரிவினர் என்பதை கட்டாயம் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். அத்துடன் இந்த ஊசலாடும் பிரிவினரை ஒன்றுபடுத்திச் செல்லும் திறமை புலிகளிடம் தற்பொழுது காணப்படுவதால் இந்நிலையை இடதுசாரிகள் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் கூட்டமைப்பு வர்க்கச் சிந்தனைக்கு அப்பாற்பட்டது என்று கருதுவதை ஏற்றுக் கொள்ளாத வேளையிலும், இப்பிரிவினரைப் பற்றி மக்களிடத்தில் எச்சரிக்கை விடுவதிலும் எந்தத் தவறும் இல்லை.

தேசியம் தற்காலத்தில் உலகமயமாதலுக்கு நிகராக தன்னை நிலை நிறுத்த முடியாமல் இருப்பது என்பதே உண்மை நிலையாகும். இதில் இலங்கையின் சிங்கள இனவெறி அரசாங்கம் கூட தனது இனத்திற்கு துரோகம் செய்யாமல் இருக்க முடியவில்லை. உலக நிறுவனங்களின் அழுத்தத்தினால் அரச திணைக்களங்களை தனியார் மயமாக்கி தொழிலாளர்களை நடுத்தெருவில் நிற்பாட்ட-வில்லையா? ஏன் தமிழ் தேசியமும் இவ்வாறான இக்கட்டான நிலைக்கு வந்தால் என்ன-வென்பது? எனவே தற்கால உலகமயமாக்கலை, மேற்கு தேசத்தின் அழுத்தங்களை எதிர்த்துக் கொள்ள தமிழ் அமைப்புக்கள் கூட்டு அமைத்துக் கொண்டது சரியே. அவ்வாறு கூட்டு அமைவை எதிர்க்கும் குறுங்குழுவாதிகள் அல்ல இடதுசாரிகள்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

*தமிழ் தேசியம் எதிர்க்கொள்ளும் பிரச்சினைகள் பல இருக்கின்றன. குறிப்பாக மேற்கு தேசங்களின் அழுத்தம் என்றும் போது சமாதானப்படை, யுத்தத்தின் போது மீறப்பட்டதாக கூறப்படும் மனித உரிமைகள், ஆயுதங்களை களைவது, (ஐ.நா) மேற்கு தேசங்களின் நிர்வாகம் அறிமுகப்படுத்தப்படலாம், அன்னிய நிறுவனங்கள் தேசத்தின் பொருளாதாரத்தினை திட்டமிடுவதை, தலையிடுவதை எதிர்க்குமா?*

# முஸ்லிம் காங்கிரஸ் தோற்றுத்தான் போய்விடுமா?

- இப்னு தைனூனா

முஸ்லிம் காங்கிரஸ் எந்தவொரு தனி நபரினதும் பாட்டன் வீட்டுச் சொத்தல்ல. அது முஸ்லிம் சமூகத்தின் குரல். சில தனி நபர்களினதோ ஒரு குழுவினரதோ அரசியல் மட்டுமல்ல அது அடக்கி ஒடுக்கப்பட்டு உரிமைகளுக்காக குரல் கொடுக்க முடியாத அதன் குரல்வளை நசுக்கப்பட்டிருந்த சமூகத்தின் பிரதி விம்பம். அந்த வகையில் முஸ்லிம் காங்கிரசின் வெற்றியும் தோல்வியும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் எதிர்காலம், அதன் இருப்புப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கும் அதன் ஒவ்வொரு அங்கத்தவரையும் பாதித்தே தீரும். இதனால் முஸ்லிம் காங்கிரஸ் எனும் அரசியல் நிறுவனத்தின் அடையாளத் தலைமையையும் அரசியல் பீட உறுப்பினர்களையும் பார்க்க சமூகத்தைப் பற்றி பிரக்ஞைபூர்வமாக தீவிரமாக சிந்திக்கும் ஒருவர் கட்சியின் அடையாள அங்கத்துவம் பெறாத நிலையிலும் கூட கட்சிக்கு மிக நெருக்கமானவராக மாறிவிடுகிறார். ஏனெனில் முஸ்லிம் காங்கிரசின் உருவாக்கம் வரலாற்றுத் தேவை எதிர காலத்தேவை என்பன அச்சமூகத்தின் இருப்போடும், பாதுகாப்போடும், மானத்தோடும், உணர்வோடும் சம்பந்தப்பட்டது.

எனவே கட்சிப் பதவிகளுக்கும், வாகனங்களுக்கும் அப்பாற்பட்டு முஸ்லிம் சமூகத்தின் இருப்போடும் பாதுகாப்போடும் மானத்தோடும் உணர்வு ரீதியாகத் தீவிரமாகச் சிந்திப்பவர் அவரது சமூகத்தால் உருவாக்கப்பட்ட அந்த நிறுவனத்துக்கு மிக நெருக்கமானவர். இந்த வகையில் கட்சியால் வயிறு கழுவிக் கொண்டு பதவி நிலை வகிப்பவர்களை விட கட்சிக்கு ஏற்படும் அவமானத்தை தனது சமூகத்திற்கே ஏற்பட்டதாக உணர்வுரீதியாக சிந்திக்கத்தலைப்படுகிறார். இந்தப் பின்னணியிலிருந்து தான் அண்மைக்காலமாக முஸ்லிம் காங்கிரசின் போக்குகளைப்பற்றி குறிப்பாக இலங்கையின் இனத்துவ அரசியல் சூழலில் முஸ்லிம் சமூகத்தை முஸ்லிம் காங்கிரஸ் சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்துகிறதா? அல்லது அது தனது பணியைச் செய்ய முடியாதவாறு தோல்வியடையச் செய்யப்பட்டுள்ளதா? அப்படியானால் அதற்கான காரணங்களை விளக்கி அச்சமூகம் தனக்களித்திருக்கும் தார்மீகக் கடமையை நிறைவேற்றும் வகையில் தனது பதவிகளையும் சுக போகங்களையும் துாக்கி எறிந்து விட்டு அக்கட்சி சமூகத்தை அடிமட்டம் வரைக்கும் அரசியல் மயப்படுத்தி சமூகத்துடன் இணைந்தொரு சமூகப் போராட்டத் முன்னெடுத்துச் செல்கின்றதா?

அல்லது அது அரசின் பங்காளி என்ற வகையில் எல்லாவகையான பதவிகளையும் சுக போகங்களையும் அனுபவித்துக் கொண்டு முஸ்லிம் சமூகத்தை சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது தோல்வியடைந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்தை கைவிட்டு விடாது. அது தனது சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதில் ஆயுதமேந்திப் போராடக் கூடத் தயங்காது என வாய்ச்சவடால் விட்டு முஸ்லிம் சமூகத்தின் தலையில் மிளகாய் அரைக்க முற்படுகிறா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இப்பின்னணியிலிருந்து நோக்கும் போது எந்த நோக்கத்துக்காக முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டதோ அந்த இலக்குகளை அடைய முடியாதவாறு துார விலகிச் செல்வதைப் பார்க்கும் போது முஸ்லிம் காங்கிரஸ் தோற்றுத்தான் போய்விடுமோ எனச் சந்தேகிப்பது தவிர்க்க முடியாததாகிறது.

வடகிழக்கில் முஸ்லிம்களது சொத்துக்கள் பறிக்கப்பட்டு காணிகளில் இருந்து துரத்தியடிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டு உயிர் வாழ்தலுக்கு உத்தரவாதமில்லாத பாதுகாப்பில்லாத சூழலில் அவற்றுக்கான ஒரு மாற்று வழியைத் தேடும் நிலையிலேயே முஸ்லிம் காங்கிரஸ் அதன் சமூகத்தால் உருவாக்கம் பெற்றது. ஆனால் அதே நிலைமை அண்மைக்காலங்களில் சிங்களப் பகுதிகளிலும் குறிப்பாக விடுதலைப் புலிகளால் கப்பம் பெறப்பட்டு, கடத்தப்பட்டு முஸ்லிம்கள் மீண்டும் அச்சுறுத்தப்பட்டபோது அதனை எதிர்த்து அக்கட்சியால் எதனையும் சாதிக்க முடியாமற் போய்விட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுகளின் போதும் அதிகாரப் பரவல்களின் போதும் சிங்கள, தமிழ் இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அவற்றுக்கென தனியான கட்சிகள் இருக்கையில் முஸ்லிம் சமூகம் கவனிப்பாரற்ற அநாதைச் சமூகமாகி விடக்கூடாது என்பதற்காகவே அச்சமூகத்தின் அரசியல் பிரதிநிதியாக அட்சய பாத்திரத்தையேனும் ஏந்துவதற்கு முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கிக் கொண்டது. ஆனால் இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் சந்திரிக்கா அரசின் போதும் அண்மையில் ரணில் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் அதன் பின்னர் அதனைக் கண்காணிக்கும் குழுக்களிலும் முஸ்லிம் காங்கிரசின் பிரதிநிதித்துவம் ஏற்றுக் கொள்ளப்படாது நிராகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முஸ்லிம்கள் பல் வகையாக அரசியல் பொருளாதார, வர்த்தக, சுகாதார, கல்வி, தொழில் வாய்ப்பு, குடியிருப்பு, பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர் நோக்கும் போது மாற்றுக் கட்சிகளில் இருந்து கொண்டு பிரச்சினைகளின் போதும், புறக்கணிப்புக்களின் போதும் உரிமைகளுக்காக சுதந்திரமாகக் குரல் கொடுக்க முடியாது என்பதற்காக தனித்துவமாக முஸ்லிம் சமூகத்தால் உருவாக்கப்பட்ட அக்கட்சி அச்சமூகத்தின் அவசரப் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்க முடியாது என்றால்.

இனப்பிரச்சினைத் தீர்வுகளின் போதும் அதிகாரப் பரவலாக்கல்களின் போதும் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக வேண்டி முஸ்லிம்களுக்கென தனியாக உருவாக்கப்பட்ட கட்சி இனப்பிரச்சினையின் தீர்வின்போதும் அதிகாரப் பரவலாக்களின் போதும் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியாதவாறு ஓரங்கட்டுப்பட்டுவிடுமானால் எத்தேவைகளுக்காக முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டதோ அத்தேவைகளை நிறைவேற்ற முடியாது தோற்றுப்போன வெற்றுப்பாத்திரமாக மாறிவிடும்.

அத்தகையதொரு நிலைக்கே தற்பொழுது முஸ்லிம் காங்கிரஸ் தள்ளப்பட்டிருப்பதை காங்கிரஸின் அண்மைக்காலப் போக்குகளையும் இலங்கையின் சமகால அரசியல் சூழ்நிலைகளையும் கவனமாக நோக்குபவர்கள் கண்டு கொள்ள முடியும். காங்கிரஸ் அடையப்போகும் இத்தகைய தோல்வி அதன் தலைமையுடனோ அல்லது அதன் நிர்வாக உறுப்பினர்களுடனோ மாத்திரம் சுருங்கியதல்ல. அது முழு முஸ்லிம் சமூகத்தையுமே பாதிக்கப்போகிறது.

முஸ்லிம் சமூகத்தின் எத்தகையதொரு செயற்பாடு பற்றிய பொறுப்பு முதலில் ஒவ்வொரு தனி நபராலும் அல்லது சிறிய பெரிய அமைப்புக்களாலும் முஸ்லிம் காங்கிரசின் தலையிலேயே சுமத்தி விடப்படுகிறது. அவ்வாறே இலங்கை முஸ்லிம்களின் ஏதாவதொரு செயல் பற்றிய கருத்தை அறிய விரும்பும் உள்நாட்டு அல்லது வெளி நாட்டுச் சக்திகள் முதலில் முஸ்லிம் காங்கிரசின் கருத்தையே அறிய முற்படுகிறது. மேலும் முஸ்லிம் சமூகம் சார்பாக ஏதாவதொரு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமானால் அது முஸ்லிம் காங்கிரசாலேயே அல்லது காங்கிரசின் அதிகப்படியான பங்குபற்றுதலுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே விரும்பியோ விரும்பாமலோ முஸ்லிம் சமூகத்தின் குவிவு மையமாக முஸ்லிம் காங்கிரஸ் செயற்படுவது தவிர்க்க முடியாததாகிறது.





இப்பின்னணியில் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் அதன் தீர்வுகளின் போது காங்கிரசின் பங்கேற்பு மிக முக்கியத்தும் வாய்ந்ததாக மாறுகிறது. ஆனால் அண்மைய புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் 12 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளதோடு அதனை நியாயப்படுத்தியும் உள்ளனர். முஸ்லிம் காங்கிரஸ் அரசின் பங்காளிகள் என்பதோடு முஸ்லிம் சமூகத்தை காங்கிரஸ் மாத்திரமல்லாது ஏனைய கட்சிகளில் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் வேறு பல அமைப்புக்களும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன எனக் காரணம் வேறு கூறியுள்ளனர். ஆனால் புலிகள் காங்கிரஸை நிராகரித்திருப்பது முஸ்லிம் சமூகத்தின் மீது கொண்ட அக்கறையின் பாற்பட்டதல்ல. ஏனெனில் முஸ்லிம் சமூகத்தின் மீதான நிலைப்பாட்டையும் அதன் நடவடிக்கைகளையும் அச்சமூகத்துக்கு சாதகமாக அமைத்துக் கொண்டதாக அவர்களது அகராதியில் ஒரு தடயத்தையேனும் காண முடியாது. மாறாக முஸ்லிங்களுக்கெதிரான நடவடிக்கைகளையே பட்டியலிட்டுக் காட்ட முடியும்.

தமிழர்களது போராட்டத்தையும் புலிகள் மாத்திரமே பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும். பல அமைப்புக்கள் பிரதிநிதித்துவப்படுத்துகையில் போராட்டம் பலவீனப்பட்டுப்போகும், எனப் புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதியாய் செயற்படுகையில் முஸ்லிம் சமூகத்திடம் மாத்திரம் முஸ்லிம் காங்கிரஸை நிராகரித்து பல பிரதிநிதிகளிடமும் புலிகள் பேசமுற்படுவது தமிழ் சமூகத்தைப்போல் முஸ்லிம் சமூகமும் ஒற்றுமைப்பட்ட நிலையில் குரல் கொடுப்பதைக் தவிர்ப்பதோடு சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் சமூகம் மூன்றாம் தரப்பாக சம அந்தஸ்த்துடன் கலந்து கொள்வதை தடுக்கும் நோக்கமும் ஆகும்.

எனவே புலிகள் முஸ்லிம் காங்கிரஸை பேச்சுவார்த்தை மேடையிலிருந்து துாக்கி வீசி இருப்பது வெறுமனே முஸ்லிம் காங்கிரசுக்கு ஏற்பட்ட தோல்வி அல்ல அது முஸ்லிம் சமூகத்துக்கேற்பட்டுள்ள பேரவமானமும் பாரிய தோல்வியுமாகும். காங்கிரஸை அங்கீகரிக்காது முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளை குழுக்குழுக்களாக பிரதேச ரீதியாக ஊர் ஊராக அணுகுவதன் மூலம் புலிகள் முஸ்லிம்களது பிரச்சினைகளை தேசியரீதியாக மூன்றாவது தேசிய இனத்தின் பிரச்சினைகளை சம அந்தஸ்துடன் அங்கீகரித்தல் என்பதிலிருந்து மிகக் கவனமாகவே தட்டிவிட்டிருக்கின்றனர்.

ஆனால் இப்பாரிய தோல்வியை முஸ்லிம் காங்கிரஸ் பொருட்படுத்தி மக்களை விழிப்புணர்வூட்டி ஏதாவது ஆக்கபூர்வமாய் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. மாறாக விழுந்தும் மீசையில் மண் படாதது போன்றே அதி மேதாவித்தனத்துடன் நடந்து கொள்கிறது. இதனால் முஸ்லிம்களது பிரச்சினைகள் மூன்றாவது தேசிய இனத்தின் பிரச்சினைகளாகக் கருத்திற் கொள்ளப்படாது சுதந்திரமான முஸ்லிம் பிரதிநிதித்துவம் அற்ற நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமானால் எவ்வாறு சுதந்திரத்தின் பின்னர் சிறுபான்மையினர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனரோ சிலவேளை அதையும் விட மோசமான பாதிப்புக்களை நீண்ட கால நோக்கில் முஸ்லிம்கள் அனுபவிக்க வேண்டிவரும். அது இலங்கையின் நிரந்தர சமாதானத்துக்கு எதிராகத் தோன்றக்கூடிய மற்றுமொரு அச்சுறுத்தலாகத் கூட மாற முடியும்.

எனவே அத்தகைய ஆபத்திலிருந்து முஸ்லிம் சமூகத்தைக் காப்பாற்றுவது ஜம்இய்யதுல் உலமா, ஜமாஅதே இஸ்லாமி, தப்லீக் ஜமாஅத், தௌஹீத் ஜமாஅத் மற்றும் முஸ்லிம் சமூகத்துக்காக உழைக்கும் இதர அமைப்புக்களதும் அவ்வாறே முஸ்லிம் சமூகத்துக்கு வெளியிலுள்ள மனித நேய, மனித உரிமை மீறல்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்புக்களினதும் புத்திஜீவிகளினதும், சிந்தனையாளர்களதும் கடமையாகும். ஏனெனில் இன்னும் சில நாட்கள் செல்ல இலங்கையின் இனத்துவ அரசியல் சூழல் முற்றாகவே மாற்றமடைந்துவிடும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்துக்கள் காரணமாகவும் சர்வதேச அழுத்தம் காரணமாகவும் விடுதலைப் புலிகள் பொதுவாகவே மக்களிடம் நல்ல பிள்ளையாக மாறிவிடுவார்கள். என்னவிலை கொடுத்தேனும் சமாதானத்தை அடைந்தே தீரவேண்டும் என்ற நிலையில் மக்களிருக்கையில் விடுதலைப் புலிகளை விரும்பாதோர் கூட சமாதானத்தின் பெயரால் விடுதலைப் புலிகளுக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்கியே ஆக வேண்டும். இல்லையேல் புலிகளை எதிர்ப்பவர்களும், விமர்சிப்பவர்களும் சமாதானத்தைக் குழப்புவதாக முத்திரை குத்தப்படுவார்கள். இந்த வகையில் முஸ்லிம் காங்கிரசினரும் சமூகம் எக்கேடு கெட்டாலும் இலங்கையில் சமாதானத்தை நிலை நாட்டுவதில் தம்மை முழுக்க அர்ப்பணித்து விடுவர். இதனால் இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களுக்கான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள குரல் எழுப்புவதும் புலிகளின் முஸ்லிம்களுக்கெதிரான அநியாயங்களைக் கண்டிப்பதும் சமாதானத்தைக் குழப்பும் கோசங்கள் என்ற பேரில் முஸ்லிம் உரிமைக்கோசம் மெதுவாகவே நசுக்கப்பட்டு விடும்.

> *தமிழர்களது போராட்டத்தையும் புலிகள் மாத்திரமே பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும். பல அமைப்புக்கள் பிரதிநிதித்துவப்படுத்துகையில் போராட்டம் பலவீனப்பட்டுப்போகும், எனப் புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதியாய் செயற்படுகையில் முஸ்லிம் சமூகத்திடம் மாத்திரம் முஸ்லிம் காங்கிரஸை நிராகரித்து பல பிரதிநிதிகளிடமும் புலிகள் பேசமுற்படுவது தமிழ் சமூகத்தைப்போல் முஸ்லிம் சமூகமும் ஒற்றுமைப்பட்ட நிலையில் குரல் கொடுப்பதைக் தவிர்ப்பதோடு சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் சமூகம் மூன்றாம் தரப்பாக சம அந்தஸ்த்துடன் கலந்து கொள்வதை தடுக்கும் நோக்கமும் ஆகும்.*

தொடர்ச்சி 11ம் பக்கம்...

நிகரி 2
NIHARI

# சம உரிமை என்பது ஏட்டுச் சுரைக்காய் அல்ல!

## - ராஜம் கிருஸ்ணன் -



"மரபுகளின் பெயரில் காலம் காலமாகப் பூட்டப்படும் தளைகளை உடைக்கும் சுதந்திரமாய் வெளியேறும் சுயமாகச் சிந்தித்து முடிவுகளை எடுக்கும், பக்குவம் பெண்களுக்கு வரவேண்டும்" என்று அழுத்தமாக நம்பும் ராஜம் கிருஸ்ணன் இந்த வகையில் தன் பெண் கதாபாத்திரங்களை அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாகப் படைத்து வெற்றி கண்ட ஒரு சிறந்த எழுத்தாளர். இலக்கியம் என்பது சமகால சமுதாயத்தின் பிரச்சினைகளை போக்குகளை அலசி, புரியவைத்து நடைமுறைக்கு ஏற்ற புதுப் புது தீர்வுகளை கோடிட்டுக் காட்டுவதாக இருக்க வேண்டும் என்றகுறிக்கோளைக் கொண்ட ராஜம் கிருஸ்ணன் 1925 ஆம் ஆண்டு "முசுறி" என்ற சிறு நகரத்தில் பிறந்தவர். முறையான உயர் கல்வி பெறாத போதும் இலக்கியத்தின் பால் தணியாத தாகம் கொண்டு நல்ல எழுத்துக்களைப் படைத்து வெவ்வேறு அனுபவங்களைத் தேடிப் போய் தன்னைத் தானே உருவாக்கிக் கொண்டவர்.

50 வருட இலக்கியப் பயணத்தில் இவர் படைத்த புதினங்களில் பல, மாறுபட்ட கள ஆராய்ச்சி, பாத்திரப் படைப்புக்களுக்காக பாராட்டுக்களைப் பெற்றிருக்கின்றன. இவருக்குக் கிடைத்துள்ள விருதுகள் அநேகம் மத்திய சாகித்திய அக்கடாமி விருது. பாரதீய பாஷா பரிஷத் பரிசு, திரு வி.க. விருது, சரஸ்வதி சம்மான், அக்னி அஹர விருது என்று கௌரவங்களின் பட்டியல் நீளுகின்றது.

***கல்தோன்றி மண்தோன்றாக் காலம் முன்னரே தோன்றிய மூத்த குடி என்று பெருமையாக குறிப்பிடப்படும் தமிழர் சமுதாயத்தில் பெண்களின் நிலைப்பாடு எப்படி இருந்து வந்திருக்கின்றது என்பீர்கள்? சங்க காலத்தில் தொடங்கி இன்று வரை சுருக்கமாகக் கூறுவது சாத்தியமா?***

சங்க காலத்தில் பெண்களின் நிலை மிக உயர்ந்ததாய் பிரமாதமாய் இருந்த மாதிரியும், இப்போது எல்லாம் மோசமாகி விட்டது போலும் இதற்கு வேற்று மொழிகளின், இனத்தின் கலப்பு தான் காரணம் என்கின்ற மாதிரியும் இலட்சியார்த்தமாக ஒரு கருத்து, வரைபடம் நமக்கு காலம் காலமாக கொடுக்கப்பட்டு வந்திருப்பது சரியில்லை என்பது என் எண்ணம்.

சங்க கால இலக்கியம் சம்பந்தமாய் ஒரு புத்தகம் எழுதிய போது இதற்காக நிறைய ஆராய்ச்சி செய்திருக்கிறேன். ஒரு பெண்ணுக்கு என்று தனி அந்தஸ்து, மனித நேய அணுமுறை அவளை ஒரு தனிநபராக எண்ணும் கண்ணோட்டம். individual status எல்லாம் நமக்குத் தெரிந்த நாள் முதல் கிட்டவே இல்லை என்று சொல்வேன்.

முன்பு வேறு விதமாக இருந்திருக்கக் கூடுமோ என்கின்ற நோக்கில் தான் ஆராய்ச்சியைச் செய்தேன். சங்க காலம் ஏன் வேத காலத்தில் கூட தந்தை வழி மரபு பின்பற்றப்பட்ட போதிலும் தாய் வழி மரபு ஒரு காலத்தில் இருந்ததிற்கான சாத்தியக் கூறுகள் இங்கும் அங்குமாய் தென்படுவதில் எப்போது எங்கு, எப்படி இந்த மாற்றம் உண்டாயிற்று என்று தலையை உடைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆண் வழி மரபு பின்பற்றத் தொடங்கியதும், ஆணாதிக்கம் தலையெடுக்க முற்பட்டதில் கொஞ்சம் கொஞ்சமாய் எல்லாவற்றையும் இழந்து கொண்டு வந்திருக்கிறோம் எனலாம். சங்க இலக்கியத்தில் முழுக்க முழுக்க பிரபுத்துவ முறை Feudalism தான். செவிலி, தோழி, பரத்தையர் விபரிப்பு, கணவன் இறந்ததும் விதவைக் கோலம் இதர பழக்கவழக்கங்களின் விபரிப்பைப் படிக்கும் போது தனிநபர் அந்தஸ்து மறுக்கப்பட்டு பிரபுத்துவ மனப்பான்மை இருந்திருக்கிறது புரிகிறது.

***தமிழர்களிடையே தாய் வழி மரபு பின்பற்றப்பட்டதற்கு சாத்தியக் கூறுகள் உள்ளன என்பதை எப்படிச் சொல்கிறீர்கள்? சங்க இலக்கியங்களில் ஏதேனும் சான்றுகள் உள்ளனவா?***

இல்லை. சங்க இலக்கியங்களில் எனக்குத் தெரிந்து ஏதும் இல்லை. தமிழ் நாட்டில் வாழும் ஆதி வாசிகளின் பழக்கவழக்கங்களை ஆராயும் போது அந்த மாதிரியான சான்றுகள் நிறையக் கிட்டின. உதாரணத்திற்கு படகர், தோடர் இனங்களைச் சொல்லாம். 'குறிஞ்சித் தேன்' நாவலுக்காக படகர்களோடு நெருங்கிப் பழகி ஆராய்ச்சி பண்ணியிருக்கிறேன். இவர்களுடைய வாழ்க்கை முறையைக் கவனித்தால் பெண் என்பவள் தனிநபருக்குரிய அந்தஸ்தோடு நடத்தப்படுவது துல்லியமாகப் புரியும். அந்த ஆதிவாசிகளிடையே 'கற்பு' என்று நாம் குறிக்கும் கண்ணோட்டமே இல்லை. ஒரு ஆண் தனக்குப் பிடித்த பெண்ணைத் தீர்மானித்தலும், 'பொன் கொடுக்கிறேன் பெண் கொடு' என்று சொல்லி பணம் கொடுத்து அவளை அழைத்துச் செல்வான். மாமியார் என் வம்சாவழியை உன்னிடம் தருகிறேன் என்ற அர்த்தத்தில் தலையில் தண்ணீர் விட்டு ஒரு குடம் தண்ணீர் கொண்டு வரச் சொல்வாள். அந்த வீட்டில் இருக்கும் ஆண் பிள்ளைகள் அனைவரிடமும் உறவு கொள்ள அவளுக்கு உரிமை உண்டு. கற்பமானால் யார் அதற்குத் தகப்பன் என்று கேட்பார்கள்? அப்புறம் அவளுக்கும் அவனுக்கும் திருமணம் நடக்கும். புருஷனைப் பிடிக்காமல் போனால் விலக, விவாகரத்துச் செய்ய அவளுக்குச் சுதந்திரம் இருந்தது. அவள் திரும்பிப் பிறந்த வீடு போய்விட்டால், கணவன் அவள் பெற்றோரிடம் சென்று பெண்ணைத் திரும்பக் கொண்டு வந்து விட்டு விட்டேன். அதனால் என் பொன்னைக் கொடு என்று வாங்கிக் கொள்வான். மறுமணம் செய்து கொள்ள இருவருக்குமே சம உரிமை கிட்டும். விதவை என்பதும் அந்த சமூகத்தில் இல்லை. கணவன் இறந்தால் உடனே வேறு ஒருவனை மணப்பது சகஜம். வேறு ஒரு இனத்தில் கூட கணவனைப் பிடிக்க வில்லை என்றால் ஒரு துரும்பைக் கிள்ளிப் போட்டு விட்டு பிரிய பெண்ணுக்கு சுதந்திரம் இருந்தது. ஆனால் இதே இனத்தில் அண்மைக் காலத்தில் பெண் சிசுக்களை பிறந்த உடனேயே கொன்று விடும் பழக்கம் பரவி உள்ளது எத்துணை துர்ப்பாக்கியமானது! இது எப்பேர்ப்பட்ட வீழ்ச்சி!

***இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் பாரதியார். பின்னர் சுயமரியாதை இயக்கத்தினைத் தோற்றுவித்த பெரியார் — போன்றவர்களின் பாதிப்பு இருந்தும் கூட நீங்கள் குறிப்பிடும் சீரழிவும் இருப்பது ஒரு வேதனையான விசயம் அல்லவா?***

பாரதியை விட ஒரு அற்புதமான மனிதரைப் பார்க்க முடியாது. ஆனால் அவரும் குறை நிறை உள்ள மனிதர் தான். இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பாஞ்சாலி சபதத்தில் பெட்டைப் புலம்பல் என்று அவர் எழுதியதை விமர்சிப்பவர்கள் உண்டு. 'காதல் ஒருவனை கைப்பிடித்தே அவன் காரியம் யாவிலும் கைக்கொடுத்து' என்று எழுதியுள்ளதை, 'காதல் ஒருத்தியைக் கைப்பிடித்தே அவள் காரியம் யாவிலும் கைக்கொடுத்து' என்று ஏன் மாற்றி எழுதவில்லை என்று நானே கேள்வி எழுப்பியதுண்டு. தந்தை வழி மரபு தந்த பாதிப்பு அது. எனினும் பல விடயங்களைப் பொறுத்தவரை பாரதி ஒரு உயர்ந்த சிந்தனையாளர் என்பதை மறுக்க முடியாது.

***திராவிட இயக்கத்தின் சுயமரியாதைக் கொள்கையின் பாதிப்பு சமுதாயத்தில் எந்த அளவுக்கு விழிப்புணர்வை தோற்றுவித்தது என்பீர்கள்?***

இந்த இயக்கங்களின் பிறப்பிற்கு முக்கிய காரணம் சாதிகளிடையே இருந்த வேற்றுமையும் அதனால் விளைந்த இழிவுகளும் தான். பெரியார் ஈ.வெ. ராவின் வாழ்க்கையில் ஒரு திருப்பமாக அமைந்ததான நிகழ்ச்சி ஒன்றைச் சொல்வார்கள். வா.வே.சு.ஐயர் ஒரு குருகுலம் நடாத்திக் கொண்டிருந்தார். இதில் பிராமணர்களுக்குத் தனிப்பந்தி, அல்லாதவர்களுக்குத் தனிப்பந்தி என்றிருந்த வழக்கத்தை பெரியார் எதிர்த்தார். குருகுலம் நடத்தப் பணம் கொடுப்பவர் ஒரு பிராமணப் பெண். அதனால் இந்த வழக்கத்தை மாற்ற முடியாது என்று பதில் கிடைக்க பெரியார் பூரணமாக மாறி பிராமண ஆதிக்கத்தினை எதிர்த்து இயக்கம் ஆரம்பித்ததாகச் சொல்வார்கள்.

***இந்த நடவடிக்கைகள் சிந்தனை பெண்களுக்கு எந்த விதத்தில் உதவின?***

அந்தக் கால கட்டத்தில் ஈ.வெ.ரா பெரியார் பெண் விடுதலைக்கு நிறையப் பாடுபட்டிருக்கிறார். இதோடு பெண்களைக் குறித்து பெரிய அளவில் விழிப்புணர்வு தோன்ற சுதந்திரப் பேராட்டமும் காந்திஜியின் அழைப்பும் முக்கிய உந்து சக்திகள் ஆயின. மணலூர் மணியம்மாவின் கதையை ஆராய்ந்து எழுதிய போது ஈ.வெ.ரா. உண்டாக்கி இருந்த தாக்கத்தினை நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

***பெண்விடுதலையைப் பற்றி பேச்சு எழுந்துவிட்ட பிறகு பெண்ணிய இயக்கத்தைப் பற்றிக் கேட்பது அவசியம் ஆகின்றது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பெண்ணிய இயக்கம் எப்போது தோன்றியது? அதன் படிப்படி வளர்ச்சி எப்படி இருந்தது?***

அப்போதெல்லாம் பெண்ணியச் சிந்தனைகள் கொண்ட பெண்கள் இருந்தார்களே ஒழிய ஒரு இயக்கம் என்று எதுவும் அழைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பெண்ணியம் என்று இப்போது பெயர் வைத்துப் பெரிசாகக் குரல் எழுப்புகிறார்கள். ஆனால் அன்று திரௌபதி தன்னை துரியோதனன் சபைக்கு இழுத்துப் போக வந்த துச்சாதனனிடம் என்னை வைத்து இழந்த பின் அவரை இழந்தாரா? அல்லது தன்னை இழந்த பின் என்னைப் பணயம் வைத்தாரா? என்று கேட்ட போதே பெண்ணியத்தின் குரல் ஒலிக்க முற்பட்டு விட்டது என்பேன்.

தன்னை இழந்த பிறகு என்னைப் பணயமாக்க தருமருக்கு உரிமை இல்லை என்பது எத்தனை தெளிவான சிந்தனை!

***பெண்ணிய இலக்கியம் feminist literature என்று ஒரு பிரிவு சில மொழிகளில் வளர்ந்திருப்பதைப் போன்று தமிழிலும் நடந்துள்ளதா?***

பெரிய அளவில் இயக்கமே இல்லை எனும் போது பெண்ணிய இலக்கியம் என்று ஒன்று உருவாவதற்கு வாய்ப்பு ஏது? ஆனால் ஒன்று பல ஆண்டுகளுக்கு முன்னரே நான் எழுதிய 'பெண் குரல்' என்ற நாவல் பெண்ணியக் கருத்துக்களை உள்ளடக்கியதுதான் என்கிறார்கள். அப்புறம் காலம் தோறும் பெண், காலம் தோறும் பெண்மை என்று பல புத்தகங்களை எழுதியிருக்கிறேன். இந்த வகையில் முத்திரை இல்லாமல் ஆனால் அதே குறிக்கோளுடன் பல எழுத்துக்கள் தமிழ் இலக்கியத்தில் இருக்கின்றன. ஆனால் இனித் தீவிரமாக பெண்ணிய இலக்கியம் படைப்பது குறித்து சிந்திப்பது அவசியம். இது சம்பந்தமாய் நிறைய ஆய்வுகள் தேவை.

***உங்கள் முன்னுரை ஒன்றில் கற்ப்பைக்கு முக்கியத்துவம் கொடுப்பதைத் தவிர்த்து நாம் வளர வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இதை விளக்குங்களேன்?***

இங்கே இரண்டு விசயங்களை ஞாபகப்படுத்திக் கொள்வது அவசியம் ஆகின்றது. தாய் வழி மரபு matriarchial system இல்லாத போதும் தமிழரிடையில் தாய்மைப் பாரம்பரியம் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. உதாரணமாக நம்மூரில் மிஸ், மிசஸ் என்று குறிப்பிடுவது வழக்கம் இல்லை. ஒரு வயசு வந்துவிட்டால் எல்லோருமே அம்மா தான். ருக்குமணி அம்மா, கஸ்தூரி அம்மா, ஜானகி அம்மா இப்படி நிஜத்தில் தாயாகாத போதும் பெண்ணிடம் ஒரு தாய்மையைப் பார்ப்பது நம் பாரம்பரியம். இதை உயர்ந்த பண்பாடாகக் கொள்ளலாம். ஆனால் சுகம் தருகின்ற பிள்ளை பெற்றுத் தருகிற இயந்திரமாக அவளை அணுகும் நடத்துமுறை தவறானது என்பதைச் சுட்டிக் காட்டத் தான் கற்பப்பைக்கு முக்கியத்துவம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று முன்னுரையில் சொல்லியிருக்கிறேன். வெறும் உடம்பு மட்டும் பெண் அல்ல. அவள் ஒரு மனுசி.

ஆணுக்கும் பெண்ணுக்கும் அனைத்து தத்துவங்களும் சமம் என்று சொல்வதற்குப் பதிலாக எல்லா விதிவிலக்குகளும் வசதிகளும் ஆணுக்கு, பெண்ணுக்கு கற்பு மட்டும் என்பது எந்த விதத்தில் நியாயம் ஆகும்?

இந்த விடயங்களுக்கு எந்த இயக்கமும் முன்னுரிமை தந்து போராடாத போது பெண்ணிய இயக்கம் வளர்ந்திருப்பதாக எப்படிக் கூற முடியும்?

***இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பிரிவான இந்தியப் பெண்களின் தேசியப் பேரவை (National federation of Indian Women) அமைப்புக்கு நீங்கள் ஐந்து வருட காலம் தமிழகத் தலைவராகச் செயற்பட்டு இருக்கிறீர்கள். அந்த அனுபவத்தின் அடிப்படையில் கேட்கிறேன். பெண்கள் மேம்பாட்டிற்கு இம்மாதிரியான சங்கங்கள் எவ்வகையில் உதவி இருக்கின்றன. அல்லது உதவுகின்றன?***

மாதர் அமைப்புகள் இயக்கங்களைக் குறித்து நான் அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறேன். குடும்ப ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் ஒடுக்கப்படுதல் பொருளாதார சுயசார்பின்மை, கல்வியின்மை, வேலை வாய்ப்புக்கள் பறிக்கப்படுதல், சம வேலைக்கு ஏற்ப கூலி இன்மை ஆகியவை தவிர சமுதாய உற்பத்தியிலும் பொறுப்பேற்று இருப்பதால் அவள் உடல், உள நலம் சார்ந்த சுமைகளை குறைக்காமல் மேலும் மேலும் பொறுப்புக்களை திணிக்கும் அநியாயங்கள் ஆகியவற்றை எதிர்த்து பெண்கள் அன்றாடம் போராட வேண்டி இருக்கின்றது. இந்த அனைத்துப் பிரச்சினைகளும் எல்லா மாதருக்கும் பொதுவானவை. இதற்கு வலது சாரி, இடது சாரி என்ற பேதமே தேவையில்லை. ஆனால் வலது சாரி அரசியல் கட்சி சார்ந்த மாதர் அமைப்பு நாடு தழுவிய எதிர்ப்பு போராட்டம் நடத்துவதில்லை. இடது சாரி மாதர் அமைப்புக்களே இவ்வகையில் ஆக்க பூர்வமாகச் செயற்படும் பொறுப்பை ஏற்றிருக்கின்றன.

இங்கு காணப்படும் முக்கியமான குறை இது தான். இடது சாரி அரசியல் கட்சி இரண்டாக உடைந்தால் அதைச் சார்ந்த மாதர் அமைப்பும் கட்சி சார்ந்து உடைய வேண்டுமா? சரி உடைந்தது தேர்தல் காலத்தில் கூட்டுச் சேரும் ஒரு கட்சியைச் சார்ந்து ஒரு துண்டு மீண்டும் உடைகின்றது என்றால் அதற்கேற்ப அந்த மாதர் அமைப்பும் இன்னும் உடைபடலாமா? அவர்கள் ஒருங்கிணையத் தடையாக இருப்பது எது? கட்சி மேலாட்சியா? அதை யாரும் வெளிப்படையாக ஏன் சொல்வதில்லை. மார்ச் 8 போன்ற நாட்களிலேனும் எல்லா அமைப்புக்களும் ஒருங்கிணைந்து ஒரு செயல் திட்டத்தில் ஈடுபடுவது கூட துர்லபமாக இருக்கின்றது. தன்னார்வக் குழுக்கள் பெண்கள் பிரச்சினைக்காகப் போராடும் போது கட்சி சார்ந்த பெண் அமைப்புக்கள் முக்காலும் ஒன்று சேர்வதில்லை. அரசியல் கட்சிகளில் சார்பு இல்லாமல் பெண்கள் தாமே தமக்காக தம் மேம்பாட்டுக்காக ஒன்று திரளும் போது தான் அரசியல் சட்டமன்ற அரங்குகளில் பெண்கள் தம்மை ஆக்க ரீதியாக விளக்கிக் கொள்ள முடியும். மற்றப்படி சம உரிமை என்பது ஏட்டுச் சுரக்காய் தான்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

நூல் மதிப்பீடு

# எழுதுகோலும் என் வெள்ளைத்தாளும்

- ஒட்டமாவடி அறபாத்

கல்குடாத் தொகுதியை பொறுத்தவரை படைப்பிலக்கியத்தின் மூலவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் மண். மிகத்தீவிரமாக தமிழ் இலக்கியத்தின் சகல துறைகளிலும் முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இலக்கிய கா்த்தாக்களை கல்குடாவில் நாம் தரிசிக்க முடியும்.

மா்ஹூம் வை. அஹமத், இளையவா்களுக்கு புதுத்தெம்பை ஊட்டி வழிகாட்டும் எஸ்.எல்.எம்.ஹனீபா உட்பட, 80களுக்குப்பின் கவிதை, சிறுகதை என முத்திரை பதித்த அனேக இளம் படைப்பாளிகளும் இத்தொடரில் அடங்குவா்.

அஷ்றப் ஷிஹாப்தீன், ஓட்டமாவடி இஸ்மாயீல், வாழைச்சேனை அமா், வஹாப், மயில், ஏ.ஜீ.எம், ஸதகா, தலிபா, வி.ஜுனைத் இத்ரீஸ், எஸ்.றழீம் என இளையவா்களினதும், முதிா்ச்சியடைந்தவா்களினதும் பட்டியல் நீள்கிறது.

இவா்கள் காலத்தின் அவலத்தை தம் எழுத்துக்களில் - செதுக்கி செப்பனிட்ட சிற்பிகள். கவிதை பற்றிய விவாதங்களுக்கப்பால் நின்று தம் அகவய புறச் சூழல்களின் படுமோசமான அவலங்களை உள்வாங்கி அவற்றை ஆக்ரோஷமான கவிதையாக உருக்கொடுக்கும் திறமை மிக்கவா்கள். இந்த வரிசையில்தான் வாழைச்சேனையைச் சோ்ந்த ஷல்மானுல் ஹரீஸ் என்ற பயில் நிலை மாணவனின், "எழுதுகோலும் என் வெள்ளைத்தாளும்" என்ற கவிதைத் தொகுதி வந்துள்ளது.

அவசரமாக கவிதை எழுதி, அதை அவசரமாகவே பிரசுரத்திற்கு அனுப்பி, அப்படிப் பிரசுரமான கவிதைகளை அவசரமாகவே ஒரு "தொகுதி"யாக போட்டிருக்கின்றாா் ஷல்மான். இத்தொகுதி ஊடாக ஷல்மான் என்ற இளைஞனுக்குள் சில நல்லகவிதைகளும் பிறந்திருக்கின்றன என்பதை இனங்காண முடிகின்றது.

இக்கவிதைகள் அனைத்தும் ஒட்டு மொத்தமாக மனித அவலத்தையும், தனிமனித உணா்வாா்வத்தையும் பேசும் கவிதைகளாகும். இந்தியக் கவிஞா்களின் சொல்லாடலும் தாக்கமும் இவா் கவிதைகளில் ஒரு நீங்காத நெருடலாக தொடா்ந்து வருகின்றன. அதனாற்தானோ என்னவோ, பின்அட்டைக்குறிப்பில் ஷல்மானுல் ஹரீசை அறிமுகம் செய்யும் ஏ.ஜீ.எம்.ஸதகா, "இருபதே வயது நிரம்பிய இந்த இளைஞனுக்குள் இத்தனை வீரியங்களா? ஆச்சரியமாக இருந்தது. மேத்தாவும், வைரமுத்துவும் இவா் மூளைக்குள் எப்படி வந்தாா்கள்" என வியந்து புல்லரித்துப் போய் எழுதியுள்ளாா்.

வைரமுத்துவையும், மேத்தாவையும் கருவாக நினைத்து கவிதை "தத்தும்" இன்றைய இளைஞனுக்கு, அவா்களின் சாயல் வருவதும், அவா்களையே நகலெடுப்பதும் ஆச்சரியத்துக்குரிய விஷயம் இல்லை. இதை உறுதிப் படுத்துவதுபோல் வைரமுத்துவின் "காதலித்துப் பாா்" பாணிக் கவிதைகள் இரண்டு இத்தொகுதிக்குள் இடம்பெற்றுள்ளன. அவை "கல்யாணம் கட்டிப்பாா், கொழும்பு போய்பாா்"" ஆகிய கவிதைகளாகும்.

காதலைப் பற்றி அதிகமாக எழுதும் இளையவா்களில் நின்றும் தன்னை விடுவித்து, ஷல்மானுல் ஹரீஸ் பன்முகப் பாா்வையுடன் சில கவிதைகளையும் எழுதியுள்ளாா். இவரின் சோதனைச் சாவடி பற்றிய கவிதை இதற்கோா் எடுத்துக்காட்டாகும். அதிகமான கவிதைகள் தன்னுணா்வு சாா்ந்த கவிதைகளாகும். அழகான இசையுடன் ரசிக்கத்தக்க மெல்லிசைப்பாடல்களின் சாயல் -




நூல் : 'எழுதுகோலும் என் வெள்ளைத்தாளும்
ஆசிரியா் : ஷல்மானுல் ஹரீஸ்
வெளியீடு : இளங்கலை, இலக்கியவட்டம், வாழைச்சேனை

இவா் கவிதைகளில் தொக்கி நிற்கிறது "சமரசமாய் வாழ்வோம்" (பக். 12) என்ற கவிதையை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

தொகுதியில் உள்ள முழுக்கவிதைகளையும் உள்வாங்கிப்படித்து முடிக்கும்போது 'எழுதுகோலும், என் வெள்ளைத்தாளும்" தொகுதியின் ஊடே ஹரீஸ் என்ற இளம் கவிஞனின் பலமும், பலஹீனமும் நன்கு புலப்படுகின்றன. பலஹீனங்கள் என அடையாளம் காணப்படுபவை அவசியம் களையப்படவேண்டிய ஆட்கொல்லிப் பூச்சிகளாகும்.

கவிதைக்கு மொழியழகு அவசியம். மொழியின் அடா்த்தியும், செறிவும், கைகூடிவராத கவிதைகள் கவித்துவ சக்தியை இழந்த கவிதைகளாகும். கவிதையின் ஜீவநாடியே இந்த மொழிவளம் தான். சொல்விளையாட்டில் வித்தை காட்டுவதை விட, கருத்தாழம் மிக்க கவிதைகளை எழுதுவதற்கு ஹரீஸ் முயல வேண்டும். உடைத்து போடுவதால் மட்டும் அது கவிதையாகாது. சொற் கட்டுமானத்துடனும், பொருட் செறிவுடனும் உடைத்துப் போடும் வசனங்களும் சிறந்த கவிதைதான். ஷல்மானுல் ஹரீஸின் அனுபவமும், உணா்திறனும் வளா்ந்த அளவிற்கு கவிதையின் மொழிவளம் வளரவில்லை என்பது என் கணிப்பீடு.

முடிவாக முன்னுரை, ஆய்வுரை என "ஆசீா்வாதம்" வழங்கும் மூத்தவா்கள், இளையவா்களின் பலவீனங்களையும் சுட்டிக் காட்டி அவா்கள் வளர ஆவனசெய்ய வேண்டும். அதை விடுத்து ஒரேயடியாக அவா்களை குளிரவைத்து, "உறைநிலை"க்கு தள்ளக் கூடாது. இது இளையவா்களுக்கு செய்யும் இலக்கியத்துரோகமாகும். இத்துரோகத்தை ஹரீசுக்கு இழைக்க நான் விரும்பவில்லை.

முன்னுரை வழங்கிய செ.குணரத்தினம் "இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் என் இதயத்தை தடவிக் கொடுத்து, நமக்குள்ளும் ஒரு பாரதி, பிறந்து வந்திருக்கின்றான் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றன. புதுக்கவிதையை எழுதுபவா்கள் இக்கவிஞனின் கவிதைகளை படித்தபின்பு எழுத வேண்டும் போலிருக்கிறது" என்ற கூற்று மிக வலிந்துரைக்கப்பட்ட ஒருமிகைப் படுத்தலாகும். ஒருவரின் தகுதிக்கு மீறி அவரை புகழ்வதும், கௌரவிப்பதும் அவருக்குச் செய்யும் அவமானமாகும். இந்த அவமானத்தை மிக நாசூக்காக செ.குணரத்தினம் செய்திருக்கின்றாா். நூல் வெளியீட்டகமான இளங்கலை இலக்கியப் பேரவையும், தனது வெளியீட்டு உரையில், சிறுகதை துறையில், வை.அஹமதையும், எஸ்.எல்.எம்.ஹனீபாவையும் முன்னுதாரணம் காட்டும் நீங்கள் ஏன் கவிதைக்கு ஷல்மானுல் ஹரீசை தூக்கிப்பிடிக்கக்கூடாது? என தன்பங்கிற்கு முதுகு சொறிந்துள்ளது. இவை எல்லாவற்றையும் விட நூலாசிரியா் தன் தங்கமலை ரகசியத்தை, முன்னுரையாக உடைத்துப் போட்டு, தன்பங்கிற்கு, சில அற்புதங்களை இனங்காட்டியுள்ளாா். இவருடைய கவிதைகளை வித்தியாசமானவை என இவரே 'பறை" அடிக்கின்றாா்.

இந்த இளம் படைப்பாளியுள் தற்புகழ்ச்சி, விளம்பரப்பசி, என்ற இரு பயங்கர நோய்களும் பரவி ஆக்கிரமித்துள்ளன. அதனாற்தான் என்னவோ இத்தொகுதிக்குள் "சுயபுராணக் கவிதைகளும்" மலிந்துள்ளன. இது களையப்பட வேண்டிய நோயாகும்.

கவிதைத் துறையில் ஹரீஸ் இன்னும் படிப்பதற்கும் பரிசோதனை செய்வதற்கும் நிறைய உண்டு. ஆசீா்வாதங்கள் அவரை 'அரித்து" விடாமல் இருக்கட்டும். வைரமுத்துவும், மேத்தாவும் அவா் மூளைக்குள்ளிருந்து அவரமாக வெளியேறட்டும். நல்ல கவிதைகள், கவிஞா்கள் அவா் உணா்வில் நுழையட்டும். அப்போதுதான் ஷல்மான் கவிதை உலகில் நிலைத்து நிற்க முடியும். ○

- ரவி

# சோலைக்கிளியால் இப்படியும் பேச முடிகிறது!

## மொழியில் பனி எழுதி.....

மூன்றாவது மனிதன் பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஈழத்து இலக்கியத்தின் சமகால ஆளுமைகளும் பதிவுகளும் என்ற நேர்காணல் தொகுப்பினைப் பார்க்க முடிந்தது. அதில் சோலைக்கிளியின் நேர்காணலில் அவரின் ஒரு கவிதைத்தொகுதியான "பனியில் மொழி எழுதி" பற்றிய கேள்வியொன்றுக்கு அவர் கொடுத்திருக்கும் பதில் அதிர்ச்சியைத் தருகிறது.

***

கேள்வி : பனியில் மொழி எழுதி என்ற உங்களின் ஆறாவது தொகுப்பிற்கான முன்னுரையில் எஸ்.வி.ஆர் யூகோஸ்லாவியாவிலோ பலஸ்தீனத்திலோ இருக்கும் கவிஞன் ஒருவன் உங்களைப்போல கவிதைகளை எழுதலாம் என்று சொல்வது வெளிப்படையாக எமக்கெல்லாம் தெரிகிற இந்த ஆயுதக் கலாச்சாரம் பற்றியதுதான். அந்த முன்னுரையானது உங்களுக்கு எப்படியான அருட்டுணர்வைத் தந்தது?


பதில் : உண்மையில் "பனியில் மொழி எழுதி" தொகுப்பிற்கு முன்னுரை எடுக்க இருக்கவில்லை. எனக்கு இப்போதெல்லாம் முன்னுரைகளில் நம்பிக்கையும் இல்லை. விசுவாசமாக முன்னுரைகள் எழுதிய காலமெல்லாம் போயிற்று. கைக்கு வந்தபடியெல்லாம் முன்னுரைகள் எழுதிக்கொடுக்க 'உடன்தயாரிப்பு' பெரியவர்கள் தோன்றிவிட்டார்கள். நான் கவிதைப் பிரதிகளை வெளியீட்டாளர்களுக்கு அனுப்பினேன். அவர்களிடமிருந்து வந்த மறு தபாலில் பிரதிகளின் புகைப்பட பிரதிகளை முன்னுரைக்காக எஸ்.வி.ஆர் க்கு அனுப்பியிருப்பதாக அறிவித்திருந்தார்கள். ஒரு நாகரீகத்திற்காகவும் அவர் நேர்மையாக எழுதக்கூடியவர் என்பதற்காகவும் பேசாமல் விட்டுவிட்டேன். அந்த முன்னுரையில் என்னை பிற கவிஞர்களுடன் ஒப்பிடுவது சரியில்லைத்தான். சோலைக்கிளியை சோலைக்கிளியாகவே பார்க்க வேண்டும்.


***

பனியில் மொழி எழுதி தொகுதியை நாம்தான் விடியல் பதிப்பகத்தினூடாக வெளியிட்டோம். அதன் வடிவமைப்பு எழுத்துக்கோர்ப்பு சரிபார்க்கை என்பவற்றை மிகக் கவனமாகவும் பொறுப்பாகவும் (நானும் றஞ்சியும்) செய்தோம். இந்தத் தயாரிப்பு வேலைகள் முடிந்ததும் அதன் பிரதியை முதலில் சோலைக்கிளிக்கு அனுப்பி அவரின் திருப்தியை பெற்றபின்தான் விடியல் பதிப்பகத்துக்கு அச்சாக்கம் செய்து வெளியிட அனுப்பினோம்.

கால நீட்சியோ தூரமோ இந்த உழைப்பை மறக்க அல்லது மறைக்க உடன்வராது என்பதை அழுத்தமாக சொல்லிக் கொள்ளலாம். பொறுப்பற்ற விதத்தில் சோலைக்கிளிக்கு தெரியாமல் நாம் எஸ்.வி.ஆர் இடம் முகவுரைக்காக அனுப்பவில்லை. மாறாக - சோலைக்கிளி இந்தத் தொகுதியின் கைப்பிரதியை எமக்கு அனுப்பி வைக்க முன்னரே- அவரது வேண்டுதலின் பேரிலேயே முகவுரை எஸ்.வி.ஆர் இடம் கேட்கப்பட்டது. எனக்கு சோலைக்கிளி எழுதிய (28.04.1995) கடிதத்தில் இதைக் காணலாம். அவரால் இதை எப்படி மறைக்க முடிந்ததோ தெரியவில்லை.

தொழில்ரீதியற்ற நோக்கோடு மிகுந்த ஈடுபாட்டுடன் எம்மால் கொண்டுவர முடிந்த சில


394, Sailan Rd
Kalmunai



வெளியீடுகளில் 'பனியில் மொழி' எழுதியும் ஒன்றுதான். இந்த உழைப்பை படைப்பாளி அதுவும் ஒரு கவிஞன் உணர்தலுக்கு உட்படுத்த முடியாத. அதை மதிக்க முடியாத முரண்நிலையையே சோலைக்கிளியின் சொல்முட்டிய பதில் காட்டிநிற்கிறது.

இன்னொரு விடயத்தையும் சொல்லியாக வேண்டும். எஸ்வி.ஆர் மிக உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் இதற்கான முன்னுரையை எழுதுவதில் ஆர்வம் காட்டியதை அவருடனான தொலைபேசி உரையாடலில் காணக்கூடியதாக இருந்தது. அந்த கவிதைத் தொகுப்பிற்கு எஸ்.வி.ஆர் கீதாவுடன் இணைந்து எழுதிய முகவுரையின் குறித்த பகுதியையும் கேள்வியாளரின் கேள்வியிலுள்ள திரிப்பையும் சோலைக்கிளியின் பதிலிலுள்ள மலினத்தையும் -விமர்சன எல்லைக்குள் செல்லாமல்- வாசகர்களிடம் விட்டுச்செல்கிறேன்.

***

எஸ்.வி.ஆர் இன் முகவுரையில் குறிப்பிடப்பட்ட பகுதி இதுதான்.

"...இத் தொகுப்பிலுள்ள பல கவிதைகளை இன்று பொஸ்னியாவிலுள்ள ஒரு கவிஞன் எழுதியிருக்க முடியும். ருவண்டாவில், சோமாலியாவில், சூடானில், ஆப்கானிஸ்தானில், குர்திஸ்தானில், ஈராக்கில், பெருநாட்டின் ஆண்டெஸ் மலைகளில் -ஏன் காஷ்மீர பஞ்சாப்பிலும்கூட- இக் கவிதைகளை ஒருவர் கேட்டிருக்கக்கூடும். போர்- அது எந்தவகையான போராக இருந்தாலும்சரி, அதன் பக்கச் சார்பாளர்கள் யாராக இருந்தாலும் சரி- அதற்கு எதிரான பிரகடனம்தான் இக் கவிதைகள்..." ○

- திலீனா வீரசிங்க

# குளிர்கிறதா பார் இச்சூடான கண்ணீர் துளிகள் யாழ்ப்பாணத்தில்?

## ரசிகா ஹந்தபான்கொட மனந் திறந்து பேசுகிறார்



பட்டதாரியான ரசிகா இலங்கை சூழலியல் பாதுகாப்பு அமைப்பின் உறுப்பினராவார். அவ்வமைப்பினால் வெளியிடப்படும் 'ஹரித உருமய' (பசுமை உரிமை) எனப்படும் சஞ்சிகையின் ஆசிரியர்களுள் ஒருவர். வடக்கே நடைபெறும் யுத்தம் தொடர்பாக மிகவும் மனவருத்தத்திற்குள்ளாபவர். 'சாதுஜனராவ' (சமாதானத்திற்கான மக்களின் குரல்) எனப்படும் இசை நிகழ்ச்சி தன்னை மிகவும் பாதித்ததை நினைவு கூர்கிறார். சாதுஜனராவ எனப்படுவோர் யுத்தத்திற்கு எதிரான பாடல்களை கிராமங் கிராமமாக சென்று பாடுவதன் மூலமாக மக்களை விழிப்புணர்வூட்டிடும் யுத்த எதிர்ப்பு குழுவினராவர். (சாதுஜனராவ பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் எழுதுகிறேன்).

'குளிர்கிறதா பார் இச்சூடான கண்ணீர் துளிகள் யாழ்ப்பாணத்தில்?' எனும் வரிகளடங்கிய சுவரொட்டிகள் ஆறேழு வருடங்களுக்கு முன்னர் சாதுஜனராவ குழுவினரால் ஒட்டப்பட்டிருந்தன. அச்சுவரொட்டியின் துயர ஈர்ப்பினால் அவர்களின் இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். இந்நிகழ்ச்சியைக் காண்பதற்காக கொழும்பு டவர் அரங்கில் பெருங்கூட்டம் திரண்டிருந்தது. அந்நிகழ்ச்சியில் யுத்த விரோத பாடல்கள் இசைக்கப்படுகையில் அப்பாடல்களுக்கு பின்புலமாயமைந்த நிகழ்வுகளும் எடுத்துக் கூறப்பட்டன. அச்சந்தர்ப்பத்தில் நான் மிகவும் துயருற்றேன். தேசிய ஜனநாயக இயக்கம் தொடங்கப்பட்டதுடன் அதில் இணைந்து செயற்படும் சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தது. அதில் சாதுஜனராவ ஸ்தாபகர்களில் ஒருவரான ஜயதிலக பண்டாரவும் இருந்தார். இதனால் நானும் சாதுஜனராவ குழுவினருடன் தொடர்பு கொள்ள முடிந்தது.

'தேர்தலுக்கு முன்னரான பொதுசன முன்னணி அரசின் காலத்தில், சிங்கள இனவாதிகளின் கெடுபிடியினால் குளியாப்பிட்டி பிரதேசத்தில் எம்மால் சாதுஜனராவ நிகழ்ச்சிகளை நடாத்த முடியாது போய்விட்டது. அதேபோல் ஐக்கிய தேசிய கட்சி அரசின் கீழும் பெப்ரவரி 7ம் 8ம் திகதிகளில் 36 மணித்தியாலங்களுக்கு நடைபெறுவதாகவிருந்த சாதுஜனராவ நிகழ்ச்சியை தீவிர சிங்கள இனவாதிகளின் தாக்குதலினால் இடைநிறுத்த நேர்ந்தது. இவ்விடத்தில் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டியது என்னவென்றால் கொலைப்படையினர் எம்மை தாக்க வந்தபோது அயலிலிருந்த பொதுமக்கள் அவர்களை அடித்துத் துரத்தி நம்மைக் காப்பாற்றினார்கள். இதிலிருந்து இந்நாட்டின் சாதாரண பொதுமக்கள் யுத்தத்தை வெறுக்கிறார்கள் என்பது தெளிவாகிறது." என்று கூறுகிறார்.

ரசிகாவுக்கு கடந்த 5, 6, 7 ஆகிய மூன்று நாட்களும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து வன்னிக்கு பயணம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பயணத்தினால் கிடைக்கப்பெற்ற தமிழ் சகோதரத்துவ அன்பை அதே அன்புடன் தானும் நினைவு கூர்கிறார்.

> *"இந்த யுத்த நிறுத்த சூழலின் மேலோட்டமான பார்வையில் அம்மக்கள் எதிர்கொண்டிருக்கும் அடக்குமுறைகள் புலப்படுவதில்லை. எனினும் இவர்கள் ஒவ்வொருவரும் யுத்தத்தின் ஆழமான வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரது குடும்பத்திலும் யாரோ ஒருவர் யுத்தத்தினால் இறந்திருக்கிறார். அல்லது காணாமற் போயிருக்கிறார், அங்கவீனமாக்கப்பட்டிருக்கிறார். வீடுகள் சிதைக்கப்பட்டிருக்கின்றன"*

'இப்பயணத்தின் போது தான் வடக்கின் நிலைமைகள் பற்றி தெற்கே மனிதர்களுக்கு ஊட்டப்பட்டிருக்கும் கருத்துகள் தவறானவை என்பதை நாம் கண்டுகொண்டோம். அங்கே நாம் சந்தித்த மனிதர்களிடம் சமாதானம் பற்றி பெரும் எதிர்பார்ப்பு காணப்படுகிறது. அதேபோல், இம்முறையும் சமாதானம் கைவிட்டுப் போய்விடுமோ எனும் சந்தேகமும் அவர்களிடம் நிலவுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் என்பவர்கள் வெறுமனே யுத்த குழுவினர் அல்ல என்பதையும் அவர்கள் மாபெரும் மக்கள் அமைப்பினர் என்பதையும் நாம் புரிந்து கொண்டோம்.

'மன்னார் அரிப்பு பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'தமிழ் எங்கள் உயிர்' எனும் கலை நிகழ்விற்கு பெருமளவு மக்கள் திரண்டிருந்தனர். அம்மக்கள் தமது சொந்த விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் அதில் கலந்து கொண்டதை நாம் கண்டோம். தற்போது நிலவும் யுத்த நிறுத்தத்தினால் அவர்களது வாழ்வில் புதுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த தமிழ் மக்களுக்கு தெற்கேயுள்ள சிங்கள மக்கள் மீது எந்தப் பகைமையும் கிடையாது. நாங்கள் மன்னாரில் அம்மக்களின் வீடுகளில் தான் தங்கினோம். தெற்கில் இருந்து சென்றிருந்த சிங்களவரை தமது வீட்டில் ஒரு இரவாவது தங்கவைத்து அவர்களுடன் சுக துக்கங்களை பரிமாறிக் கொள்வதற்கு அக்கிராமவாசிகள் அனைவருமே ஆர்வங் கொண்டனர். எமக்கிடையிலான உரையாடலுக்கு மொழி ஒரு தடையாக இருந்தாலுங்கூட, எம்மிரு தரப்பினரிடையேயும் உள்ள மனிதத்துவத்தினால் அதையும் கடந்து நாம் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும் ஒருவருடன் ஒருவர் பிணையவும் நமக்கு இயலுமானதாயிருந்தது.

'நாம் அங்கே செல்கையில் மிகவும் இருட்டிவிட்டிருந்தது. அவர்கள் எமக்காக உணவு தயாரித்து வைத்து நாம் வரும் வரையில் கண்விழித்துக் காத்திருந்தனர். நட்பை வெளிப்படுத்தினர். அவர்கள் எம்மிடம், வடக்கேயுள்ள மனிதர்களை தமது பிரதேசத்தில் சுதந்திரமாக வாழவிடும்படி சிங்களவர்களிடம் சென்று சொல்லுங்கள் எனக் கேட்டுக் கொண்டனர். இந்த யுத்த நிறுத்த சூழலின் மேலோட்டமான பார்வையில் அம்மக்கள் எதிர்கொண்டிருக்கும் அடக்குமுறைகள் புலப்படுவதில்லை. எனினும் இவர்கள் ஒவ்வொருவரும் யுத்தத்தின் ஆழமான வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரது குடும்பத்திலும் யாரோ ஒருவர் யுத்தத்தினால் இறந்திருக்கிறார். அல்லது காணாமற் போயிருக்கிறார், அங்கவீனமாக்கப்பட்டிருக்கிறார். வீடுகள் சிதைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையினுள்ளும் அவர்கள் மீள வாழ முயற்சிக்கிறார்கள். எதிர்பார்ப்புகளினால் வாழ்க்கையை அம்மக்கள் நிறைத்துக் கொண்டிருக்கிறார்கள். கற்றுக் கொள்கிறார்கள். தரிசு நிலங்களை உழுது விதைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அவற்றுடன் கூடவே அவர்கள் தமது அரசியலில் பிணைந்து தம்மை மீள மனிதர்களாக வாழ இடமளிக்குமாறு தெற்கின் சமூகத்தை நோக்கி அழைப்பு விடுக்கிறார்கள்.

மன்னார் அரிப்பில் நடந்த நிகழ்ச்சியின் போது அவர்கள் ஆறு பிரதான கோரிக்கைகளை முன்வைத்தார்கள். அதில் தமிழ் மக்களை மனிதக் கண்ணோட்டத்துடன் பார்க்குமாறு கோரும் கோரிக்கையும் அடங்கியிருந்தது. இக்கோரிக்கையானது இதுவரை தமிழரை ஒரு இனமாக பார்த்து வந்ததோடு தமிழரை சகோதரத்துவமான மனிதத்துவமான கண்ணோட்டத்துடன் பார்க்குமாறும் கேட்கிறது. உண்மையிலேயே இதுவரை நிறைவேற்றப்படாத அக்கோரிக்கையை நாம் நிறைவேற்றியே ஆக வேண்டும். எமக்குள் நிலவிவரும் தவறான சித்திரங்களை, கருத்துகளை சிதைத்து அவர்களை நமது நாட்டின் சகோதர சகோதரிகளாக வரித்துக்கொள்ள வேண்டும். அவர்களின் அரசியல் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டும்." என்று தெரிவித்தார். ○

---

- பெரியார்

# 'இந்து' என்று சொல்கிறவனுக்கு பெண்ணுரிமை பேச அருகதையே இல்லை

பெண்கள் சுதந்திர விஷயத்தில் எனக்கு மிக்க ஆவல் உண்டு. என்னுடைய இயக்கத்தில் அதற்கு நான் முக்கிய இடம் கொடுத்திருக்கிறேன். என்னுடைய அபிப்பிராயத்தில், ஓர் 'இந்து' என்பவன் - தன்னை ஓர் இந்து மதத்தவன் என்று சொல்லிக் கொண்டு, பெண்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று சொல்வதை ஒருக்காலும் ஒப்புக் கொள்ள முடியாது. ஏனென்றால், இந்து மதத்தில் பெண்களுக்குச் சுதந்திரம் இல்லை என்பதை நீங்கள் நன்றாய் உணர வேண்டும்.

பெண்களுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுக்கப் பிரியப்படுபவர்கள், அதற்குத் தடையாய் உள்ளதை எதிர்க்கவும் அழிக்கவும் துணிந்தவர்களாயிருந்தால் தான் - அவர்கள் உண்மையான சுதந்திரவாதிகள் ஆவார்களே தவிர, மற்றபடி தடைகளை ஆதரித்துக் கொண்டு சுதந்திரம் பேசுகிறவர்கள், தந்திரவாதிகளே ஆவார்கள் அல்லது மூடர்களே ஆவார்கள்.

இந்துப் புராணங்களையும் சாஸ்திரங்களையும் ஒப்புக் கொள்கிறவனும், உண்மையான சனாதன இந்துவென்று சொல்லிக் கொள்கிற எவனுக்கும் பெண்கள் சுதந்திரத்தைப் பற்றிப் பேச உரிமையில்லை என்பது தான் எனது அபிப்பிராயம்.

இந்த விஷயத்தில் திராவிட தர்மமோ சமண தர்மமோ எல்லாம் - ஒரேவித யோக்யதை கொண்டதே என்பது எனது அப்பிராயம். தெய்வத் தன்மை பொருந்தியவர் என்று சொல்லும் திருவள்ளுவர் என்பவர் கூடத் தம் பெண்சாதியை 'விபச்சாரியா' 'பதிவிரதையா' என்று பரீட்சித்துப் பார்க்க ஆசைப்பட்டு, மணலைச் சோறாகச் சமைத்துப் போட்ட பிறகே தான் கலியாணம் செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தப்படி பரீட்சை செய்து பார்த்தால், இன்றைய தினம் உலகத்தில் உள்ள பெண்கள் எல்லாம் - இங்கு இருக்கிற பெண்களெல்லாம் 'விபச்சாரி'களென்று தான் நாம் தீர்மானிக்க வேண்டும்.

ஏனெனில், ஒரு சகோதரியாலும், மணலை அரிசிச்சாதமாக சமைக்கவோ, மழை பெய்யச் சொல்லவோ, பச்சை வாழைத்தண்டை கொண்டு சமையல் செய்யவோ முடியாதென்று சொல்ல வேண்டியிருக்கிறது. வேறு எந்த காரியத்துக்காகவும் இந்து மதத்தை ஒழிக்காமல் தாட்சண்யம் பார்ப்பதாயிருந்தாலும் - பெண்களுடைய சுதந்திரத்தை உத்தேசித்தாவது, இந்து மதமென்பது அழிய வேண்டியது மிக்க அவசியமாகும்.



> *"இந்து மத தர்மம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் போன்ற அழுக்கு மூட்டைகளைச் சுமந்து கொண்டு, யார் எங்கு போய் பெண்கள் சுதந்திரம் பேசினாலும் அது கட்டுப்பாடுள்ள அடிமைப் பிரகாரமாகத் தான் முடியுமே தவிர, அது சிறிதும் விடுதலையை உண்டாக்காது. மேலும், பெண்களைப் படிக்க வைக்க வேண்டுமென்று சொல்லி, எழுத்து வாசனை உண்டாக்கி அவர்களுக்கு அரிச்சந்திர புராணத்தையும் நளாயினி கதையையும் ராமாயணத்தையும் படிக்க வைத்தால், அடிமைகள் ஆவார்களா/ சுதந்திரமடைவார்களா/*

உண்மையாகப் பெண்கள் விடுதலைக்கு மார்க்கம் கண்டு பிடிக்கப்படவில்லை என்பது தான் எனது அபிப்பிராயம்.

பெண்கள் விடுதலைக்கு வெளியில் வருபவர்கள், பெண்கள் சம்பந்தமான இந்துமத தர்மத்தையும் சாஸ்திரத்தையும் புராணத்தையும் இதிகாசத்தையும் ஒதுக்கி வைத்து விட்டுத்தான் வரவேண்டும்.

இவற்றை எல்லாம் விட கற்பு என்கின்ற ஒரு பெரிய கற்பாறை, அயோக்கியத்தனமாய் அவர்கள் தலைமீது வைக்கப்பட்டிருக்கின்ற வரையில், ஒரு நாளும் பெண் மக்களை - உலகம் முன்னேற்றமடையவோ, சுதந்திரமடையவோ, ஒருக்காலும் விடவே கூடாது. கற்புக்கு லட்சணம் சொல்கிற போது, ஒரு பழமையான தமிழ் நூலில் காணப்படும் ஒரு வார்த்தை எவ்வளவு கடுமையான அடிமைத்தனத்தை மனதில் வைத்து உண்டாக்கப்பட்டதென்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

அதாவது யாராவது ஒரு புருஷன் ஒரு பெண்ணைப் பார்த்து அவளைத் தன் மனதில் நினைத்து விட்டானேயானால், அந்தப் பெண்ணுடைய கற்புக் கெட்டுப் போய்விட்டதாம். ஏனெனில், அந்தப் பெண் கற்புடையவளாயிருந்திருந்தால், மற்றொரு மனிதன் அவளை மனதில் நினைத்திருக்க முடியாதாம். எவ்வளவு (அ) நீதி என்பதை நினைத்துப் பாருங்கள்! எந்த நிர்ப்பந்தமானாலும், எந்தக் கட்டுப்பாடானாலும் எந்தத் தருமமானாலும், ஆணுக்கும், பெண்ணுக்கும் அதாவது இருவருக்கும் சமமாக இருப்பதானால் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ○

---

### மு.பொ.வின் 'பொறியில் அகப்பட்ட தேசம்' நூல் வெளியீடும் விமர்சனமும்

எதிர்வரும் 10.03.2002 ஞாயிறு மாலை 4.30 மணியளவில் மு.பொ.வின் "பொறியில் அகப்பட்ட தேசம்" நூல் வெளியீடும் விமர்சனமும் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் (சிறிய மண்டபம்) நடைபெறவுள்ளது. நூல் வெளியீட்டிற்கு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி பிரதி அதிபர் த.இராஜரத்தினம் தலைமை வகிக்கிறார். நூல் விமர்சனம் உரையை செல்வி. திருச்சந்திரன், எஸ்.கே.விக்னேஸ்வரன், இளையதம்பி தயானந்தா, ஓட்டமாவடி அறபாத் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். ஏற்புரை, நன்றியுரையை நூலாசிரியர் மு.பொன்னம்பலம் நிகழ்த்துவார்.

# மீளாதது



அண்ணாவை கதிரையிலே இருத்தி காலிரண்டையும் சங்கிலியில் இணைக்கப்பட்ட பூட்டினால் பூட்டி கேற்றையும் பூட்டிவிட்டு நிமிர "அம்மா என்னையும்" என்றவாறு எனது மகன் கைகளை நீட்டினான்.

அவனைத்தூக்கி அண்ணாவின் மடியில் இருத்தினேன். என்னுடைய தினசரி வேலைகளில் ஒன்று முடிஞ்சிட்டுது. இனி அண்ணா தெருவையே பார்த்துக் கொண்டிருக்க, மகன் வாய் ஓயாது கதைத்துக் கொண்டிருப்பான், காண்பது, நினைப்பது பற்றியெல்லாம் கேள்விகள், அண்ணாவிடமிருந்து பதிலேதும் வராது. பதிலில்லாததால் சலித்து கதையை விடவும் மாட்டான்.

தனது கேள்விகளுக்கான பதிலை அவரிடமிருந்து வாயினால் எதிர் பார்க்காதவன் போல அண்ணாவின் கை அவனது தலையை இடைவெளியின்றி கோதுகின்றது வருடலில்... அண்ணா தனக்குள் அமிழ்ந்து சிரிக்கும் சிரிப்பில் தனது கேள்விகளுக்கான பதில் கிடைத்து விடுகிற மாதிரி கொஞ்ச நேரத்தில் நித்திரையாகி விடுவான்.

அண்ணா, அவன் தன்னுடன் கதைப்பதோ, பிறகு நித்திரையாவதோ எதுவும் புரியாது தெருவைப் பார்த்தவாறு தனக்குள் மூழ்கி விடுவார். அவர் இப்படியாக ஆனதிற்குப் பிறகு தன்னுடைய உணர்வுகளை பேச்சாகவோ, செயலாகவோ வெளிக்காட்டாத உறைந்த மௌனமொன்றுள் மூழ்கிப் போயிருந்தார்.

அவரோட எந்த விதத்திலும் நாங்கள் தொடர்பு கொள்ள ஏலாது. பசி, தூக்கம் எல்லாம் தான் விரும்பினால் மட்டும் தான். ஆனால் மற்ற மனநோயாளிகளைப் போல் கத்தவோ முரண்டு பண்ணவோ மாட்டார்.

கேற் திறந்திருந்தால் தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினால், இலக்கில்லாமல் நடந்து கொண்டே இருப்பார்.

நிறைய மனநோய் மருத்துவர்களிடம் காட்டினம். "ஏதோ ஒரு அதிர்ச்சியால இவருடைய உணர்வுகள் அடங்கிப் போயிருக்குது, காலப்போக்கில் இயல்பாக ஏதும் மாற்றம் வந்தால் தவிர வேறு வழியில்லை" எனக் கை விரித்தார்கள்.

மனநோயாளிகளை மனிதர்களில் இருந்து தனிமைப்படுத்தக் கூடாது. மனிதர்களில் ஏற்படுகிற உணர்வு மாற்றங்களைப் பார்த்து எங்கட அண்ணாவும் காலப்போக்கில் மாறுவார் என்ற எண்ணத்தில் அறையில பூட்டாமல் தெரு முழுவதும் வடிவாகத் தெரிகிற எங்கடை வீட்டு வாசல்ல கதிரையில இருத்துவம். கேற்றைத் திறந்து வெளியில போயிடுவார் எண்ட பயத்தில காலில் சங்கிலியால பூட்டு.

ஒவ்வொரு நாளும் இதைச் செய்யேக்க நெஞ்சு கனக்கும்.

எங்கட அறிவான அருமையான அண்ணாவை....

ம்... ஊரில எண்டால் இது "சோமசுந்தரத்தாற்ற மகனெல்லோ" எண்டு கூட்டிக் கொண்டு வருவினம்?

இஞ்ச... நாங்கள் இருக்கிற பொரளை ரொட்னி றோட்டில, அனேகமாக முழுவதும் சிங்கள ஆக்கள். சில மலாய் முஸ்லிம் வீடுகளும் இருக்குது. தமிழரின்ர வீடுகள் ஒன்றிரண்டு தான். மலிவுக்காகத்தான் இந்த இடத்தில வீடு வாங்கினது. இங்க வந்து பத்துவருசத்துக்கும் மேல, ஆனால் யாரோடையும் நெருக்கமான பழக்கமில்லை.

இங்க வந்த புதிசில, அவரும் வேலைக்குப் போன பிறகு நானும், அண்ணாவும் தனிய இருக்கிற இந்த நேரங்களில யார் கூப்பிட்டாலும் பயத்தில வெளியில கூடப் போக மாட்டன்.

பிறகு மெல்ல மெல்ல இடம் பழக... அவர்களோடு புன்னகையில் ஆரம்பித்த பழக்கம் எனது மகன் பிறந்தாப் பிறகு சின்னச் சின்ன வார்த்தைகளா மாறிச்சுது.

என்னுடைய மகன்தான் அவைக்கும் எனக்குமான நட்பின் மையம். அவனுடைய விளையாட்டுக்கள், குறும்புகள் பற்றித்தான் அனேகமாகக் கதைப்போம்.

பொதுவாக அவையோட கதைக்கிற நேரங்கள் அண்ணாவை கதிரையில் இருத்திற இந்த நேரங்களாக இருக்கிறதால அண்ணாவைப் பற்றியும் கதைவரும். தாங்கள் இப்படி எந்த உணர்வையும் வெளிக்காட்டாமல் இருக்கிற மனநோயாளிகளைக் காணவில்லை என்பார்கள். ஆனால் கதை நீளாது. ஊரில் எண்டால் "ஓ விசரோ" எண்டு கதை நீண்டிருக்கும். அப்பிடிப் பார்த்தால் அவையில் எந்த வித்தியாசமும் எனக்குத் தெரியேல்ல. அனுதாபத்தையோ, வேதனையையோ, அப்ப அந்தக் கண்களில் நான் காணேல்ல.

இதுதான் அவைக்கும், எனக்குமான நட்பிற்கு எல்லையாக இருந்ததோ தெரியவில்லை. என்னுடைய கணவருக்கு எப்பவும்,

- பிரதீப குமரன் -

இதுகள் நாகரிகமானதுகள். ஆனால் எனக்கும் அவைக்குமான பழக்கத்தில் ஒரு எல்லை இருக்கிறது போல தெரியும்.

கொலன்னாவை தாக்குதல் நடந்தநேரம் எங்கட பகுதியில கூடின பதற்றம். ஒவ்வொரு முறையும் ஆமியும், பொலிசும் வந்து வீட்டை 'செக்" பண்ணிட்டுப் போக அயல் வீடுகளில் உள்ளவையின்ரை கண்கள் சந்தேகத்தோடையும், கோபத்தோடையும் எங்களைக் கவனிக்கிற மாதிரி ஒரு உணர்வு.

சிங்கள ஆமி 95 இல் யாழ்ப்பாணத்தில கொடியேற்றின பொழுதும் எல்லோரும் வழமை போல கதைச்சாலும் அவையின்ர உதடுகளுக்குள்ள ஒரு ஏளனப் புன்னகையும், கண்களில் வெற்றியின்ர இறுமாப்பும் தெரிகிறது போல எனக்குத் தோன்றும்.

ஆனால் எங்கட சனம் இரவோட இரவாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி மழையிலும், வெயிலிலும் இருக்க இடம் இல்லாம தென்மராட்சியிலும், வன்னியிலும் துன்பப்படேக்க அவதானமும் பயமும் கூட, நாங்கள் தமிழர் என்கிற அடையாளமே வெளியில தெரியாமல் வாழவேணும் என்பார்.

சிங்கள ஆமி 95 இல் யாழ்ப்பாணத்தில கொடியேற்றின பொழுதும் எல்லோரும் வழமை போல கதைச்சாலும் அவையின்ர உதடுகளுக்குள்ள ஒரு ஏளனப் புன்னகையும், கண்களில் வெற்றியின்ர இறுமாப்பும் தெரிகிறது போல எனக்குத் தோன்றும்.



வெளியில வெளிக்கிட்டால் மகன் ஏதும் கேட்டாலும் அனேகமாக சிங்களத்தில தான் பதில் சொல்லுவார்.

அவருடைய இந்த இயல்புகளால எங்கடை ஊரைப்பற்றி, சனத்தைப் பற்றி, நானும் அண்ணாவும் அம்மா அப்பாவோட வாழ்ந்த அருமையான வாழ்க்கையைப் பற்றி, எங்கட மண்ணில நடக்கிற போராட்டம் பற்றி என்னுடைய எண்ணங்களை அவரோட மனந்திறந்து கதைக்கேலாமல் இருக்கும்.

பழைய நினைவுகள் என்னை வந்து சூழ்ந்து கொள்கிற நேரங்களில அண்ணாவுக்கு பக்கத்தில இருந்து எல்லாம் சொல்லுவன். அண்ணாவுக்கு எதுவும் புரியாது என்பது தெரிந்தாலும்கூட - எனக்கு அதில ஆறுதல் கிடைக்கும்.

இப்படியான நேரங்களில அண்ணாவுக்கா? எனக்கா? மனநோய் என எண்ணிச் சிரிப்பேன்.

"செங்கல்லும் புத்தகமும்"

"பொத்தக மத்தியஸ்தனை கதலகண்ட"

"பொத்தக மத்தியஸ் தானட்ட பொத்தக தென்னங்"

இந்தக் கோசங்களோட சிங்கள பைலாப் பாட்டொன்றும் சேர்ந்து தெருவில் ஒலிக்க... என் சிந்தனை அறுந்தது.

எங்கடை எரிக்கப்பட்ட யாழ் நூலகத்தின்ர படத்தை தாங்கியவாறு வாகனம் ஒன்று, கோசம் போடுறவையும், வாகனத்தை சுற்றி பைலாவோட கொஞ்சப் பேருமாக... தெருவில் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் வாகனம் நின்று நின்று வந்தது.

எங்கள் வீட்டின் முன் வந்து நிற்க முன்னுக்கு வந்தவர், யாழ்ப்பாணத்தில ஒரு நூலகம் இருந்ததென்றும். அது இப்போது எரிந்து விட்டதாகவும், தாங்கள் இப்போது யாழ்ப்பாணத்தை பிடிச்சிருக்கிறதால திரும்ப அந்த நூலகத்தை அமைக்க உதவ வேண்டும் என்றும் சொன்னார்.

அவர்களில் சிலரை இதற்கு முன்பும் கண்டிருக்கிறன். இந்தப் பகுதியில "பிரபலமானவர்கள்" தமிழரின்ர வீடுகள் எண்பத்தி மூன்றில எரிபடேக்க இந்தப் பகுதியில் அந்த வேலையளை இவையள் தான் செய்ததா என்னுடைய கணவர் சொல்லுவார்.

வந்த மனிதர்கள் வாகனத்தில ஒட்டப்பட்டிருந்த எங்கட நூலகத்தின்ர படம், அவர்கள் தாங்கியிருந்த செங்கல்லும் புத்தகமும் வாசகம் அவர்களின்ர கையில இருந்த யாராலோ அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டிருந்த சில தமிழ் வார சஞ்சிகைகள், உண்டியல்ல குலுங்கிக் கொண்டிருந்த சில்லறைகளின்ர சத்தம்... நெஞ்சுக்குள்ள ஏதோ ஒரு வேதனை உணர்வை எழுப்ப அண்ணாவைத் திரும்பிப் பார்த்தேன்.

நூலகப் படத்தை எந்த இலக்குமில்லாமல் அண்ணாவின்ர கண்கள் பார்த்துக் கொண்டிருந்தன. முகத்தில எந்த உணர்வுமில்லை. "ஐயோ அண்ணா" என்னையறியாமல் கத்தினேன். வந்தவர்களின் பார்வை என்மேல் கேள்வியுடன் படிந்தது. என்னால கட்டுப்படுத்த முடியாமல் அழுகை வந்தது.

இப்படித்தான் அண்ணா அன்றைக்கு அழுதார். நூலகம் எரிகிறதை நேரே பார்த்திட்டு வந்து தொண்ணூற்று இரண்டாயிரம் புத்தகமும் போச்சுது என்று இப்படித்தான் அழுதார். அதுக்குப் பிறகு எதுவுமே பேசாமல் மௌனமாகிப் போனார். பல்கலைக்கழகத்தில படிச்சுக் கொண்டிருந்த மகனின்ர எதிர்காலத்தைப் பற்றி நிறையக் கற்பனைகளை வச்சிருந்த அம்மா அதிர்ச்சி தாங்காமல் சொஞ்ச நாளில் சாக எனக்கு உடனடியாக திருமணம் செய்து வச்சிட்டு அப்பாவும் போய்ச் சேர்ந்திட்டார்.

எந்தக் கவலையும் இல்லாமல் வளர்ந்த நான் இவ்வளவு கவலைகளுக்கும் இடிதாங்கியா மாறினேன்.

இதில எதையும் என்னை வியப்போட பார்க்கிற, வந்தவர்களுக்கு சொல்லேலாது. உடனடியா இவையை இந்த இடத்தை விட்டு அனுப்ப வேணும். நடப்பது எதனையும் அறியாமல் மீள முடியாத மௌனத்தில இருக்கிற அண்ணாக்குப் பக்கத்தில இருந்து நான் அழவேணும். அதுக்கு முதல்... என்னுடைய கைகளில் இருந்த சில்லறைக்காசை உண்டியல்ல போட்டேன். வாகனம் எங்கட கேற்றைத் தாண்டி நகரத் தொடங்கியது.

நன்றி:
ஆரண்யக் கனவு

## மெளனத்தின் குரல் - 1

பறையறைந்து
உன் செய்திகளை
பிரகடனம் செய்கின்றாய் நீ

என் மௌனம்
அடிவாங்கி
அடிவாங்கி
பறையின் தோலாய்
அதிர்வுற
அதிர்வுற
ஊரெங்கும் உன்செய்தி பரவுகிறது:

செவிப்பறை கிழிய
மனம் நொறுங்கிச் சிதைய
என்னால் வெளிப்படுத்த முடியாது போகும்
நியாயங்களின் குரல்
இரத்தமாய் சொட்டுகிறது!

நான் இறந்து போவேன்:
உறைந்த என்
இரத்தத் துளியில் இருந்து
குரல்களின் வெள்ளமொன்று
உயிர்க்கும்!

~ வாசுதேவன் ~

## எனது மலையுச்சி மனிதன்

ஓர் அழகிய வண்ணத்துப் பூச்சியை
நான் வரைகிறேன்~
தாளிலிருந்து அது பறந்துபோகும்வரை.
அதுவரை என்னை நான்
ஓர் ஓவியனாக பிரகடனப்படுத்துவதாயில்லை.

முகம்தொலைந்து
சதையிறுகிப்போய்விட்ட
மனிதக்கூடொன்றின் கையில்
துப்பாக்கி மட்டும்
பளபளக்கிறது.
எனது தேசத்து மலையுச்சியில்
தேங்கிப்போனதெல்லாம் இந்த மனிதனும்
எரிந்துபோன முகில்களும் மட்டுமே.


வெடிகுண்டில் பூவிரித்து
சமாதானச் சிரிப்பொழுக
முகத்தை சிரமப்படுத்தும் மனிதர்களே!
வரையுங்கள் உங்கள் சமாதானத்தை,
இந்த மனிதன் எழுந்து நடக்கட்டும் ~
விரல்நழுவி விழும் துப்பாக்கியுடன்.
குழந்தை தன் முகத்தில் நிலாவை வரையட்டும்.
நாயொன்று தன் வித்தியாசமான குரைப்பை நிறுத்தட்டும்.

எமது வீதிகளைவிட்டு அகன்றுகொள்ள வேண்டியது
அந்நியர்கள் மட்டுமல்ல,
எனது இனத்து
பூச்சாண்டிகளும்தான்.

ஓர் அழகிய காலை
எனது விழிவழியே துள்ளியோட
முகம்கொள்ளா மகிழ்வுடன்
எனது பொழுதை நான் தொடங்க வேண்டும்.
பாடசாலைகள்
வேலைவெட்டிகள்
சனசந்தடிகள் தாங்கியபடி...
மெல்லியதாய் மௌனப்படட்டும் எம் மாலைப்பொழுது.
என் உடலின் பிடிநழுவி
இருளில் மிதந்துசென்று,
சேதிகண்டு ஓடிவந்து
மீண்டும் வந்தமரும் விழிகளோடு
எப்போ நான் நடப்பேன்?

எதிர்வுசொல்லும் குடுகுடுப்பைக்காரர்களே
இந்தச் சேதியையும் எடுத்துச் செல்லுங்கள்,
எனது மலையுச்சி மனிதன்
தன் உயிர்ப்புக்காய்க் காத்திருக்கிறான்.

- ரவி (சுவிஸ்)



## மறுபதிப்பு

எனக்குள்ளிருந்த அவன்
குதிக்கத் தொடங்கினான்

தலைவர்கள் நேற்றும்
வீடு வந்தனர்
எனைப் பற்றி நலம் கேட்டனர்
சரித்திரத்தின் கீர்த்தி
மக்கள் நலன்
சமுதாய உயர்வு பற்றியெல்லாம்
எனக்கவர்கள்
புராணங்கள் போதித்தனர்..

இதிகாசங்கள் இனிமையானவையே,
நடைமுறைக்கு வராத வரையும் ~
ஆயின்,
நல்லன செவியுறும் போது
நானும்
நல்லவனாயிடத் தோன்றிற்று
ஆயுளின் அந்தக் கணங்கள்
அற்புதமானவை
ஒரு போர்வாளாய் எனைக் கூர்தீட்டி
விடை பெற்று அவர்கள்
படியிறங்கத் தொடங்கினர்

"வருவது தேர்தலல்லவா
உன்' ப்ரமோசனையும் சொல்லி வை"

எனக்குள்ளிருந்த அவன்
குதிக்கத் தொடங்கினான்.

ஏ.ஜீ.எம்.ஸதக்கா
வாழைச்சேனை 05

## பயணங்களும் அதிசயங்களும்

பற்கள் கிண்டி உடல் நடுங்குமளவு
பனி போர்த்தும்
மிக அதிகாலை இருளில்
மன்னம்பிட்டி சோதனைச் சாவடி முன்னால்
ஒரு மணி நேரம்
கால் கடுக்க உன்னால்
வரிசையாக நிற்க முடியுமானால்
சிலசமயம்
நீ தற்கொலை செய்து கொள்ளவும் கூடும்

விசித்திரமாகத்தான் உள்ளது

மூட்டைகள் பொதிகள் சுமந்த
லொறிகள் வேன்கள்
எனைக் கடந்து போகையில்
என்னிடமிருந்த பயணப்பை மட்டும்
படைவீரனின்
அச்சத்துக்குரியதாவது இங்கு
அதிசயமாகத்தானிருக்கிறது

பயணங்கள் ~
புறப்பட்ட இடத்திற்கு
உயிரோடு திரும்புதல் என்பது
விசித்திரமானதும்
அதிசயமானதும்தான்

வாழ்க்கையைப் போல

ஏ.ஜீ.எம்.ஸதக்கா
வாழைச்சேனை 05

## வரலாற்றை...

VI பக்கத் தொடர்ச்சி

தஞ்சம் வழங்கப்பட்டிருக்கின்றார்.

சிலி ஜெனரல் பினோஷேவின் கீழ் இருந்த காலத்தில் அதன் இராணுவத்தின் பெரும் புள்ளியாய் இருந்து படுகொலைகளையும், சித்திரவதைகளையும் நிகழ்த்திய நபர் இன்று மியாமியில் பாதுகாப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

அதுமாதிரித்தான் ஈரானின் நன்கு அறியப்பட்ட சிறைக்கூடங்களை நடாத்திய ஜெனரல் ஒருவரும் அமெரிக்கப் பிரஜையாக தற்போது வாழ்ந்து வருகிறார்.

கம்போடியர்கள் பலரின் சாவுக்குக் காரணமாயிருந்த பொல்பொட்டின் முக்கிய உறுப்பினர் ஒருவர் நியூயோர்க்கின் Mount Vernon பகுதியில் வாழ்ந்து வருகிறார்.

இவர்களின் பொதுவான பயங்கரவாதச் செயற்பாடுகள் விடுத்து இவர்கள் அனைவருக்கும் வேறு ஒரு பொது அம்சமும் இருக்கிறது. அது, இவர்கள் அனைவரும் அமெரிக்க அரசாங்கத்திற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ வேலைசெய்தவர்கள், அமெரிக்காவின் மிக மோசமான கொள்கைகளை முன்னின்று நடத்தியவர்கள் என்கிற அம்சம்!

ஜோர்ஜியா Fort Benni பெலுள்ள உலகின் முன்னணிப் பயங்கரவாத பல்கலைக்கழகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அல்-காஇதாவினரது பயிற்சி முகாம்கள் வெறும் பாலர் பாடசாலைகள்தான்! School of Americas என அறியப்பட்ட இதிலிருந்து வெளியேறியவர்கள் தான் இன்று உலகின் பல அரசபயங்கரவாத நாடுகளின் உயர் பதவிகளில் இருக்கிறார்கள். உதாரணத்திற்கு, கௌதமாலாவின் அரச அமைச்சர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் இதனது பட்டதாரிகள். எல்சல்வடோரிய சிவில் யுத்தத்தின் போது மிக மோசமான அழிவுகளை நிகழ்த்திய அதன் இராணுவ அதிகாரிகளில் மூன்றில் ஒரு பகுதியினர் இங்கு கற்றவர்கள். சிலியில் வதை முகாம்களை நடாத்திய, பினோஷெட்டின் இரகசியப் பொலிஸ் தலைமையாளராய் இருந்தவரும் இங்கு கற்று வெளியேறியவர்தான்.

இவ்வாறான பயங்கரவாத வரலாறு கொண்ட நாட்டின் மேல் மக்களது விமர்சனங்கள் எதிர்ப்புணர்வுகள் எழும்பாமல், வேறு திசையில் எழும்ப செப்டம்பர் பதினொன்று தாக்குதல் காரணமாகியிருப்பது ஒரு மிக மோசமான நிகழ்வுதான். உண்மையில் உலக மேலாதிக்கமே அமெரிக்காவின் குறிக்கோளேயல்லாமல் பயங்கரவாதத்தை தோற்கடித்தல் என்பதல்ல. அரசியல் ஞானசூனியங்கள் தான் உண்மை தெரியாது இந்த மாயைகளை நம்புவர்.

US Space Command முன்வைத்த, உலகின் சுப்பர் பவர் எதிர்கொள்கிற புதிய அச்சுறுத்தல்கள் என்கிற ஒரு ஆய்வில், "உலகின் இருப்பவர்கள், இல்லாதவர்களுக்கிடையே நீண்டு கொண்டு செல்லும் இடைவெளி முற்றுமுழுதான (கடல், ஆகாய, நில, விண்வெளி ஆதிக்கத்தால் மட்டுமே தீர்க்கப்படமுடியு"மென்று சொல்லியிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது!

○

# வரலாற்றை பொய்களாலும் அப்பாவி மக்களின் இரத்தத்தாலும் எழுதுதல்!

- எம்.கே.எம்.ஷகீப்

*(சென்ற இதழ் தொடர்ச்சி.)*

மௌனத்தைக் கலைப்பதன் அர்த்தம் என்னவென்றால், எங்கள் வாழ்க்கைக் காலத்து வரலாற்றை பொய்களாலும், அப்பாவி மக்களின் இரத்தத்தாலும் எழுத அனுமதிக்கக்கூடாது என்பது தான். ஆப்கானிஸ்தானில் கிடைத்திருக்கிற குறிப்பிடத்தக்க வெற்றி என்று டொனிபிளேயர், ஸ்ட்ரோ, புஷ்ன் போன்றோர் சொல்கிற பொய்களை விளங்கிக் கொள்ள Total War என்ற நூலின் மூல எழுத்தாளரும், முன்னாள் ஜனாதிபதி கார்ட்டரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்தவரும், தற்போதும் வாஷிங்டனின் சக்திவாய்ந்த பிரமுகருமான Zbigniew Brzezinski இன் எழுத்துக்களை வாசித்துப் பாருங்கள்.

"1979 யூலை மூன்றாம் திகதி, ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், அமெரிக்க மக்களுக்கும் காங்கிரசுக்கும் தெரியாதவகையில் மிக இரகசியமாக, மத்திய ஆசியாவில் 'இஸ்லாமிய அடிப்படைவாதத்தை'ப் பரப்பி, சோவியத் யூனியனைச் 'செயலிழக்கச் செய்ய' சர்வதேச பயங்கரவாத அமைப்பொன்றை உருவாக்கும் நோக்கில் 500 மில்லியன் டொலர்களை வழங்கினார்" என்ற ரகசியத்தை Brzezinski வெளிக்கொணர்ந்தார்.

CIA இந்த நடவடிக்கையை Operation Cyclone என அழைத்தது. பின் வந்த வருடங்களில் பாகிஸ்தானில் இஸ்லாமியப் பயிற்சிப் 'பாடசாலைகளை' நிறுவ (கவனிக்கவும் 'தலிபான்கள்' என்றால் மாணவர்கள் என்று அர்த்தம்) மேலும் நான்கு பில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டன.

இளம் 'நம்பிக்கையாளர்கள்' CIA யின் வேர்ஜினியாவிலுள்ள அவர்களின் உளவுப் பயிற்சி முகாமுக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கே தான் அப்போது எதிர்கால அல்கய்இதா உறுப்பினர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளின் உச்ச தந்திரங்களை, செயற்பாடுகளைக் கற்றுக் கொண்டார்கள்.

ஏனையோர், நியுயோர்க் புறூக்லீனிலுள்ள (இங்கிருந்து கண்ணுக்கெட்டிய தூரத்தில்தான் உலக வர்த்தக மையக் கட்டிடம் இருந்தது) இஸ்லாமியப் பாடசாலையொன்றில் சேர்க்கப்பட்டார்கள்.

பாகிஸ்தானில் அவர்கள் பிரித்தானிய M16 அலுவலர்களால் வழிநடத்தப்பட்டு SAS யினரால் பயிற்சியளிக்கப்பட்டார்கள்.

கடைசியில் இதன் விளைவாக என்ன நடந்தது என்றால் பயிற்றுவிக்கப்பட்டவர்களில் குறிப்பிட்ட சிலர் தங்களுக்கென்ற ஒரு பாதையை வகுத்துக் கொண்டு செயற்படவாரம்பித்தார்கள். அவர்கள் தான் 'தலிபான்:கள்'

1970 களின் கடைசியில் அமெரிக்காவின் குறிக்கோளாக இருந்தது எதுவெனில், பெண்களுக்கு சம உரிமை வழங்கி, சுகாதார, கல்வி அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு, நிலவுடைமை முறைகளை இல்லாதாக்க முயன்ற ஆப்கானிஸ்தானின் முதலாவது முற்போக்கு அரசாங்கத்தை கவிழ்ப்பதாகும்.

1996 ல் தலிபான்கள் ஆப்கானைக் கைப்பற்றியவேளை முன்னாள் ஜனாதிபதியை காபூலில் பகிரங்கமாகத் தூக்கிலிட்டுக் கொன்றார்கள்.

The Wall Street Journal இவ்வாறு எழுதியது - "அமைதியை ஏற்படுத்துகிற விளையாட்டை விளையாடுவதற்கு மிகத் தகுதி பெற்றவர்கள் தலிபான்களே. மத்திய ஆசியாவின் பாரிய எண்ணெய் மற்றும் ஏனைய வளங்களை ஏற்றுமதி செய்யும் பிரதான மார்க்கமாக தங்கள் நாட்டை பாதுகாத்துக் கொள்வதில் அவர்கள் முக்கியத்துவமானவர்களாக இருந்தார்கள்."

எந்த அமெரிக்கப் பத்திரிகைகளும், இந்தக் கொள்கைகளின் விளைவு தான் இன்றைய கேம்ப் எக்ஸ்ரே கைதிகள் என்ற உண்மையையோ, இந்தக் கொள்கைதான் செப்டம்பர் 11 தாக்குதலுக்கு இட்டுச் சென்ற பிரதான காரணம் என்ற விடயத்தையோ பேசமுன்வரவில்லை. ஏன், இந்தக் தாக்குதலின் உண்மையான வெற்றி யாருக்குக் கிடைத்தது என்ற கேள்வியைக் கூட அவர்கள் எழுப்பவில்லை!

தாக்குதலின் பின்னர், Wall Street பங்குச் சந்தை மீள இயங்கிய முதலாவது நாள், பெரும் ஆயுத தரகு நிறுவனங்கள் தான் (Alliant Tech Systems, Northrop Gruman, Raytheon, Lockheed Martin) உயர்பெறுமானங்களைக் கொண்டிருந்தது. அமெரிக்க இராணுவத்தின் பிரதான விநியோக நிறுவனமான Lockheed Martin 30 வீத பங்குப்பெறுமதி அதிகரிப்பைக் கண்டது குறிப்பிடத்தக்கது.

செப்டம்பர் பதினொன்று தாக்குதலின் ஆறு வாரங்களுக்குள்ளாகவே இந்த நிறுவனம், (ஜோர்ஜ் புஷ்ஷின் தாயக மாநிலமான டெக்சாஸில் இதனது பிரதான தொழிலகம் அமைந்திருக்கிறது) வரலாற்றில் என்றுமில்லாத-வாறான 200 பில்லியன் பெறுமதியான மிகப்பெரும் இராணுவ விநியோக அனுமதியைப் பெற்றுக் கொண்டது. இந்த ஒப்பந்தம் புதிய தாக்குதல் விமானமொன்றை தயாரிப்பதற்கான-தாகும் என்பது குறிப்பிடத்தக்க-தாகும்.



எல்லாவற்றிலும் மிகப்பெரிய நினைத்துப் பார்க்க முடியாத அம்சம் என்னவெனில் பயங்கரவாத நாடென்ற வகையிலும், பயங்கரவாதிகளின் உல்லாசபுரி என்ற வகையிலும் அமெரிக்கா ஏற்படுத்தியிருக்கும் சாதனைகள் தான்.

இந்த உண்மைகளெல்லாம் அமெரிக்க மக்களுக்குத் தெரியாதிருக்கிறது மட்டுமல்ல இது புஷ்ஷின், பிளேயரின் "எங்கிருந்தாலும் பயங்கரவாதிகளை அழிப்போம்" என்ற அறிக்கைகளை பயனற்றதாகவும், விளையாட்டுத்தனமாகவும் ஆக்கியிருக்கிறது.

புஷ்ஷின் சகோதரர் ஜெப் புஷ் கவர்னராக இருக்கும் புளொரிடா மாநிலத்தில் அவர், செப்டம்பர் பதினொன்றில் கத்திகள் துப்பாக்கிகள் சகிதம் விமானங்களைக், கப்பல்களைக் கடத்தியது போன்ற பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறார். அவர்களில் அனேகருக்கு குற்றப்பத்திரிகைகள் கூட தாக்கல் செய்யப்படவில்லை. இதற்கான காரணம் என்ன? அவர்களெல்லாரும் காஸ்ட்ரோவை எதிர்க்கிற கியூபானியர்கள்.

இதுமட்டுமல்ல இன்னொரு உதாரணம். முன்னாள் கௌதமாலா பாதுகாப்பு அமைச்சர் Gramjo Morales. இவர் பொதுமக்களுக்கெதிரான பயங்கரங்களை நிகழ்த்தியவர் என்று குற்றம் சாட்டப்பட்டவர், அமெரிக்க கன்னியாஸ்திரி ஒருத்தியை கொடுமைப்படுத்தியவர், ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த எட்டுப் பேரை படுகொலை செய்தவர் என்ற சாதனைகளைப் புரிந்த இவர், அமெரிக்க அரச புலமைப்பரிசில் பெற்று Harward பல்கலைக்-கழகத்தில் படித்தவர்!

1980ல் எல்சல்வடோர் இராணுவத்தின் கொலைக்குழுக்-களால் ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர். இந்தக் குழுவின் முன்னாள் தலைவர் இப்போது புளொரிடாவில் மிக சொகுசாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

தனது கொடூரத்தால் கொல்லப்-பட்ட மக்களின் அவலங்களை தொலைக்காட்சியில் மீளப்பார்க்க விரும்பிய ஹெயிட்டியின் சர்வாதிகாரி, ஜெனரல் Prosper Avril பதவி கவிழ்க்கப்பட்டபோது அமெரிக்க அரசாங்கத்தால் கூட்டி வரப்பட்டு புளொரிடாவில் அரசியல்

தொடர்ச்சி Vம் பக்கம்

# பலஸ்தீனின் முதலாவது பெண் தற்கொ(லை)டைத் தாக்குதலும் வேறும் சில குறிப்புக்களும்

எஸ்.மொகமட்

போராட்டங்களில் தற்கொலைத் தாக்குதல்கள் பிரதானமானதும், அப்போராட்டத்தின் இலட்சிய முக்கியத்துவத்தின் அடையாளங்களையும் கொண்ட ஒன்றுமாகும். தன் உயிரை அர்ப்பணித்து 'எதிரிகளை' கொல்கிற இந்தத் தாக்குதல்களை பொதுவாகத் தற்கொலைத் தாக்குதல் (Suicide Attack) என்றே குறிப்பிடுகின்றனர். என்றாலும் தற்போது, போராட்டச் சூழல்களில் அதன் அர்த்தம் விரிவு கொள்வதால் அதற்கான சொற்பிரயோகத்தில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

தற்கொலை என்பது விரக்தியினாலும், இயலாமையினாலும் மேற்கொள்ளப்படுகிற ஒரு கோழைத்தனமான முயற்சி. இதை ஒரு வீரத்தனமான முயற்சிக்கு ஒப்பிடுவது பொருத்தமற்றதென்று வேறு சொற்பிரயோகங்களைப் பாவிக்கத் தொடங்கியுள்ளனர். உதாரணமாக 'தற்கொடை' என்ற பாவனை விடுதலைப்புலிகளினால் பாவிக்கப்படுவதைச் சொல்லலாம். அரபு இஸ்லாமியக் கலாசாரங்களைக் கொண்ட போராட்டங்களிடையே இதனை 'ஷஹீத்' தாக்குதல் என அழைக்கின்றனர். பொதுவாக ஓர் அறப்போராட்டத்தில் கொல்லப்படும் ஒருவரை அரபு மொழியில் 'ஷஹீத்' என அழைக்கிறார்கள். ஷஹீத் என்பது சாட்சியம், பார்த்தல், உதாரணம், அத்தாட்சி என பல பொருட்களைத் தருகிற 'ஷஹாதத் என்கிற வினையடியிலிருந்து தோற்றம் பெற்ற சொல்லாகும். இது இந்த பல அர்த்தங்களையும் வழங்கக் கூடிய வகையிலும், இஸ்லாமியப் பெறுமானங்களைக் கொண்ட வகையிலும் முக்கிய அந்தஸ்துடன் பாவிக்கப்படுகிறது. இந்த அரபு, இஸ்லாமிய கலாசார மரபுகளில், அதன் அங்கீகரிக்கப்பட்ட போராட்டங்களில் ஆயுதமேந்திய போராளியாக சண்டைகளில் ஈடுபட்டு மரணிப்பவர்களுக்கு மாத்திரம் இந்த ஷஹீத் என்ற அந்தஸ்து வழங்கப்படுவதில்லை. அந்தப் போராட்டச் சூழலில் அநியாயமாக எதிரிகளால் கொல்லப்படும் அனைவரும் இந்த அந்தஸ்துக்குரியவர்களாகிறார்கள்.



இதனடிப்படையில் தான் நாம் பலஸ்தீனில் பல 'பேபி ஷஹீத்களைக்' காண்கிறோம். இஸ்லாத்தில் தற்கொலை என்பது மிக்க கண்டிப்பாகத் தடுக்கப்பட்ட ஒரு விடயமாகும். ஆனால் ஒரு போராட்ட சூழலில் இந்தத் தடுக்கப்பட்டதற்கான காரண அர்த்தத்தில் பார்க்கப்படாது என்பது பெரும்பான்மையானோரது கருத்தாகும். இதற்கான ஆதாரங்களை பல இஸ்லாமிய அறிஞர்கள் இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களின் மூலம் காட்டியுள்ளனர். பொதுவாகச் சொல்லப்படுகிற தற்கொலை என்ற அர்த்தத்தில் அல்லாது அதனை 'தியாகத் தாக்குதல்' என்று பொருள்படுகிற மேற்பார்த்த வகையிலான 'ஷஹாதத் தாக்குதல்' (Martydom Attack) என அழைக்கின்றனர். இது ஒரு வெறுமனே தடுக்கப்பட்ட தற்கொலைச் செயலாகக் கருதப்படுவதில்லை.

இந்த வரைவிலக்கணப் பின்னணியில் பலஸ்தீனப் போராட்ட சூழலில் அண்மையில் முக்கியப்படுகிற மிக்க கவனிப்புக்குரிய ஒரு விடயம் பெண்களின் இந்த தியாகத் தாக்குதல்களாகும். நீண்ட வரலாறு கொண்ட பலஸ்தீனப் போராட்டத்தின் முதலாவது பெண் தற்கொடைத் (ஷஹாதத்) தாக்குதல் கடந்த ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்டது. வபா இத்ரீஸ் (படத்தில் காண்க) என்ற ஒரு பட்டதாரியான இளம்பெண்ணே இந்த முதலாவது தியாகத் தாக்குதலை மேற்கொண்டு போராட்டத்தின் பாதையில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளார். பலஸ்தீனப் போராட்டம் அதன் நியாயப்பாடுகளுக்காகவும், வரலாற்று ரீதியான பல காரணங்களுக்காகவும் அரபு மற்றும் முஸ்லிம் உலகிடையேயும் வேறு நாடுகளிடையேயும் பலத்த அங்கீகாரத்தையும் ஆதரவையும் பெற்றதாகும். தமிழில் கூட நாம் பலஸ்தீனப் போராட்டக் கவிதைகளை (கவிதைகளை மட்டுமல்ல) உள்வாங்கியிருப்பது இப்போராட்டத்தின் பாலான ஈர்ப்பின் பாற்பட்டதேயாகும்.

குறித்த இந்த முதலாவது தாக்குதலின் வெளிப்பாடுகளை சில அரபு வெளியீடுகளில் வாசக, எழுத்தாள மனவுணர்வுகளாகப் பார்க்க முடிந்தது. ஒரு கவிஞர் வபாவை 'பெண்களின் அழகு, ஆண்களின் தலைவி' என வர்ணிக்கிறார். 'ஓர் அரபுக் குடும்பத்து அழகிய பெண்ணின் சாதாரண சொகுசு வாழ்க்கைக் கனவிலிருந்து வித்தியாசப்பட்ட வபாவின் வாழ்வினை' அக்கவிஞர் புகழ்கிறார். 'தாயகம் சூறையாடப்படுகையில் அழகும் இளமையும் இருந்தென்ன லாபமென்று கருதிய வபா தன் இன்னுயிரை ஈந்து தியாகியானாள்' என வபாவின் தாக்குதல் பற்றிக் குறிப்பிடுகிறார் அக்கவிஞர். மேலும், இந்த முதலாவது தாக்குதலைத் தொடர்ந்து கடந்த பெப்ரவரி மாதம் 25ம் திகதி Moura Shalhoub என்கிற 15 வயதேயான ஒரு பெண்பிள்ளை, இஸ்ரேலிய இராணுவ காவலரனொன்றுள் தியாகத் தாக்குதல் நோக்கில் சென்று மரணமாகியுள்ளார். 'எனது இந்த நடவடிக்கை மூலம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு நான் அனுப்ப விளையும் செய்தி என்னவென்றால், எந்த ஆக்கிரமிப்பாளர்களும் பலஸ்தீன மண்ணில் பாதுகாப்பாக இருக்கமாட்டார்கள் என்பதாகும்' என குறிப்பு எழுதி வைத்துள்ள மௌரா, 'உயிர்வாழும் தியாகி' எனக் கையொப்பமிட்டுள்ளார். வெறும் கத்தியுடன் இஸ்ரேலிய இராணுவத்தின் தடைகளையும் தாண்டிச் சென்ற இவரை இராணுவத்தினர் தங்களை நெருங்க விடாது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொன்றுள்ளனர். 'உங்கள் பிள்ளைகளை போராட்டத் தியாகவுணர்வுடன் வளருங்கள்' என தன் வகுப்புத் தோழிகளுக்கு கடிதம் எழுதி வைத்துள்ளார் மௌரா. இவரின் தந்தை, தான் தனது மகளின் செய்கையையிட்டு பெருமையடைவதாகத் தெரிவித்திருக்கிறார்.

அல்அக்சா தியாகிகள் படையணி (Al-Aqsa Martyrs Brigade) என்ற அமைப்பின் அங்கத்தவர்களே பெரும்பாலும் தற்கொடை மற்றும் அதிரடித் தாக்குதல்களில் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இதன் பின்னும் இன்னுமொரு பெண்ணால் ஒரு தாக்குதல் நிகழ்த்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது மட்டுமன்றி பலஸ்தீனப் போராட்ட வரலாற்றில் பெண்கள் சார்பான புதிய பரிமாணத்தையும் இது தோற்றுவித்துள்ளது.

லைலா காலித் (விமானத்தை திசைதிருப்பிக் கடத்திய முதலாவது பெண்), ஹனான் அஷ்ராவி, பத்வா தூகான் போன்ற பல பெண் முன்மாதிரிகள் பலஸ்தீன இராணுவ, அரசியல், இலக்கிய மட்டங்களில் முக்கியத்துவமடைந்துள்ளதைப் போன்று வபா இத்ரீசும் பெண்கள் தியாகத்தாக்குதலில் பங்குபற்றி முன்னுதாரணம் காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பலவீனமாகக் கருதப்பட்ட பலங்கள்

வைத்திய கலாநிதி எழுமதி

அந்தக் காலத்திலிருந்து 90ஆம் ஆண்டு காலப் பகுதிவரை பெண்ணியம் பற்றிய ஆய்வு நூல்களும், பொதுவான அபிப்பிராயங்களும் பெண்களிற்கு இரண்டாம் இடத்தையே ஒதுக்கியுள்ளன. ஆண்கள் வேலை செய்பவர்களாகவும், பெண்கள் வெறுமனே சமைப்பதும் படுக்கையைப் பகிர்வதும்தான் என்ற ரீதியில் தொடர்ந்து சித்திரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்த நிலைப்பாடு இன்று மாறத் தொடங்கியுள்ளது. கணிசமான அளவு முன்னேற்றம் கண்டுள்ளது. இன்று பெண்கள் விமானம் ஓட்டுகின்றனர். விண்வெளிக்குச் செல்கின்றனர். களத்தில் ஆண்களுடன் சரிக்குச் சமனாக நின்று எதிரியை எதிர்த்து சமராடுகின்றனர். பெரிய தொழில் நிறுவனங்களை நிர்வகிக்கின்றனர். கல்லூரி முதல்வர்களாகவும், வைத்திய நிபுணர்களாகவும், கட்டிட பொறியியலாளர்களாகவும் திகழ்கின்றனர். மேலும் வயலில் ஆண்களுடன் சேர்ந்து வேலையைப் பங்கு போட்டுச் செய்கின்றனர்.

உடலமைப்பு ரீதியாகவும், உடற்றொழில் ரீதியாகவும் ஒரே வயதுடைய ஆண், பெண் இருபாலாரையும் ஒப்பிட்டுப் பார்க்கும் இடத்தில் உயரம், நிறை, பலம் ஆகியவற்றில் ஆண்கள் பெண்களைவிடக் கூடியவர்களாகவே உள்ளனர். மேலும் பெண்ணின் வாழ்க்கையில் பிரத்தியேகமாக ஏற்படுகின்ற உடற்றொழிலியல் மாற்றங்களான மாதவிடாய் வருதல், மகப்பேறு அடைதல் ஆகிய விடயங்களையும் பெண்களின் பலவீனங்களாகப் பார்க்கின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டு காரணங்களையும் மனதில் நிறுத்திப் பெண்களை இரண்டாம் இடத்தில் நிறுத்தியுள்ளனர். ஆனால் இக்காரணங்கள் அனைத்தும் பெண்களின் பலவீனம் அல்ல, அவை பலமென்று வாதிடும் காலம் வந்துவிட்டது. இதற்கு பல ஆய்வுகளும் உறுதுணையாக நிற்கின்றன.

கெலன் பிஷர் (HELEN FISHER) என்ற பிரசித்தி பெற்ற அமெரிக்க மனித வர்க்கவியல் நிபுணர் பரிமாண வளர்ச்சியின் தொடர்ச்சியாகப் பெண் 21ஆம் நூற்றாண்டின் தலைவியாக வருவாளென்று எதிர்வு கூறுகின்றார். மேலும் அவர் தனது ஆய்வு நூலில் உளவியல் ரீதியாக ஆண்களிலும் பார்க்கப் பெண்கள் பலமடங்கு பலம் வாய்ந்தவர்களென்றும் அவர்கள் தலைமைப்பதவியை வகிக்கத் தகுதி பெற்றவர்கள் என்றும் கூறுகிறார். பெண்களின் தலை சிறிதாக இருப்பதனால் மூளையும் ஒப்பீட்டளவில் ஆண்களின் மூளையைவிட சிறிதாக உள்ளது. ஆனால் மூளையினுள் காணப்படுகின்ற நியூறோன்கள் எனப்படும் நரம்புக்கலன்களின் எண்ணிக்கை பெண்களில் கூடுதலாகவுள்ளது. மேலும் ஆண்களின் குருதியில் கீமோகுளோபினின் அளவு கூடுதலாகவும் பெண்களின் குருதியில் இமினோகுளோபினின் அளவு கூடுதலாகவும் உள்ளது. இதனால் பெண்களிற்கு உடல், உள உபாதைகளைத் தாங்கும் சக்தியும் அதிகமாக உண்டு. அத்துடன் உடற்களையை தாங்கும் சக்தியும் பெண்களுக்கு கூடுதலாக உள்ளது. இதனைப் பெண்கள் வீட்டிலும் வெளியிலும் தங்கள் பணியை எதுவித ஓசையுமின்றி செய்து முடிப்பதினை வைத்தே கண்டு கொள்ளலாம்.

1995ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தில் ஓர் பரீட்சார்த்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் முன்பு பயிற்சி எதிலும் ஈடுபடாத 41 பெண்கள் (இதில் மாணவிகள், வழக்கறிஞர்கள், வியாபார நிலைய ஊழியர்கள், ஆறுமாத காலத்திற்கு முன்பு மகப்பேறு அடைந்த தாய்மார்கள் போன்றோர் அடங்குகின்றனர்) யாவரும் ஐந்திலிருந்து ஆறுமாத கால பயிற்சியில் 34 கி.கிறாம் பாரத்தினை தோளில் சுமந்தபடி 3 கி.மீற்றர் ஓடுவதற்கும் 45 கி.கிறாம் எடையைச் சுமந்த படி நிலத்தில் இருந்து எழும்புவதற்கும் கற்றுக் கொண்டனர். ஆனால் அவர்களைப் போன்ற தரத்தில் உள்ள ஆண்களினால் அப்படி முன்னேற முடியவில்லை என்பதனையும் அப்பரீட்சார்த்த ஆய்வில் கண்டறியப்பட்டது.



மேலும் 1964 தொடக்கம் 1995 வரையான காலப்பகுதியில் மரதன் ஓட்டத்தில் பெண்களின் சாதனை விகித உயர்வு 32 வீதமாகவும், ஆண்களின் விகித உயர்வு 4.5 வீதமாகவும் காணப்பட்டது. இதுவும் பெண்களின் பரிணாம வளர்ச்சியின் மாற்றத்தினை எடுத்துக்காட்டும் ஒரு சான்றாகும். இவ்வாறு ஆய்வுகளும் பரீட்சார்த்த செயற்பாடுகளும் பெண்களின் பலத்தினை வெளிக்கொண்டு வந்திருக்கும் இவ்வேளையில் பெண்களும் பல பரிமாண வளர்ச்சிகளைத் தம் செயற்பாடுகள் ஊடாக காட்டி வருகின்றனர். எனினும் இன்னும் கூட எம்மத்தியில் பெண்களைப் பலவீனமானவர்களாகவும் இரண்டாந்தர நிலையில் உள்ளவர்களாகவும் பார்க்கின்ற நிலை காணப்படுகின்றது. இந்த நிலை மாற வேண்டுமாயின் முதலில் பெண்கள் தம்பலத்தினை அறிந்திருக்க வேண்டும். அடுத்ததாக என்னென்ன விடயங்களை வைத்து பெண்களைப் பலவீனமாக எடைபோடுகின்றனர் என்று அறிந்து, அவை ஏன் பலவீனமான விடயங்களாகக் கருதப்பட்டு வந்தன என்பதனையும் நோக்க வேண்டும். மேலும் இவ்விடயங்கள் யாவும் இன்று பலமானவையாக செயற்படுகின்றன என்ற விஞ்ஞானரீதியான ஆய்வு உண்மையையும் அறிந்திருக்க வேண்டும்.

முதலாவதாக மதக்கோட்பாடுகள் பெரும்பாலும் பெண்னை ஆணுக்கு கீழ்ப்பட்டவள் என்றும் ஆணுக்கு அடிமையானவள் என்றும் சித்திரிக்கின்றன. சிவன், பிரம்மா, விஸ்ணு, முருகன், யேசு, அல்லா, புத்தர் எனக்கூறப்படும் தெய்வங்கள், மதத்தலைவர்கள், மதப்போதகர்கள் அனைவருமே ஆண்கள். ஆண்கள் தலையெடுத்த சமூக அமைப்பில் முதன்மையான தெய்வத்தையும் ஆண்களாகவே படைக்க முடிந்தது. இதனால் பெண்களின் மனதிலும், நினைவிலும், கருத்தியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் நாம் தரம் குறைந்தவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்த முடிந்தது.

> *முதலாவதாக மதக்கோட்பாடுகள் பெரும்பாலும் பெண்னை ஆணுக்கு கீழ்ப்பட்டவள் என்றும் ஆணுக்கு அடிமையானவள் என்றும் சித்திரிக்கின்றன. சிவன், பிரம்மா, விஸ்ணு, முருகன், யேசு, அல்லா, புத்தர் எனக்கூறப்படும் தெய்வங்கள், மதத்தலைவர்கள், மதப்போதகர்கள் அனைவருமே ஆண்கள். ஆண்கள் தலையெடுத்த சமூக அமைப்பில் முதன்மையான தெய்வத்தையும் ஆண்களாகவே படைக்க முடிந்தது.*

இன்றும் மக்களிடையே பெரும் ஆதிக்கத்தைப் பெற்றுள்ள புராண இதிகாசக் கதைகளும் பெண்களை ஆண்களின் அடிமைகளாகவே படைக்கின்றன. உதாரணமாக பஞ்சபாண்டவர்கள் திரௌபதியைத் தம்மனைவியாகக் கொண்டிருந்தனர். ஆனால் அவளுக்கு அவர்களில் ஒருவரை மட்டும் கணவனாக ஏற்றுக்கொள்ளும் உரிமை கிடையாது. குழந்தைப் பருவத்தில் ஆணும், பெண்ணும் சரிசமனாக வளர்கின்றனர்.
வளர்க்கப்படுகின்றனர். ஆனால் பெண்கள் பூப்பெய்துகின்றபோது உடல், உள ரீதியாக பல பிரச்சினைகளிற்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைவருவதனால் சமூகம் அவளின் செயற்பாடுகளை, சுதந்திரத்தினை மட்டுப்படுத்துகின்றது. இதன் ஒரு அங்கமாகவே அந்தக் காலத்தில் பெண்பூப்பெய்துகின்றபோது வீட்டைவிட்டு சுதந்திரமாக நடமாட முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறாள். அதன் உச்சக்கட்டமாக மாதவிடாய் காலத்தின் போது அவள் வாழும் வீட்டில் இருந்து கூட தூரத்தள்ளி வைக்கப்பட்டிருக்கிறாள். எதுவித பணியுமின்றி வீட்டின் ஒரு மூலையில் கைதிபோல் அடைக்கப்பட்டிருக்கிறாள். இதற்கு குற்றம், துடக்கு என்ற சாட்டுக்களும், இரத்தப் போக்கு இருப்பதனால் ஓய்வு தேவையென்ற காரணமும் காட்டப்பட்டிருந்தது. ஆனால் இன்று பெண்கள் மாதவிடாயின்போது நாளாந்தம் செய்துகொண்டு வந்த சகல பணிகளையும் இடைநிறுத்தாது செய்கின்ற நிலையினைக் காண்கின்றோம். இது எப்படி சாத்தியமானது என்பதனை விஞ்ஞான ரீதியான விளக்கத்துடன் பார்ப்போம். மாதவிடாய் மாதம் ஒரு முறை ஏற்படுகின்றபோது நான்கு அல்லது ஐந்து நாட்களிற்கு இரத்தப் போக்கு காணப்படும். இது காயத்தின்போது ஏற்படுகின்ற குருதி இழப்புப் போல சடுதியாக ஏற்படுகின்ற குருதியிழப்பு அல்ல, ஓமோன்களின் செயற்பாட்டால் ஒரு மாத காலமாக பருமன் தடித்து வழமைக்கு அதிகமாக குருதி விநியோகத்தைப் பெற்றிருந்த கருப்பை உட்சுவர் உடைந்து உதிர்வதினாலேயே இரத்தப் பெருக்கு ஏற்படுகிறது. இதன் போது ஐந்து நாட்களிற்கும் சேர்த்து ஆகக்கூடுதலாக 300 மி.லீற்றர் இரத்தமே வெளியேறுகிறது. எந்தவொரு பெண்ணும் 18 வயதுக்கு மேல் 500 மி.லீற்றர் இரத்தத்தை உடலில் எதுவித பாதிப்புமின்றி இழக்கலாம் என்பது ஆதாரபூர்வ உண்மையாகும். இந்த அடிப்படையில்தான் இரத்ததானம் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு இரத்ததானம் செய்யப்படுகின்ற போது உடலில் பல நன்மைகள் ஏற்படுகின்றன. இவ்விழப்பிற்கு ஈடாக புதிய இரத்தம் இரு கிழமைகளில் உருவாகி விடுகின்றது.

இதனால் இரத்தத்தில் புதிய அணுக்கள் சேருகின்றன. இதேபோல் பெண்களும் மாதாமாதம் இரத்தத்தை வெளியேற்றுகின்ற போது அவ்விரத்தம் இரு கிழமைகளில் ஈடுசெய்யப்பட்டுக் கொண்டே வருகிறது. இதனால் உடல் புதுத்தெம்பு பெறுகிறது. ஆகவே பெண்கள் மாதவிடாய் காலத்தின் போது ஓய்வெடுக்காமல் வேலை செய்யக்கூடிய உடல், உள பலம் உண்டு என்பதே உண்மையாகும்.

அடுத்ததாக மகப்பேறினை எடுத்துக் கொள்வோம். இங்கு பெண்ணானவள் ஓர் புதிய உயிரை பத்துமாதங்கள் தன்னகத்தே சுமந்து பிரசவ வேதனையைத் தாங்கி அவ்வுயிரை வெளிக்கொணர்ந்து உலகிற்கு தருகின்றாள். பின்பு இக்குழந்தையின் வளர்ப்புக்காக சிறுகாலம் தன் கடமையில் இருந்து ஓய்வு எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இக்காலத்தில் தான் ஆண் கடமையில் முன்சென்று உயர்கின்றான். பெண் ஆணுக்குப் பின்னால் தான் போவதாக உணர்கின்றாள். ஆனால் ஓர் உயிரைப் பிரசவிப்பது என்பது பெரிய கடமை. ஆண்களிற்குக் கிடைக்காத பெரும் பாக்கியம் பெண்களிற்குக் கிடைக்கின்றது என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை ஒரு பலவீனமாகப் பார்க்காது பலமாகப் பார்க்க வேண்டும். மேலும் மாதவிடாய் நிற்றலையும் பெண்ணின் ஓர் பலவீனமான அறிகுறியாகப் பார்த்து வந்துள்ளனர். ஏனென்றால் மாதவிடாய் நிற்கின்ற போது ஓமோன்களின் சுரப்பு குறைவதனால் உடல், உள நோய்கள் ஏற்படுவதனால் அவர்கள் வேலை செய்வதற்குத் தகுதி இல்லாதவர்கள் என்று காரணம் காட்டி ஓய்வில் வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். ஆனால் இன்றைய உலகில் இதனைப் பல பெண்கள் பொய்யாக்கி உள்ளனர். மேலும் மாதவிடாய் நிறுத்தத்தின் பின்பு பெண்களின் ஆற்றல் பல மடங்காக அதிகரித்து உள்ளதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மனித வர்க்கவியல் நிபுணர்களான அற்றீன்சீல்மான், நான்சிரானர் ஆகியோர் 1970இல் பழங்குடி மக்கள் மத்தியில் மேற்கொண்ட பல ஆய்வுத்தரவுகளின்படி அங்கு அவர்களின் நாளாந்த உணவில் 70 வீதமான உணவினைப் பெண்கள் சேகரித்து வருகின்ற தாவர உணவும் 30 வீதமானது ஆண்கள் வேட்டையாடி வரும் மாமிச உணவும் பூர்த்தி செய்கின்றன என்று தெரியவந்துள்ளது. ஆனால் ஆண்கள் வேட்டைக்காரர்களாகவும் பெண் குகையில் இருந்து ஆண்களிற்கு அடிமை வேலை செய்வதாகவும் ஆதி மனித வரலாறுகள் தெரிவிக்கின்றன. ஆனால் இத்னை இன்றைய ஆய்வாளர்கள் நிராகரிக்கின்றனர். அவுஸ்திரேலியாவின் "திவிஇன" பழங்குடி மக்கள் தங்கள் வேட்டைப் பணியில் முழுக்குடும்பத்தினையும் ஈடுபடுத்துவதாக கிறிஸ்நைற் என்ற ஆய்வாளர் தெரிவிக்கின்றார். மேற்குலக சம்பிரதாயங்களின்படி வேட்டைக்குரிய தெய்வங்கள் யாவரும் பெண்களாகவே இருக்கின்றனர்.

இறுதியாக பெண்ணில் ஏற்படுகின்ற சில தவிர்க்க முடியாத உடற்றொழில் மாற்றங்களினால் அவள் கடமையில் பின்தங்கும் போது அதனை பலவீனமாகப் பார்க்கும் நிலைதான் அன்று இருந்துள்ளது. இன்று இதனை பலமாகப் பார்க்கும் காலம் தொடங்கி விட்டது. இதற்குப் பெண்கள் அனைவரும் தம்மிடம் உள்ள பிற்போக்குச் சிந்தனைகளைக் களைந்து தம் ஆற்றல்திறனையும் முற்போக்குச் சிந்தனையையும் வளர்க்க வேண்டும். அத்துடன் அறிவியல் ரீதியாகவும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இவ்வாறு செயற்படும் போது பெண்கள் ஆண்களிற்குச் சரிசமனான பலமுள்ளவர்களாகத் திகழ்வார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

நன்றி - சுதந்திரப் பறவைகள்

# சினிமாவும் சிறுவர்களின் இலட்சிய நாயகர்களும்!

-றேவ்

இன்றைய சிறுவர்களின் இலட்சிய நாயகர் (Ideal person) யார்? எதனிலிருந்து இந்த இலட்சிய நாயகர் (Ideal person) தெரிவு செய்யப்படுகின்றார்? யார் அறிமுகப்படுத்துகிறார்கள்?

இந்தக் கேள்வி இன்றைய சூழலில் அதிமுக்கியமானதும் கூட. ஏனெனில் ஒரு புறம் யுத்தம். இன்னொரு புறம் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சி போன்றன எமக்குள் அதிக பாதிப்பினை உண்டு பண்ணுகின்றன. நாம் இவை பற்றி சிந்தித்தலுக்கும் எமக்குத் தேவையானவற்றை உணர்வதற்கும் அப்பால் அவை எம்மை இழுத்துச் சென்று விடுகின்றன.

**சிறுவர்களின் நடத்தைகள் தொடர்பான தீர்மான சக்திகள்**

முன்னைய காலங்களில் சிறுவரின் நடத்தைகளுக்கான முன்மாதிரிகளாக கடவுள்களும், மன்னர்களும், உண்மை பேசுபவர்களும், வீர புருஷர்களுமே அடையாளம் காட்டப்பட்டனர். உதாரணமாக அரிச்சந்திரனின் வாய்மை பற்றி பிள்ளைகளுக்கு அதிகம் சொல்லிக் கொடுக்கப்படும். அதைப் போல உண்மை பேச வேண்டும் என்று அறிவுறுத்தப்படும். சிறுவரின் நடத்தைகள் தொடர்பான தீர்மான சக்திகளாக சூழலும், முதன்மைப் படுத்தப்படுபவர்களான பெற்றோர், உறவினர், ஆசிரியர்களும் காணப்பட்டனர். ஆனால் இன்று நிலைமை அப்படி அல்ல.

**இன்றைய சூழலில் சிறுவர்களின் முக்கிய தீர்மான சக்திகள்**

1. யுத்தம் - யுத்தம் சிறுவர்களை சிறுவர்கள் அல்லாமல் செய்கின்றது என்று சிவரமணி தனது கவிதையில் எழுதியிருந்தார். யுத்தத்தினுடைய பாதிப்பினை முழுமையாக உணர்பவர்களாக சிறுவர்களே இருக்கின்றார்கள். அதனுடைய முழுப் பரிமாணமும் அவர்களால் உள்வாங்கப்படுகின்றது. அதனோடு இணைந்த பீதி, மன உழைச்சல், வறுமை, உத்வேகம் என்று பலவற்றாலும் அவர்கள் உள்வாங்கப்படுகின்றார்கள்.

இந்தப் பாதிப்புக்களினால் சிறுவர்கள் அதிகம் வளர்ந்தவர்களாகவும், அதாவது வயதிற்கு மீறிய வாழ்வு தொடர்பான அனுபவத்தினை அல்லது பார்வையைக் கொண்டவர்களாகவும், இன்னொருபுறம் வெறும் பயத்தினால் உள்வாங்கப்பட்டவர்களாகவும், தம்மை உணர முடியாத குழந்தைகளாகவும் காணப்படுகின்றார்கள்.

யுத்த சூழலில் வாழ்கின்ற ஒரு தமிழ்க் குழந்தையின் இலட்சிய நாயகர் (Ideal person) ஒரு போராளியாக இருப்பதற்கு அதிக சாத்தியக் கூறுகள் உள்ளன. துப்பாக்கியும், அதனுடன் இணைந்த கம்பீரமும், தனதும் எதிரியான ஒருவனைச் சுட்டு கொல்வது பற்றிய கனவும் அவரின் வாழ்வின் வழி நடத்தலாகிப் போகின்றது.

அதனுடன், போராளிகள் பற்றிய பாடல்கள், அவர்களுடைய தியாகங்கள் பற்றிய பிரஸ்தாபங்கள் என்பன அந்தச் சிறுவரை மிகவும் கவர்கின்றது. அவர்களது நடத்தைகள், பாவனைகள் அவர்களால் உள்வாங்கப்படுகின்றன.

இதற்கு அப்பாலான தெரிவிற்கு சிறுவர்கள் செல்ல முடியாமல் அவர்களது சூழல் காணப்படுகின்றது. ஒன்று யுத்தம் அவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றது. மற்றையது வேறுவகையான தெரிவுகளுக்கான சாத்தியம் இன்மை காணப்படுகின்றது.

2. தொழில்நுட்ப வளர்ச்சியும் சினிமாத்துறையும் - யுத்தத்தின் பிடியில் இருந்து தப்பக் கூடியவர்களுக்கும், அதற்கு வெளியில் வாழ்பவர்களுக்கும் இந்த இலட்சிய நாயகர் (Ideal person) என்பது பெரும்பாலும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் அதிகம் பரவலுக்குள்ளான சினிமாத் துறையினால் அறிமுகப்படுத்தப்படும் நபர்களாகிப் போகிறார்கள். அது ஒன்றும் மறைக்கப்பட்ட விடயம் அல்ல. இந்த விடயம் தொடர்பாக சிறுவர்களின் வழிகாட்டிகளுடனான புரிதல்கள் அவசியம்.

களியாட்டம் (entertainment) என்பது என்ன? அதனுடைய மட்டுப்படுத்தல்கள் என்ன? என்பது பற்றிய சரியான புரிதல் இல்லாத வளர்ந்தவர்கள் சிறுவர்களையும் தங்களுடைய மட்டத்திற்குள் இணைத்து விடுகிறார்கள்.

ஒரு உதாரணம், எனது நண்பியின் வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் அவளுடைய அக்காவின் மகனை 'ரஜனி'யை மாதிரிச் செய்து காட்டு என்று பெரியவர்கள் சொல்வார்கள். அந்தச் சிறுவன் உடனேயே ஒரு கையை இடுப்பில் வைத்து மறுகையை அங்கே இங்கே சுழற்றி 'ஒரு தடவை சொன்னால் நூறு தடவை சொன்ன மாதிரி' -என்பான்.

> **ஒரு இனம் தனக்கான அடையாளப்படுத்தலுடன் இணைந்த போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்க, அதற்காக அவர்களது உயிர்கள் விலையாக கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்க தமிழ் கலாசாரமே இல்லாத சினிமாக் கலாசாரம் மிகவும் இலகுவாக தமிழ் சமூகத்துள் ஊடுருவுகின்றது.**



உடனே அவர்கள் சந்தோசமாகச் சிரிப்பார்கள். அந்தச் சிறுவன் அதைப் பெருமையாகக் கருதுகிறான். ரஜனி போல் ஜீன்ஸ் சேட் அணியவும், நடக்கவும், தனது பாவனைகளை மாற்றிக் கொள்வதையும் உன்னதமான விடயமாக காண்கின்றான். தனது கதாநாயகனை திரையில் காண்பதை, அதை ரசிப்பதை, விசிலடிப்பதை விரும்புகிறான்.

இதே போல் அண்மையில் வெளிவந்த ஆளவந்தான் படத்தின் வில்லன் பாத்திரம் சிறுவர்களை மிகவும் கவருகின்றது. ஒரு தாளை எடுத்து அதை இரண்டு கைகளாலும் தட்டித் தட்டிக் கொண்டு கொஞ்சத் தூரம் சென்று நாக்கினால் தாளை மிகவும் ஈரப்படுத்தி ஒரு சுவரில் அதை ஒட்டுவது. அதைச் செய்யும் போதே 'கடவுள் பாதி மிருகம் பாதி கலந்து செய்த கலவை நான்' என்று சொல்லிக் கொள்வதிலும் அவன் தன்னை அதிகம் ஈடுபடுத்திக் கொள்கிறான். அதை யாராவது செய்து காட்டு என்று கேட்கும் போது தனது செய்கையை மிகவும் ரசிக்கிறார்கள் என்ற அடிப்படையில் அவன் அதன் மீது மிகவும் ஈடுபாட்டுடன் இணைகின்றான்.

இதே போன்று தற்போது பாடசாலை மட்டங்களில் நடைபெறும் கலைவிழாக்களிலும், மற்றும் நிகழ்ச்சிகளிலும் சினிமாப் பாடல்களுக்கு நடனம் ஆடுவது ஒரு நிகழ்ச்சியாக வருகின்றது.

இந்த சினிமாப் பாடல்களுக்கு குழுக்களாக சிறுவர்களை நடனம் ஆடச் செய்வது, அதுவும் அதில் ஒரு கதாநாயகிச் சிறுமி, அல்லது கதாநாயகச் சிறுவன் இருப்பான். அவன் / அவள் முன்னிலைப்படுத்தப்படுவான்/ள். சிறுமியாயின் மிகவும் கட்டையாக இறுக்கமான ஆடைகளை போட்டு அவளை சினிமாக் கதாநாயகிகளைப் போன்று உடலை அசைக்கச் செய்வார்கள். சிறுவனாயின் அவர்களுக்குப் பிடித்த கதாநாயகன் பாணியில் உடைகள் அமைந்திருக்கும். அத்துடன் உடல் அசைவுகளும் அந்த நாயகனின் அசைவுகளுக்கு ஏற்ற மாதியாக இருக்கும்.

இது ஒன்றும் ரசிக்கத்தக்க விடயம் அல்ல. மாறாக வெட்கப்பட வேண்டிய விடயம். ஏனெனில் ஒரு சிறு பெண் சினிமாவின் மூன்றாம்தரப் பாடல்களுக்கு உடலை அசைப்பதும், அவள் தன்னைக் கதாநாயகியாக அடையாளப்படுத்துவதும், கதாநாயகிகளை திரையில் பார்த்து தன்னுடன் ஒப்பீடு செய்வதும் சிறந்த வளர்ச்சியை அடைய நினைக்கிற சமுதாயத்திற்கு பொருந்துகிற விடயங்கள் அல்ல.

அத்துடன் சிறுமியின் ஆளுமையையும் இது மிகவும் பாதிக்கின்றது. அந்தச் சிறுமியின் வெளிப்படுத்தல்கள் இவற்றினை அடிப்படையாக வைத்தே காணப்படும். அவளுடைய உலகு இதற்குள்ளேயே முடக்கப்படும். அதாவது, மிகவும் கட்டையாகவும், இறுக்கமாகவும் ஆடை அணிவதை கௌரவமாகவும், அதனுடன் தன்னை மற்றவர்கள் ரசிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பதும், அப்படி தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ள முடியாத போது மிகவும் பிரயத்தனப்பட்டு மற்றவர்களைக் கவர முயற்சிப்பதும் - தனது பாவனை, நடை உடை, ஒப்பனை இவற்றின் மூலம் - அதுவும் முடியாத போது உடைந்து போவதும் அதிகம் நிகழ்கின்றது. இதில் காணப்படும் இரண்டு அம்சங்களுமே ஆபத்தானவை.

1. தன்னை கதாநாயகியுடன் அடையாளம் காணல்

2. அதனுடைய தோல்வியின் மூலம் தன்மீதான காழ்ப்புணர்ச்சி கொள்ளல் / ஒதுங்குதல்

இங்கே அந்தச் சிறுமி பெரியவர்களாலேயே உலகில் அழகாக கதாநாயகிகளைப் போன்று இருப்பது தான் சிறந்தது என்ற எடுகோளை நோக்கி நகர்த்தப்படுகிறாள்.

எமது தவறு இங்கு தான் ஆரம்பமாகின்றது!

இவற்றினைப் புரிந்து கொள்ளாது தனது பிள்ளையை லிப்ஸ்டிக் அடித்து நான்கு பேர் முன்னிலையில் சினிமாப் பாடல்களுக்கு நடனம் ஆடுவதை கௌரவமாக நினைக்கும் பெற்றோர்கள் சிறுவர்களுடைய ஆளுமையின் முதல் எதிரியாகிப் போகிறார்கள்.

அடுத்து தமிழ் கலாசார நிகழ்ச்சிகளில் சினிமாப் பாடல்களுக்கு உடலை அசைப்பது எப்படி தமிழ் கலாசார நிகழ்ச்சி ஆகும் என்பதை அவர்களுடைய ஆசிரியர்கள் சிந்தித்துப் பார்ப்பதும் இல்லை.

தமிழ் சினிமாவுடன் பெரியவர்களின் வாழ்வியல் எந்தவிதக் கேள்வியும் இன்றி ஒன்றிணைக்கப்படுவதால், சிறுவர்களுக்கும் தமிழ் சினிமாவிற்கு அப்பால் ஒரு உலகம் இல்லை என்பதைப் போன்ற இப்படியான நகர்த்தல்கள் சிறுவர்களை ஒரு பொழுதும் நல்ல மனிதர்களாக ஆக்காது.

அத்துடன் இந்த தொழில்நுட்ப வளர்ச்சியினால் அறிமுகப்படுத்தப்படும் நுகர்வுக் கலாசாரத்திற்குள் நாம் எமது சிறுவர்களை திணிக்கிறோம்.

அதே நேரம் ஒரு புறம் ஒரு இனம் தனக்கான அடையாளப்படுத்தலுடன் இணைந்த போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்க, அதற்காக அவர்களது உயிர்கள் விலையாக கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்க தமிழ் கலாசாரமே இல்லாத சினிமாக் கலாசாரம் மிகவும் இலகுவாக தமிழ் சமூகத்துள் ஊடுருவுகின்றது. இதை எந்த வகையில் அனுமதிக்க முடியும்?

உண்மையில் நாம் ஏன் சிறுவர்களிடம் எமது பொழுது போக்கு அம்சங்களை திணிக்கிறோம். அவர்களுடைய வயதிற்கு ஏற்ப அவர்களுடைய பொழுது போக்குகளும் வழிகாட்டிகளும் ஏன் இல்லாமல் போயின. எமக்கு அது தொடர்பான சிரத்தை இல்லாததற்கு காரணம் என்ன?

முதலாவதாக இவ்விடயத்தில் சுட்டிக்காட்ட வேண்டியது. இந்த விடயம் தொடர்பாக எமக்குள்ளே தெளிதல் இல்லை என்பது தான்.

இரண்டாவது, எமது சிறுவர்களை அவர்களாக வாழ விடுவது பற்றிய பிரக்ஞைபூர்வ செயற்பாடு இன்மை.

அடுத்து, இங்கே எமது சிந்தனைக்கு உள்ளாக்கப்பட வேண்டிய விடயம். உண்மையில் இந்தக் கூத்தாடிகளை விடுத்து எமது சிறுவர்களுக்கு இலட்சிய நாயகர் (Ideal person) ஆக அறிமுகப்படுத்துவதற்கு யாருமே இல்லையா? என்பது.

---

**சிரித்திரன் சுந்தர் நினைவு விருது**

சிந்தனைச் சிறப்பாலும், கேலிச் சித்திரங்கள், கருத்தோவியங்கள், சவாரித்தம்பர் போன்ற பாத்திரப் படைப்புகளாலும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் தனித்துவமான சிரித்திரன் சஞ்சிகையை தொடர்ந்து வெளியிட்டவரான அமரர் சிரித்திரன் சுந்தர். அவரின் நினைவு தினம் மார்ச் 3ஆம் திகதி ஆகும்.

சிரித்திரன் சுந்தர் அவர்களின் ஞாபகார்த்தமாக "சிரித்திரன் சுந்தர் நினைவு இலக்கிய விருது" வழங்கும் திட்டத்தை தேனுகா பதிப்பகம் அறிவித்திருக்கிறது.

2001ஆம் ஆண்டு வெளியான சிறந்த கதைத் தொகுப்பு ஒன்றுக்கு பரிசுத் தொகையாக பதினையாயிரம் ரூபா (15000/=) வழங்கப்படும், என அறிவித்துள்ள தேனுகா பதிப்பகம் இனி வரும் ஆண்டுகளில் கவிதை, நாவல், சிறுவர் இலக்கியம் போன்ற ஏனைய துறைகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என அறிவித்திருக்கிறது.

நூலாசிரியர்கள் தயவு செய்து தங்கள் நூலின் இரு பிரதிகளை பின்வரும் முகவரிக்கு, ஏப்ரல் 30க்கு முன் அனுப்புமாறு தேனுகா பதிப்பகம் கேட்டுள்ளது.

அனுப்ப வேண்டிய முகவரி

சுதாராஜ்.
தேனுகா பதிப்பகம்.
58/3, அனுராதபுரம் வீதி, புத்தளம்.

# வாசகர் சொல்லடி

## சரிநிகர் தோற்றுவித்த பத்திரிகைக் கலாசாரம்

ஒரு அந்தரங்கமான சிநேகிதத்தைத் தொலைத்துவிட்டு, தவிப்போடு இருந்த போது 'நிகரி'யின் வருகை, ஆத்மார்த்தமாக எனது அவஸ்தையைக் குறைத்தது.

புதிய வடிவமைப்பு, நிகரி -I, நிகரி -II எனும் பாகுபடுத்தல், ஈழமோகத்தின் வெண்பாவும், மெல்லத் தமிழினியும் மென்மையான ஊசி குத்தலும், நாசமறுப்பானின் நீளமான, அதேவேளை ஆழமான எழுத்தும், அவ்வப்போது (மறுபக்கமாக) தலைகாட்டும் ஆழ்வார்குட்டியும், நூல்மதிப்பீடும், ஷகீப்பின் கிண்டல் தடவியதாக கடல்கடந்து வரும் குறிப்பேடும், நூல் மதிப்பீடும், புதிய தொடர்களும், நிகரிக்கு வளம் சேர்ப்பன.

ஈழத்து அரசியலிலும், இலக்கியத்திலும் மாற்றுக் கருத்தை முன்வைக்கும் குரல்களுக்கு எப்போதும் அற்பாயுசுதான். சொந்த இருப்புக்காக போராடிக் கொண்டே, இலக்கியப் பணியாற்ற வேண்டிய அவலம் காரணமாகவே தமிழில் திசை, சரிநிகர் என்று பல இழப்புக்களை தரிசித்து வந்தோம். இன்று மறு பிறவியெடுத்துள்ள நிகரியின் வருகையும், ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கால கட்டத்திலே நிகழ்ந்திருக்கிறது.

யாரையும், எந்த விடயத்தையும், நியாயத்தின் முன்னிறுத்தி, மறுவாசிப்புக்குட்படுத்தல் என்பதற்கு அசாத்திய துணிச்சல் வேண்டும். ஆபத்தான அந்த அனுபவ பலம் தங்களது பத்திரிகைக்கு உண்டு.

சரிநிகர் தோற்றுவித்த பத்திரிகை கலாசாரத்தின் தொடர்ச்சியை, நிகரி - நின்றுரைக்கும் என நம்புவோம்.

*ஏ.ஜீ.எம்.சதக்கா,*
*வாழைச்சேனை.*

## உண்மையும் குறிக்கோளும்

இன்றைய சிந்தனைகளை ஆழப்படுத்தி விரிவடையச் செய்யும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு வெளிவந்திருக்கும் இவ்வேடு - படைப்பு, சமூக விமர்சனம், சரித்திரம், தத்துவம், விஞ்ஞானம், சம்பந்தப்பட்ட உள்ளடக்க கருத்துக்களோடு சமூகத்துறையில் ஏற்பட்டுள்ள சகல கீழ்மைகளையும், அரசியலில் ஏற்பட்டுவரும் அரைவேக்காட்டு அம்மாசி இருட்டு போக்குத்தன்மை - சமூக விரோதிகளின் முகமூடித்தன்மையை கிழித்தெறியும் பணியிலும் ஈடுபாடு கொண்டு சமிக்ஞை காட்டி நிற்கும் நிகரியின் போக்கு - ஓர் குறிக்கோளின் உண்மைத் தன்மையை வெளிக்காட்டி நிற்கும். வழிகாட்டியாகவே படுகிறது. மனித குல வரலாற்று பரிணாமத்திலும், வர்க்க சிந்தனைகளிலும் இளம் எழுத்தாளர்களின் எழுச்சி சின்னமாகவும் இதனைக் கணிக்கிறேன்.

தூய்மையை உண்மையாகக் கொண்டு நம்வாழ்வில் ஏற்பட்டுள்ள ஊனங்களைத் தாண்டி ஓர் உத்வேக சக்தியாகவும், தனித்துவம் கொண்ட ஏடாகவும் தொடர வேண்டுமென்பதோடு, துன்பச் சுமைகளை சொந்தமாக்கிக் கொண்டிருக்கும் மலையக சமுதாயத்திற்கு அவர்கள் வீழ்ந்து கிடக்கும் ஈனக்குழியிலிருந்து, பொய்யோடு புனைசுருட்டு போலிகளின் தலைமைகளையும் அவர்களின் கலாசார சுரண்டல்களையும் தொலைத்துக் கட்டி உண்மையான வாழ்வுக்கும் வழிசமைக்க வேண்டுமெனக் கூறி நிகரியின் செயல்பாடு சிறப்பாகவும் சீராகவும் அமைய வாழ்த்துகிறேன்.

*சி.வே. ராமையா*
*வத்தளை.*

## தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்!

நிகரியின் மூன்றாவது இதழை எதிர்பார்த்து வாங்கிப்படிக்கும் படி அதன் முந்திய இரண்டு இதழ்களும் நிகரியின் தரம்பற்றி உயர்வாகவே மதிப்பிட வைத்துவிட்டது.

பல்கலைக் கழக மாணவர்களும் தங்கள் பாடக் குறிப்புக்கு தேடிப்படிக்க வேண்டிய ஒரு இதழாக, நிகரி தனக்குள் ஆக்கபூர்வமான படைப்புக்களையே சுமந்து கொண்டு வருகிறது என்பதையும் பல்கலைக்கழகச் சூழலில் காண முடிகிறது.

ஊடகத் துறையில் சாதாரண ஒரு பத்திரிகை போலல்லாது தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு உரிமைக் குரலாகவும் நிகரி ஒலிக்கிறது. இன்று இறுக்கமாகவே காணப்படும் பல்வேறுப்பட்ட அரசியல் அழுத்தங்களுக்கு அப்பால் தனித்துவமான போக்கினை கடைப்பிடித்துவரும் நிகரி எந்தவொரு துணிச்சலான எழுத்தாளருக்குமான இலட்சியப் பரப்பை மேலும் விசாலப்படுத்திக் கொடுக்கிறது.

ஒரு சமூகத்தின் விடியலுக்காய் போராடும் ஒரு போராளியின் ஆயுதம் போல் பத்திரப்படுத்தக்கூடிய, பத்திரிகை நிகரி என்ற மனப்பூர்வமான கருத்துடன் நிகரியின் நீண்ட ஆயுளுக்கு வாழ்த்துகிறேன்.

*எம்.நவாஸ்சௌபி.*
*இறக்காமம்.*

## எதிர்காலச் சவால்களை எதிர் கொள்ள வழி தேவை!

சமீபகால தமிழ் ஊடகத்துறையில், தன்னிகரில்லாத் தனித்துவத்துடன் சிரம் நிமிர்ந்த சரிநிகர் சரிந்துபோன போது மிக நொந்து போனேன். திரும்பவும் நிமிரும் நாள் எப்போது என எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது, நாம மாற்றத்துடன் நிகரியாக நெஞ்சம் நிமிர்த்தியுள்ளதையிட்டு பேரானந்தம் அடைகின்றேன்.

முதல் இதழ் கண்டவுடன் முந்திரிக்கொட்டையாக முந்திக்கொண்டு திருமுகம் தீட்ட முயலவில்லை காரணம் விமர்சனம் வேல்வீச்சாக இருக்கக்கூடாது என்பதற்காகவே. நாலாவது இதழைப் பார்க்கும் போது நிகரி எதிர்காலத்தின் எதிர்வுகள் ஏற்றமுற ஏணியாக திகழும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. தனிமனிததுதி, அரசியல் அநாகரிகர்களுக்கு அநாவசிய காவடி தூக்கல், இலங்கை அரசியல் வரலாற்றின் விதியமன்களின் செயற்பாடுகளை வியப்புடன் நோக்குவது என புதிய பாணிகள் நிகரியின் தரத்திற்கு மாசு. விக்டர் ஐவன் துணிச்சல்மிக்க பத்திரிகையாளர் தான். நாம் ஒன்றும் 94 ஐயும், அதன் பின்னணியையும் மறக்கவில்லையே.

அனைத்து ஊடகங்களுக்கும் காதுகளையும், கைகளையும் ஈந்தால் எமை பைத்தியக்காரர்களாக்கி விடுவார்கள் போல் தெரிகிறது. அத்தனை சமாதான சாகசங்கள், கோசங்கள். ஏதோ நிகரி மட்டும் நிதர்சனங்களை களமாக்குகிறது நன்றி. காகித தரத்திலும், வண்ணங்களின் வனப்பினிலும், மக்களை மாங்காய் மடையர்களாக்கும், போதைப்பொருளாக பலதும் இருக்கையில் நிகரி எளிமையிலும் ஏற்றமாக சிந்திக்க வைத்தால் போதுமானது.

த.சிவராம் கட்டுரைகள் சிறப்பாகவிருக்கின்றன. வந்த நாட்களின் வரலாறுகளை மீட்டுவதும், தொட்டுக்காட்டி எதிர்கால அபாயத்தை அறிவிப்பதுமல்ல அதற்கான எதிர்வினைகள் என்ன, என இப்போதாவது இப்படி ஐயம் திரிபறக் கூறிவைத்தால் தான் எதிர்கால சவால்களுக்கு தமிழினம் முகம் கொடுக்கத் தயாராகும்.

சிவராம் அவர்கள் குறிப்பிடுவது போல் புலித்தடைகளுக்கு கதிர்காமர் காரணமல்ல. மேற்குலகின் நலன்கள் தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. மேற்குலகு மட்டுமல்ல அண்டை நாட்டு தந்திரமும், சுய ஆதிக்க நலன்களை முன்னிருத்தியே இருக்கும். எல்லோருக்கும் தலைநிமிரும் தமிழரை அடக்கியாள வேண்டுமென்ற கனவுதான்.

ஒடுக்கப்பட்ட மக்கள், வர்க்கப்போராட்டம் என வாய்கிழியக் கத்தியவர்களும், முகமூடிமாலைகளில் முகம் மறைத்துக் கொண்டவர்களும், செக்குமாடுகள் போல் சுற்றி வந்தும் இன்னும் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்று கூறத்தோன்றுகிறது. இசங்களாலும் பசங்களாலும் பாதிக்கப்பட்டது இந்தத்தமிழினம்தான்.

அமெரிக்க தாக்குதலுக்கு அனுதாபம் தெரிவித்ததும், மாவீரர் பேச்சும் மிகவும் மதிநுட்பமானதும் தூர திருஷ்டியானதுமாகும். ரஷ்யாவில் மழை பெய்தால் இங்கு குடைபிடிப்பதும், அமெரிக்காவின் ஆற்றலில் மெய்சிலிர்ப்பதும் என தம்மை ஒரு வரையறைக்குட்படுத்தி வலது-இடது எனவும், அதற்கு மேலால் அணிசாரா என பொய்முகம் காட்டி சார்ந்திருந்த அரசியல் வரலாறுகளை நாம் கண்டு வந்தோம். ஆனால் பாறாங்கல்லில் தலையை முட்டிக்கொள்ளும் முட்டாள் தனத்திலும், மலர் படுக்கை என மாயப்பொறியிட்டு கண்ணிவைக்கும் கயமைகளில் காலிடறி விழும் அடிமட்டத்தனமும் அற்ற ஒரே ஒரு விவேகமிக்க தலைமை புலிகள் இயக்க தலைமையே. எங்கே எப்படி எந்தக்காயை நகர்த்தினால் சூழல் களத்தில் வெற்றியடையலாம் என்பதைப் புரிந்து கொண்டு வித்தியாசமாக விவேகமாக செல்நெறிகளை செலுத்துவதனால்தான், வல்லாதிக்க வல்லூறுகளாலும், பிராந்திய பிசாசுகளாலும், உள்நாட்டு பேரினவாதிகளாலும், தமிழ் இன இருப்பை, தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை சிதைக்க முடியாதுள்ளது. மேற்கத்திய நலன், கீழைத்தேய நலன் என மாயைகளில் விழுந்து மடியாமல், தமிழ்த் தேசியத்தின் நலன் என்ன என்பது பற்றிய சிந்தனையே மேலோங்க வேண்டும். அது காலத்தின் கட்டாயமுமாகும்.

உலகவோட்டத்தையும், தமிழ்த் தேசியத்தின் அகபாவங்களையும், தமிழின அடக்குமுறைகளின் ஆழமிறங்களையும் புரிந்து கொண்டால் த. சிவராமின் கட்டுரை பலவீனமானதல்ல என்பதைத் தெரிந்து கொள்ளலாம். முதலில் அடிமைத் தனத்திலும் ஏன், எதற்கு என வினா தொடுக்காது அனைத்து அந்நிய குப்பைகளையும் சிரமேற் சுமந்து திரியும் மந்தபுத்தி தனத்தினின்றும் விடுதலை பெற வேண்டும். லெனினும், ஸ்டாலினும், கென்னடியும், லிங்கனும், காந்தியும், நேருவும் எமது உதடுகளில் உச்சரிக்கும் மந்திரங்கள் என மகிமைப் படுத்திய காலங்கள் கலைந்தோட வேண்டும்! ஆயிரமாயிரம் ஆண்டுகளின் முன்பே தனக்கென தனித்துவமான நாகரிகங்களைக் கொண்டு, சுய மரியாதையுடன் தன்மானங்கொண்ட இனமாக வாழ்ந்த தமிழினத்தின் வீரம் இன்னும் மாளவில்லை. இடை வந்த கார்மேகங்களை கலைக்க பல இக்கட்டான இடர்களை விலக்க, இன்றைய யதார்த்த நிலைகளை எண்ணி செயல்புரியாது, புரியா புதிர்களை புலம்பி, ஊர்போய் சேரா வழிகளை கூறுவது, எழுதுவது பொழுது போக்கு செயலாகும்.

*கோலை மலர், கேகாலை*

## தேசிய... 9ம் பக்கத் தொடர்ச்சி

ஏனெனில் தேசியத்தின் போராட்டத்தின் போது இணைக்கக் கூடிய வர்க்கங்களை இணைத்துச் செவ்வதே ஒரு போராட்ட தந்திரோபாயமாகும். ஆனால் இக்கூட்டு தனியே தமிழர்களை மாத்திரம் அடக்கிக் கொள்ளாது, சர்வ இனங்களையும் அடக்கிக் கொண்டதாக இருந்திருத்தல் வேண்டும்.

மேற்கு தேசங்கள் கொடுக்கவிருக்கும் அழுத்தங்களை சமாளிப்பதற்கு முழுமையாக ஒத்துழைப்பை கொடுக்க வல்லவர்கள் இடதுசாரிகளே. தேசிய வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுவர்கள் கூட தமது வர்க்கத் தேவை தீர்ந்த பிற்பாடு தமது நிலைப்பாட்டில் இருந்தே மாற்றங் கொள்வர் என்பதை எச்சரிப்பதில் என்ன தவறு இருக்கின்றது. முன்னாளில் ஊசலாடிய வர்க்கங்கள் திரும்பவும் தூய தேசியத்தினுள் தொடர்ந்தும் இருக்கும் என்பதில் கண்மூடிக் கொண்டு இருக்க முடியாது. தேர்தலுக்கு முன்னராக அமெரிக்க தூதரகத்தில் கூட்டு அமைப்பு சென்று பேச்சு நடத்தி விட்டு வந்திருக்கின்றது. இதில் அமெரிக்காவிற்கும் சம்மதம் இருந்திருக்கின்றது. இந்தக் கூட்டு தீவிரவாதத்தை அகற்றி மிதவாதிகளுக்கு ஆட்சியைக் கொடுக்கும் தந்திரோபாயத்தில் அமைந்து கொண்டதாகும். இவர்கள் கூட்டு அமைத்துக் கொண்ட போது முழு இலங்கை மக்களின் நலத்தை பிரதிபலிக்கின்ற அரசியல் பாதையை அவர்கள் தெரிவு செய்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் குறுகிய (புலிகளிடம் நற்பெயர்பெற) லாபத்தைக் கொண்டே செயற்பட்டனர்.

இவை மாத்திரம் அல்ல சமூகத்தில் தொடர்ந்தும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் சாதியம் என்ற பேய் இருக்கின்ற சமூக அமைப்பில் முழுமையாக அற்றுப் போய்விடாது. மாறாக பொருளாதார உற்பத்தி உறவில் மாற்றம் ஏற்படுத்தப் பட வேண்டும். அதன் மூலமே சாதியத்தையும் போக்கிக் கொள்ள முடியும். ஆனால் இடதுசாரிகளின் மலட்டு தனத்தினால் அல்ல. ஒவ்வொரு போராட்டத்தின் போது ஒவ்வொரு வர்க்கச் சிந்தனை வெற்றி பெற்றுக் கொள்வது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அவ்வாறே 1970 பின்னர் முதலாளித்துவ தமிழ் தேசிய சிந்தனை வெற்றி பெற்றுக் கொண்டது. இந்தச் சிந்தனையானது சாதியத்தை போக்க வேண்டிய தேவை அந்த வர்க்கத்திற்கு இருக்கவில்லை. அத்துடன் சாதியத்தை அரசியலாக்கி அதில் காலங்கடத்துவது இடதுசாரி அரசியல் அல்ல. சாதியத்திற்கு எதிரான போராட்டமே ஒரு முழுமையான தமிழ் தேசிய இனத்தை உருவாக்கிக் தந்தது என்பதை மறைப்பது சமூக வளர்ச்சிப் போக்கை மறுதலிப்பதாகும். ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்தின் போதும் வர்க்கத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுக் கொண்டு செல்கின்றது. சாதியத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் தமிழ் தேசிய இனத்தை உருவாக்க வழிவகுத்தது. தேசியம் வெற்றிபெற்ற பின்னராக தனது பொருளாதார உற்பத்திக்கு ஏற்றவாறாக சாதியத்தையும் தனக்குள் உள்ளடக்கிக் கொண்டது.

தமிழ் தேசியம் எதிர்க்கொள்ளும் பிரச்சினைகள் பல இருக்கின்றன. குறிப்பாக மேற்கு தேசங்களின் அழுத்தம் என்னும் போது சமாதானப்படை, யுத்தத்தின் போது மீறப்பட்டதாக கூறப்படும் மனித உரிமைகள், ஆயுதங்களை களைவது, (ஐ.நா) மேற்கு தேசங்களின் நிர்வாகம் அறிமுகப்படுத்தப்படலாம், அன்னிய நிறுவனங்கள் தேசத்தின் பொருளாதாரத்தினை திட்டமிடுவதை, தலையிடுவதை எதிர்க்குமா? பெரு நிறுவனங்களின் ஆதிக்கத்தை எதிர்த்து போராடுமா? சொந்த பொருளாதாரத்தை தீர்மானிக்கக் கூடிய உரிமைக்காக போராடுமா என்பதை பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும். ஆனாலும் ஏற்படப் போவது என்னவோ பெரும் நெருக்கடிக்கு விட்டுக் கொடுக்கும் நிலையேயாகும். ○

## முஸ்லிம்...

### 10ம் பக்கத் தொடர்ச்சி

அத்தோடு விடுதலைப் புலிகள் பகிரங்கமாக முஸ்லிம் பிரதேசங்களிலும் நடமாடத் தொடங்கிவிடுவர். அலுவலகங்களைத் திறந்து நீதிவான்களாக மாறிவிடுவர். ஏற்னெவே அரச நிறுவனங்களும் நீதித்துறையும் ஊழல்கள் நிறைந்து பின் கதவால் செயற்படும் நிலையில் மக்களின் முறைப்பாட்டுக்கு புலிகளின் அலுவலகங்கள் பயனுள்ள மாற்று வழிமுறையாய் அமைந்து விடும். முஸ்லிம்களும் புலிகள் தமக்கிழைத்த அநியாயங்களை மறந்து முஸ்லிங்களது தனித்துவம், இறைமை, பாதுகாப்பு எனபன பற்றிய எத்தகைய உடன்பாடுகளுமின்றி அவர்களிடம் சரணடைந்து ஐக்கியமாகி விடுவார்கள்.

புலிகளது முஸ்லிம்களைப் பற்றிய நிலைப்பாடு தெளிவற்ற நிலையில் முஸ்லிம்களது உரிமைகளுக்காகப் போராடுவதாகக்கூறும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொங்கு தமிழ் நிகழ்வுகளில் கலந்து கொண்டு அறிக்கைகள் அனுப்பியும் புலிகளை கண்ணை மூடிக்கொண்டு அங்கீகரித்திருக்கையில் பொதுமக்களுக்கு என்ன தான் செய்ய முடியும்? வடக்கு முஸ்லிம்களின் பலர் மீண்டும் வெறுங்கையோடு துரத்தியடிக்கப்பட மாட்டோம் என்பதற்கான எத்தகைய உத்தரவாதமுமற்ற நிலையில் மீண்டும் வடக்கில் குடியேறத் தொடங்கி விட்டனர். இவ்வாறே கிழக்கிலும் முஸ்லிம்கள் சமாதானத்தின் பெயரால் ஐக்கியமாகி விடுவர்.

முஸ்லிம் சமூகம் மீண்டும் ஐக்கியப்பட்டு தமக்கான உரிமைகளையும் தனித்துவத்தையும் பற்றிச் சிந்திக்க வேண்டுமானால் அது மீண்டுமொரு முறை தமது சொந்த வாழிடங்களிலிருந்து துரத்தியடிக்கப்பட்டு பலர் கொலை செய்யப்பட்டு உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டு தமது வணக்க வழிபாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட வேண்டும். அரசியல் ரீதியாக நிறையவே பாடம் படித்துள்ள புலிகள் மீண்டும் அத்தவறுகளை முஸ்லிம்கள் மீது இழைக்கப் போவதில்லை. எனவே அத்தகைய பிரச்சினைகள் முஸ்லிம்களுக்கேற்படாவிட்டால் முஸ்லிம் சமூகம் தனக்கு வேறு பிரச்சினைகள் இருப்பதாக அலட்டிக் கொள்ளப் போவதில்லை. கல்வி, கலாசார, நிர்வாக, சுகாதார, பொருளாதார, புவியியல், காணி பிரச்சினைகளைப் பற்றி அது பெரிதாக சிந்திக்கும் நிலையில் இல்லை. ஏனெனில் முஸ்லிம் காங்கிரஸ் அரசின் பங்காளிக்கட்சியாக மாறியதன் பின்பு அமைச்சுப் பொறுப்புகளையும் உயர் அரச பதவிகளையும் வாகனங்களையும் பெற்று கட்டிடங்களையும் வீதிகளையும் செப்பனிட்டு, தமிழ்க் கிராமங்கள் சோவையிழந்து காணப்படுகையில் முஸ்லிம் கிராமங்களை அபிவிருத்தி செய்து செழிப்பாக மாற்றி இருக்கையில் அவைகள் பற்றிய சிந்தனையிலேயே தலைமைத்துவமும் அரசியல் பீட உறுப்பினர்களும் பிரதேச மட்ட மத்திய குழு உறுப்பினர்களும் காணப்படுகையில் உரிமைகளைப்பற்றி முஸ்லிம் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்கள் எவ்வாறு சிந்திக்க முடியும்.

எனவே முஸ்லிம் சமூகத்தின் காலை வாரி விடப்போவது புலிகளோ வேறு யாருமோ அல்ல அது முஸ்லிம் காங்கிரஸ் தான். எனவே முஸ்லிம்களின் தலை விதியைத் தீர்மானிக்கும் பொறுப்பை வெறுமனே தோற்றுப்போன வெற்றுப்பாத்திரமான முஸ்லிம் காங்கிரசின் கைகளில் மாத்திரம் ஒப்படைத்து விட்டு ஒரு மூலையில் முஸ்லிம் சமூகம் உட்கார்ந்திராது முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை வேறு ஒரு மூலத்திலிருந்து சிந்திப்பது மிகவும் அவசியத் தேவையாகும். ○

நிகரி
NIHARI
83, பிலியந்தல்ல வீதி, மஹரகம
தொலைபேசி : 851672, 851673 தொலைமடல் 851814
மின்னஞ்சல் : nihari02@yahoo.co.uk

Registred as a Newspaper

## விடுதலையின் பெயரால் ஒரு கோரிக்கை!

தமது தாயகப் பிரதேசத்தில் வாழ்வதற்கு முஸ்லிம்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அவர்கள் தமது தாயகப் பிரதேசத்தில் வாழ்வதற்கு உரித்துடையவர்கள். உரிமை உடையவர்கள். அவர்கள் தமது பிரதேசங்களில் மகிழ்ச்சியாக வாழ்வதை உறுதிப்படுத்திக் கொள்ளும் என்று லண்டன் பீ.பீ.சிக்கு அளித்த பேட்டியொன்றில் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கிறார்.

நிகரியில் திரும்பத்திரும்ப முன்வைக்கப்பட்ட, வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பாக எழுதப்பட்ட கோரிக்கைகட்கு சாதகமாகக் கிடைத்த ஒரு பதிலாக இந்தப் பதிலை எடுத்துக் கொள்ள முடியும்.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தமது இருப்பிடங்களுக்கு மீளச் சென்று, பழையபடி சுதந்திரமாக வாழ்வது உண்மையில் புலிகளின் கைகளில் தான் தங்கியிருக்கிறது என்பதை பல முஸ்லிம் அமைப்புக்கள் சுட்டிக்காட்டி வந்தன. நிகரியும் இந்தக் கருத்தில் உள்ள உண்மையை வலியுறுத்தி எழுதியிருந்தது.

தமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றி முழுமையான ஒரு வெற்றியாக, அமைய வேண்டுமானால், அந்த வெற்றி வடக்கு கிழக்கை தமதும் தாயகமாகக் கொண்ட முஸ்லிம் மக்கள் அங்கே சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை வழங்கப்படுவது அவசியமான ஒன்று என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒரு விடயமல்ல.

இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றிலே முஸ்லிம்கள் அதுவும் குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம்களும் தொடர்ந்து ஒடுக்கப்பட்ட இன்னொரு தேசமாக திரண்டுள்ள இந்த மக்கள் தமிழ் மக்களின் தேசவிடுதலைக்கான போரில் ஏகோபித்து நின்று செயற்பட வேண்டியவர்கள். ஆனால் துரதிஷ்டவசமாக தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான நல்லுறவு கடந்த ஒன்றரைத் தசாப்த காலத்தற்கு மேலாக மோசமான பிளவுக்கு உள்ளாகி வந்திருக்கிறது. இது தமிழ் முஸ்லிம் மக்களை ஒடுக்கும் சிங்களப் பேரினவாதத்திற்கும். பலம் சேர்க்கிற ஒன்றாக இருந்தது மட்டுமன்றி, ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தையும் பலவீனமாக்கி வந்திருக்கிறது.

சிங்களப் பேரினவாத அரசுகளதும், அதன் படையினதும் திட்டமிட்ட பிரித்தாளும் தந்திரம் தமிழ் முஸ்லிம் உறவை மேலும் பிளவு படுத்துவதற்கு காரணமாக இருந்திருக்கின்றது என்ற போதும், தமிழ் அரசியல் தலைமைத்துவங்களின் கடந்தகால அரசியல் தவறுகளும் முக்கிய காரணமாக இருந்ததை மறுக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் தொடர்பாக கையாண்ட தவறான அணுகு முறை முஸ்லிம் தமிழ் உறவு நல்லுறவாக வளர்வதற்கு தடையாக இருந்து வந்திருக்கிறது. முஸ்லிம்கள் தரப்பில் இந்த உறவை நல்லுறவாக்க எடுத்த பல முயற்சிகள் எவையும் பயனுள்ள விதத்தில் கைகூடவில்லை.

ஆயினும் கடந்த சிலகாலமாக முஸ்லிம்கள் தொடர்பான தமது அணுகுமுறையில் மாற்றம் வேண்டும் என்கிற உணர்வு விடுதலைப் புலிகளிடையே வலுப்பெற்று வந்ததற்கான அறிகுறிகள் தென்பட்டன.

இப்போது தமிழ்ச் செல்வன் அவர்கள் கூற்று இந்த நல்ல மாற்றத்தினை தெளிவாக வெளிப்பத்துவதாக அமைந்திருக்கிறது.

இது ஒரு முக்கியமான, அதுவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான சமாதான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு சூழலில் விசேட முக்கியத்துவம் கொண்டதான மாற்றமாகும். தமிழ்ச் செல்வன் அவர்களது இந்த அறிவிப்பு முஸ்லிம் மக்களிடையேயும், தமிழ் மக்களிடையேயும் பலத்த வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இந்த முடிவை நிகரி வரவேற்கிறது.

சூழலும் ஒரு சின்ன வேண்டுகோள்.

இந்த அறிவிப்பு, பேட்டியொன்றிற்காக சொல்லப்பட்ட ஒன்றாக அல்லாமல், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த, தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு அவசியமான ஒரு விடயம் என்ற அடிப்படையில், இன்னும் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும்.

அதாவது, வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்வதற்கும். தமது பழைய, சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கும் புலிகள் தடையாக இருக்கப் போவதில்லை, அவர்கள் தாம் விரும்பும் பட்சத்தில், விரும்பும் காலத்தில் வந்து குடியேறலாம் என்ற அறிவிப்பை புலிகள் உத்தியோக பூர்வமாக தெளிவாக வெளியிட வேண்டும். முஸ்லிம் மக்களிடையே நிலவக் கூடிய சந்தேகங்கள் அச்சங்கள் அனைத்தையும் போக்கி, அவர்கள் மகிழ்வுடன் தமது இருப்பிடங்களை நோக்கி மீள்வதை இது உறுதி செய்வதாக அமையும்.

தமிழ் மக்களின் இன்றைய தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு இது மேலும் பலமூட்டுவதாக அமையும்.

தமிழ்ச் செல்வன் அவர்களின் அறிவிப்பை வரவேற்றுப் பாராட்டும் அதேவேளை இந்த அறிவிப்பை புலிகள் செய்யவேண்டும் என்று நிகரி, தமிழ் முஸ்லிம் மக்களின் விடுதலையின் பெயரால் கோரி நிற்கிறது.

## புளொட்டின் அக்கறை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை அரச படையினருடான தமது தொடர்புகளை புளொட் அமைப்பு படிப்படியாக துண்டித்து வருகின்றது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் முன்னாள் தமிழ்ப் போராளிக் குழுக்களிடமிருந்து ஆயுதக் களைவை மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாடு படையினருக்கு ஏற்பட்டது. இதனால், அண்மையில் புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப் (வரதர் அணி) ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளை அழைத்து மாவட்ட கட்டளையதிகாரி லெப். கேணல். வி.ஆர். எல். அந்தோனிஸ் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாகவும் ஆயுதக்களைவை மேற்கொள்வது தொடர்பாகவும் விளக்கினார்.

இதனையடுத்து 48 மணி-நேரத்தில் அந்தந்த அமைப்புக்-களிடம் உள்ள ஆயுதங்களின் விபரங்களை ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக 1993ம் ஆண்டுமுதல் புளொட் அமைப்பு மட்டக்களப்பு நகரில் மேற்கொண்டு வந்த இரவு நேர ரோந்தை நிறுத்திக்கொண்டது. படிப்படியாக வவுணதீவு மற்றும் செங்கலடி கறுத்தப்பாலம் ஆகிய இடங்களில் மேற்கொண்டு வரும் சோதனை நடவடிக்கைகளையும் நிறுத்தப் போவதாக புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக்காலமாக புலிவேட்டையில் அக்கறை கொண்டிராத புளொட் அரசியல் ரீதியாக தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் நோக்குடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தன்னை இணைத்துக் கொள்ள அக்கறை காட்டி வருவது தெரிந்ததே.

இந்த நிலைப்பாடு புளொட் அமைப்பின் பரிணாம வளர்ச்சியின் ஒரு கட்டமா அல்லது காலத்தின் தேவைக்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் செயற்பாடா?

புளொட் அமைப்பின் கடந்த காலச் செயற்பாடுகளை அவதானித்து வருபவர்களுக்கு இந்தச் சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாதது. புரட்சிகரக் கருத்துக்களுடன் அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்-தெறியப் புறப்பட்ட இவ்வமைப்பு தனது உறுப்பினர்களையே பெருமளவில் அடக்கு முறைக்கு ஆளாக்கிக் கொன்றொழித்தமை வரலாறு.

'தத்துவமே ஆயுதத்தை வழிநடத்த வேண்டும்' எனக் கூறிவந்த இந்த அமைப்பு வன்முறை மீது காதல் கொண்டு செயற்பட்ட விதத்தை அண்மைக் காலம் வரை தமிழ் மக்கள் தமது கண்களால் கண்டு வந்துள்ளனர்.

எது எவ்வாறெனினும் இராணு-வத்தினருடன் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிரான தனது செயற்பாடுகளைப் புளொட் கைவிடத் தீர்மானித்தது ஒரு முக்கியமான விடயமாகும்.

## சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்கவும்!

மன்னாரில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களே சுதந்திரமாக நடமாட ஆரம்பித்துள்ள நிலையில் மக்கள் மீதான இராணுவத்தினரின் கெடுபிடிகள் குறைவடைவதாகத் தெரியவில்லை.

அதுவும் குறிப்பாக விடுத-லைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிப் பகுதிகளில் இருந்து உயிலங்குளம் ஊடாக மன்னார் நகருக்கு வரும் பிரயாணிகள் உயிலங்குளம் முன்னரங்க காவலரண் பகுதிகளில் வைத்து இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களால் கடும் விசார-ணைகளுக்கு உட்படுத்தப்படு-கின்றனர்.

விடுதலைப் புலிகளின் முக்கியத்தர்களின் அலுவலகங்கள் வன்னிப்பகுதிகளில் எவ்வெப் பகுதிகளில் உள்ளன? உள்ளூர் பொறுப்பாளர்களின் பெயர்கள் என்ன? புலிகள் இன்னும் வயதுக்-கட்டுப்பாடு விதிக்கின்றனரா? வரி அறவிடப்படுகின்றதா? போன்ற பல்வேறு வினாக்களால் பிரயாணிகள் துளைத்தெடுக்கப்படுகின்றனர். இவ்-வாறான விளக்கங்களுக்கு பதில் தெரியாது என்று யாரும் கூறினால் கடுமையாக மிரட்டப்படுகின்றனர்.

இவ்வாறான வினாக்களை இராணுவப் பகுதியில் நடமாடும் புலி உறுப்பினர்களிடையே கேட்க வேண்-டியது தானே ஏன் எம்மிடம் கேட்டு தொல்லைப்படுத்துகின்றீர்கள் என மக்கள் விசனப்படுகின்றனர்.

## உண்மை தானா?

இலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்ற பாரிய குளங்களில் ஒன்று மன்னார் முருங்கன் பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டுக்கரைக்குளம் ஆகும். இக்குளத்தின் அணைக்-கட்டுப்பகுதியில் ஆறு இடங்களில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டு அவை பொறியியலாளரால் படம்பிடிக்கப்பட்டு அதிகாரிகளுக்கு அது காட்டப்பட்டு ஒரு வருட காலமாகியும் இதுவரை அவ்வெடிப்புக்களுக்காக ரூபா 20 இலட்சம் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிலையிலும் இது வரையில் திருத்த வேலைகள் நடைபெறவில்லை. கடும் மழை பெய்து அணைக்கட்டு உடையு-மானால் அருகிலுள்ள ஆயிரக்-கணக்கான குடும்பங்களின் நிலை என்ன?

முருங்கன் பகுதியில் அமைந்திருக்க வேண்டிய கட்டுக்கரை குளத்திட்ட முகாமையாளர் காரியாலயம் மிகவும் தொலைவில் அதாவது மன்னார் நகர்ப்பகுதியில் அமைந்திருப்பதும் ஒரு காரணம் என்கின்றனர் அணைக்கட்டுக்கு அருகாமையில் வசிக்கும் மக்கள். உண்மை தானா?

## என்னே புரிந்துணர்வு!

அரசுக்கும் விடுதலைப் புலிக-ளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரும் கூட அரசபடையினருக்கு குறிப்பாக புலனாய்வுப்பிரிவினர்க்கு புரிந்-துணர்வு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய-வில்லை.

அண்மையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் விடுதலைப் புலிப் போராளிகள் இருவர் அனுமதிக்கப்பட்டிருந்தனர். சத்திர சிகிச்சை செய்வதற்காக அனுமதிக்கப்பட்டிருந்த அவர்களை இராணுவ புலனாய்வுப்பிரிவினரும் இவர்களுடன் இணைந்து செயற்படும் குமார், ரதீஷ் எனும் இரண்டு ஈ.பி.டி.பி ஊறுப்பினர்களும் சென்று அச்சுறுத்தியுள்ளனர்.

சயனைட் வில்லையுடன் தயாராக இருந்த இரண்டு விடுதலைப் புலிகளும், பேச்சுவார்த்தை குழம்பி-விடக்கூடாது என்பதற்காக தமது நோயைப் பற்றிக் கூடக் கவலைப்-படாமல்வைத்திய சாலையை விட்டுச் செல்ல வேண்டியேற்பட்டது

## பொலிஸ் விசாரணை!

கடந்த வருடம் ஜூலை 17ம் திகதி மட்டக்களப்பு செய்தியாளர் ஜி. நடேசன் மாவட்ட இராணுவ பதில் கட்டளையதிகாரியினால் படைத்-தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டமை தொடர்பாக பொலிஸார் இப்போது விசாரணை-களை நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக கரை-கடந்த பத்திரிகையாளர் அமைப்பு (ஆர்.எஸ்.எப்) க்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்தே இவ்விசார-ணைகள் நடைபெறுகின்றன. மேற்படி விடயம் தொடர்பாக ஆர்.எஸ்.எப் ஐக்கிய நாடுகள் சபையின் சித்திர-வதைகளுக்கு எதிரான சர்வதேச அமைப்பிடம் புகார் தெரிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து விடுக்-கப்பட்ட பணிப்புரிமைக்கமைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் (குற்றத்தடுப்பு/மனித உரிமைகள்) எச்.எம்.பி.ஜி. மேற்படி விசாரணை-களை மேற்கொண்டுள்ளார்.

நடைபெற்ற சம்பவம் தொடர்பாக ஜி. நடேசனிடமும் பொலிஸார் வாக்குமூலம் ஒன்றினைப் பெற்றுள்-ளனர்.

## புலனாயும் படையினர்!

நிரந்தர யுத்த நிறுத்தத்தின் பின் போர்கருவிகள் ஓய்வு நிலைக்கு வந்துள்ள போதிலும் தகவல் சேகரிப்பதனை படையினர் நிறுத்தியதாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு தினமும் செல்லும் நபர்களை அவதானிப்பதிலும், வாகனங்களில் செல்வோரின் விபரங்களைத் திரட்டுவதிலும் புலனாய்வுப் பிரிவினர் அதிக அக்கறை செலுத்தி வருகின்றதைக் காணமுடிகின்றது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஊடகவிய-லாளர்களின் நடமாட்டங்களும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

இப்பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கறன்ரி) நிறுவனத்தால் மஹரகம பிலியந்தல வீதி 83ஆம் இலக்க ராவய அச்சகத்தில் 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது